NAVA LAW
Professional Corporation
Real Estate | Corporate | Commercial | Immigration | Family | Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

தாயகத்திலும் கனடாவிலும் வெளிவரும்

# ஈகுருவி

ekuruvi.com

iNFORCE LIFe Financial Services Inc.
WE ARE HIRING
416.909.0400
www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough

சிறகு-04 February 2016 இணைய மாத இதழ் பறப்பு-02



- ‘குடி’மக்களுக்கு செங்கம்பளம்
- ‘சூது கவ்வும்’ ஆனாலும்...
- தமிழீழம் சாத்தியமில்லை ஏன்?
- ஸ்டாலினின் முடிவு



## இகுருவி விழா ஏப்ரல் 03, 2016

ALL YOUR MORTGAGE NEEDS
Gini Annarasa
Mortgage Broker
416 830 3241
MORTGAGE ALLIANCE The Guardian
80 Nashdene Rd. Unit D221-222, Toronto ON M1V 5K4
Independently Owned and operated Lic# 1252

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances. RRSP | RESP
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Foresters

MRI SUPER
RENOVATIONS AND PAINTING
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
TIME FOR SOLUTIONS
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.

Tam Sivathasan
Broker of Record
416.804.3443
MEDICAL & PROFESSIONAL CENTRE
AT MARKHAM & FINCH
EXCLUSIVE
800 SQ. FT AND UP
2015 FALL OCCUPANCY
CALL FOR INFORMATION
VEEDU REALTY INC. BROKERAGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# இணைந்தே கொண்டாடுவோம்.

கனடா போன்ற ஒரு பலவின சமுதாயம் வாழும் நாட்டில் அமைப்புக்கள் எதற்காக இருக்கின்றன? குறிப்பாக தமிழ் அமைப்புக்கள் எதற்காக இருக்கின்றன? அல்லது எப்படி இருக்க வேண்டும்?

கனடாவின் தமிழ்ச் சமூகம் போன்றதொரு சிறிய சமூகம் கனடா போன்றதொரு பெரும் பலகலாச்சார நாட்டில் எதிர் கொள்ளும் சவால்கள் மிகப் பெரியது. கனடவில் எமது நிலை வேரூன்றி வளர்ந்துவிட்ட பெரும் மரங்களின் கீழ் வளரும் சிறிய தாவரங்கள் போன்றது. வேரூன்றி நிற்கும் பெரு மரத்தின் நிழல் மட்டுல்ல, மரத்தின் வேரும் எம் வளர்ச்சியை மட்டுப்படுத்திவிடும் என்பதை நாம் மறந்துவிடலாகாது. என்னதான் ஒரு சமூகமாக நாம் வளர்ந்தாலும் ஏற்கனவே பெருவிருட்சமாக எம்மையும் தாண்டி நிற்கும் சமூகங்களின் வளர்ச்சியையும் மீறி வளர்வது என்பதுகூட நடை முறைச் சாத்தியமாக இருக்காது.

இதைப்புரிந்து நம் வளர்ச்சியை சீராக அமைத்துத் தரவே நமக்கு அமைப்புக்கள் தேவை. தமிழ் மக்களுக்காக எந்தவொரு அமைப்பு அமைக்கப்பட்டாலும் அந்த அமைப்பு எந்தவொரு தனித்துவங்கொண்ட நோக்கத்திற்காக அமைக்கப்பட்டாலும் அதன் அடிப்படைக் குறிக்கோள் மக்கள் சேவையே ஆகும்.

இந்த இடத்தில்தான் பலர் மனத்திலும் ஓர் கேள்வி எழுகிறது. மக்களுக்கான அமைப்புக்கள் என்று சொல்லப்படும் எல்லா அமைப்புக்களுமே அமைப்பு ரீதியாக தனித்துவமாக ஜொலிக்க முனைவது ஏன்? அமைப்புக்கள் அமைக்கப்படுவதன் நோக்கத்தில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தமது இயங்குநிலைக் கொள்கைகளை அவ் அமைப்புக்கள் வேறுபடுத்தி வைப்பதன் காரணம் யாது? இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால், மக்கள் சேவைதான் அடிப்படைக் குறிக்கோள் என்று சொல்லும் அமைப்புக்களினிடையே வேற்றுமைகளும் போட்டி மனப்பான்மையும் ஏன், எதனால் ஏற்படுகிறது?

பதில் சுலபமானது. அவற்றிற்கு தம் நோக்கங்கள் குறித்த தெளிவு இல்லை என்பதே இதற்கான பதிலாகும். எந்தவொரு அமைப்பிற்கும் தான் அமைக்கப்பட்டதன் நோக்கம் குறித்த தெளிவு இருந்திருக்குமாயின் அவற்றின் இயங்குநிலைக் கொள்கைள் எப்போதுமே அந்த நோக்கத்தைப் பற்றிக் கொண்ட இறுக்கமான பாதையாக மட்டுமே இருக்கும். மற்ற அமைப்பின் பாதையில் குறுக்கிடப் போகாது. போட்டி மனப்பான்மைக்கும் அங்கு இடம் இருக்காது.

ஆனால் அப்படியான நிலைமை நமது அமைப்புக்களிடையே இல்லையே என்ற ஆதங்கமும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறது.

அப்படியானால் நோக்கங்களில் தெளிவு கொண்ட அமைப்புக்கள் நம்மிடையே இல்லவே இல்லையா என்ற கேள்வி சமூக நோக்கர்களிடையே எழுவது இயற்கையே. விருப்பு வெறுப்பற்று ஆராய்ந்து பார்த்தால் நம்பிக்கை நட்சத்திரங்களாக சில அமைப்புக்கள் எம் முன்னால் இருப்பதையும் நாம் காணக்கூடியதாகவே இருக்கிறது. அதில் முதன்மை கொண்ட அமைப்பாக கனடா தமிழ் வர்த்தக சம்மேளனத்தைக் குறிப்பிடுவேன்.

கனடா தமிழ் வர்த்தக சம்மேளனம் தன் நோக்கங்களில் தெளிவாக இருக்கிறது. அதன் இயங்குநிலைக் கொள்கைகள் அமைப்பின் நோக்கத்தின் சீரிய தன்மையை உணர்ந்ததாகவும் கவனமாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு தமிழ் அமைப்பின் பாதையிலும் தன் பாதை குறுக்கிடாதவண்ணம் கவனமாக அதன் இயக்கம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. காலத்துக்கேற்றவாறும், அதன் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களின் இயல்பிற்கேற்றவாறும் அமைப்பின் செயல்திட்டங்களின் வேகம் அமைந்திருக்கிறது. மொத்தத்தில் ஒரு சீரிய அமைப்பிற்குரிய அத்தனை குணம்சங்களையும் கனடா தமிழ் வர்த்தக சம்மேளனம் கொண்டிருப்பதாகவே எனக்குப் படுகிறது.

இருப்பினும் சம்மேளனத்தின் பாதையில் சில தடைக்கற்கள் ஆங்காங்கே இருப்பதையும் நாம் காலத்திற்குக் காலம் அவதானிக்கிறோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனாலும் ஒரு ஆறுதல். தடைக்கற்களையும் படிக்கட்டுக்களாக மாற்றிக்கொள்ளும் சிறப்பும் ஆளுமையும் உள்ள தலைமைத்துவமும் வர்த்தக சம்மேளனத்திற்கு கிடைத்துவருவதையும் நாம் அவதானிக்கிறோம். தன் பணியின் கனம் அறிந்து நடக்கும் நிர்வாகக் குழுக்கள் இவ்வமைப்பிற்கு கிடைத்து வருவது தற்செயல் நிகழ்வு அல்ல. இன்னும் சொல்லப்போனால், தலைமைத்துவ நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களது பதவிக்காலம் இன்னும் அதிகரிக்கப்பட்டிருக்கலாமே என்ற ஆதங்கத்தை தரும் அளவில் இதுவரை பதவியில் இருந்தவர்களது பணி வெளிப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும்.ஆரம்பித்த தலைவர்கள் முதல் இன்றுவரை குறிப்பிடக் கூடிய தலைவர்களையும், பின்பு அவர்களது சமூக சேவையும் யாரும் குறைத்து எடைபோட முடியாது.

நோக்கதில் தெளிவு, வெளிப்படைத்தன்மை, ஜனநாயக வழியுடன் கூடிய சுதந்திரப் போக்கு, புதியவர்களை வரவேற்கும் பக்குவம், என்பனவற்றைக் கொண்ட எந்த ஒரு அமைப்பையும் வெற்றிகரமாக அமைப்பாக நாம் குறிப்பிடலாம். அந்த வகையில் கனடா தமிழ் வர்த்தக சம்மேளனம் ஒரு வெற்றிகரமான அமைப்பு என்பதில் சந்தேகமில்லை.

2010 ஆம் ஆண்டு கனடாவிற்கு வந்த காலத்தில், Monsoon Journal எனும் பத்திரிகையின் விளம்பரத்தை பார்த்து , அவ்வமைப்பின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டேன். இன்று எமது வளர்ச்சியில் வர்த்தக சம்மேளனம் பெரும் பங்குவகிக்கின்றது.

இவ்வாண்டில் 25 ஆண்டுகளை கடந்து பயணிக்கும் கனடா தமிழ் வர்த்தக சம்மேளனம் என்ற மாபெரும் கனடிய தமிழ் சமூக அமைப்பினை இகுருவி வாழ்த்துகிறது. அதன் அடுத்த அடுத்த வெற்றிப்படிகளையும் இணைந்தே கொண்டாடுவோம் என்று உறுதியும் கூறுகிறது.

## உள்ளடக்கம்

குடி மக்களுக்கு செங்கம்பளம் விரிக்கின்றது ஒன்றாறியோ மாகாண அரசு - நக்கீரன்
அரசாங்கத்திற்கு விரோதமாக எழுத பயப்படக் கூடாது ? -இகுருவி யாவும் நானும்
வறுமை எதிர்ப்பு முயற்சியில் இணையும் தமிழ் பல்பொருள் அங்காடிகள்
ஸ்டாலினின் முடிவு - சிவதாசன்.
கடந்த 100 நாட்கள் - இலங்கதாஸ் பத்மநாதன்
தமிழீழம் சாத்தியமில்லை ஏன்? - இந்திரன் ரவீந்திரன்
ஒரு அகதி குறித்த சிந்தனையோடு தான் நான் இருகின்றேன் - மாயா
பேஸ்புக்கின் அபாயகரமான திட்டம் - சுகந்தன்
தொலைபேசி மையங்கள் பொதி சுமக்கபோவது யாரு? - சிவமணி
சையிட் அல் ஹூசைன் வருகை உணர்த்திச் சென்றவை! - புருஜோத்தமன் தங்கமயில்
பூர்வீககுடி மக்களின் பண்பாட்டு அபகரிப்பு - எஸ் . ராஜமோகன்
ஐரோப்பா நோக்கிய அகதிக் குடியேற்றம் - அரவிந்தன்
ஹாப்பரின் மரபை மாற்றுகின்றாரா ரூடோ? - பத்மன்
அஜித் சபாரட்ணம் என்ற ஒரு தனிநபரின் முகத்திற்காகத் தான் பல லட்சம் அனுசரணையா ? - அஜித் சபாரத்தினம் பதில்
இலங்கை ஐநா மனித உரிமை ஆணையாளர் மொழியாக்கம் - சுதர்சன்
புலம்பெயர் கலைஞர்கள் படைப்பாளிகள் உயித்தெழ வேண்டிய காலம் இது - இகுருவிக்காக பாரிசிலிருந்து சுதன் ராஜ்
இந்த வருடத்துக்குள் தீர்வு வராவிட்டால் அது வரவே வராது - சுமந்திரனுடன் ரமணன் செவ்வி
சிறிய நெருக்கடியும் மியூனிச் இணக்கப்பாடும் மோதல்கள் நிறுத்தப்படும் எனும் மையை - சதிஸ் கிருஸ்ணபிள்ளை
உயிர்ப்பு பெண்கள் பட்டறையின் உயிர்ப்பு-5
"சூது கவ்வும்" ஆனாலும்? -எஸ். ஆர்
ஆடலுடன் பாடலைக் கேட்டு : 7 - ஆனந்தபிரசாத்
பிள்ளையின் உளவளர்ச்சியில் பெற்றோரின் நெறிப்படுத்தல் - பேராசிரியர் இ.பாலசுந்தரம்
காலண்டர் உருவாகிய வரலாறு - எஸ்.ஆர்.ராஜபாலன்
கனடாவின் வரலாறு - குரு அரவிந்தன்
கனடாவின் எண்ணை வளம் என்னதான் உண்மையில் நடக்கின்றது - குயின்ரஸ் துரைசிங்கம்
சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே? - ராகவி
மீகுருவி ஐயாவின் புகைபடங்கள்

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ekuruvi Night 2016. April 3 2016 அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 100 நாட்கள்





கனடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்
கரி ஆனந்தசங்கரியுடன் இகுருவிக்காக இலங்கதாஸ் பத்மநாதன்

அகதியாக புலம்பெயர்ந்த ஒரு நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவது அனைவருக்கும் கிடைக்கும் சந்தர்ப்பமல்ல.

கனடாவில் அந்த வாய்ப்பு கிடைத்த இலங்கைத் தமிழர் கரி ஆனந்தசங்கரி.

கடந்த வருடம் நடைபெற்ற கனடாவின் 42ஆவது பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி 184 ஆசனங்களை வெற்றி கொண்டது. தேர்தலை எதிர்கொண்டபோது 36 ஆசனங்களை மாத்திரம் தன்னகத்தை கொண்டிருந்த கட்சியின் தலைவர் ஜஸ்டின் ரூடோ தனது கட்சியின் ஆசன எண்ணிக்கையை ஒரு தேர்தலில் 148ஆல் அதிகரித்தார்.

இந்த அதிகரிப்பில் முதல் தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்களின் எண்ணிக்கை அதிகம். இதில் ஒருவர் தான் தமிழ் வழக்கறிஞரான சத்தியசங்கரி ஆனந்தசங்கரி என்ற இயற்பெயர் கொண்ட கரி ஆனந்தசங்கரி.

1980ஆம் ஆண்டுகளில் தனது தாயாருடன் இலங்கையில் இருந்து அயர்லாந்திற்கு புலம்பெயர்ந்த கரி ஆனந்தசங்கரி, 1983 ஜூலையில் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து அந்த வருடத்தின் இறுதியில் கனடாவை வந்தடைந்தார்.

ஒரு வழக்கறிஞராகவும், மனித உரிமை ஆர்வலராகவும் உள்ள கரி ஆனந்தசங்கரி கனடாவின் ஆளும் கட்சியின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

2006ஆம் ஆண்டு ஆட்சியை இழந்த லிபரல் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்து 100 நாட்கள் கடந்துள்ளன.

இந்த 100 நாட்களை கனடாவின் ஆளும் கட்சியின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினான கரி ஆனந்தசங்கரி எவ்வாறு எதிர்கொண்டார்?

இந்தக் கேள்வியுடன் Scarborough Rouge Park தொகுதியின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரான கரி ஆனந்தசங்கரியுடன் பேசினேன்.

கடந்த பொதுத் தேர்தலில் Scarborough Rouge Park தொகுதியில் மொத்தமாக பதிவான வாக்குக்களில் 60 சதவீதமான வாக்குக்களைப் பெற்ற கரி ஆனந்தசங்கரி நாடாளுமன்றத்தில் தனது முதல் 100 நாட்களின் ஆச்சரியங்களையும், அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினருக்கானஅறிமுக நிகழ்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை முடிந்துக்கொண்டு பதிவியேற்றவர் கரி ஆனந்தசங்கரி.

நாடாளுமன்றம் அமர்வில் உள்ள வாரங்களின் பிரதி புதன்கிழமைகளில் லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதை (இதை cacus meeting என்று அழைப்பார்கள்) வழமையாகக் கொண்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார் கரி ஆனந்தசங்கரி. லிபரல் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடமும் அமைச்சர்களிடமும்வெளிப்படையாக கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை இந்த வாராந்த சந்திப்பு ஏற்படுத்துகின்றது. கலந்துரையாடலாகவும், ஆலோசனை பெறும் நேரமாகவும், தமது தொகுதியின் தேவைகளை வெளிப்படுத்தும் களமாகவும் அமையும் இந்தச் சந்திப்பு ஒரு "மூடிய அறை" பேச்சுக்கள் என வர்ணித்தார் கரி ஆனந்தசங்கரி.

தான் இரண்டு பாராளுமன்றக் குழுக்களில் அங்கம் வகிப்பதாகக் கூறிய கரி ஆனந்தசங்கரி, கனடாவின் பூர்வீகக் குடிகளின் விவகாரம் குறித்த குழுவிலும் (Aboriginal Affairs) நாடாளுமன்ற உறுப்பினர்களான வழக்கறிஞர்களைக் கொண்ட ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்யும் குழுவிலும் (Scrutiny of Regulations) அங்கம் வகிப்பது குறித்தும் இந்த இரண்டு குழுக்களின் அவசியம் குறித்தும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இதில் பூர்வீகக் குடிகளின் விவகாரம் குறித்த குழுவின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இன்றைய நிலையில் அரசாங்கத்தின் முன்னுரிமை பெறும் விடயங்களில் கனடாவின் பூர்வீகக் குடிகளின் விவகாரம் உள்ளதாகவும் கூறினார். ஒவ்வொறு அமைச்சரின் ஆணையிலும் பூர்வீகக் குடிகளின் விவகாரத்தை கருத்தில் கொண்டு நகர்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது கட்சித் தலைமையினால் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் கரி ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் கனடா மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன்னர் கனடாவின் பூர்வீகக் குடிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து தகுந்த பதில் வழங்கவேண்டிய பொறுப்பு உள்ளதையும் பதிவு செய்தார் அவர். கனடிய குடிமகனுக்கான நன்மைகளை பெற்றுக் கொள்ளும் ஒருவர் பூர்வீகக் குடிமக்களுக்கான விடயத்தில்பொறுப்பேற்காமல் இருக்க முடியாது எனவும் கரி ஆனந்தசங்கரி கூறினார்.

கனடாவின் ஒவ்வொரு பகுதியையும் பிரதி நிதித்துவப்படுத்தும் 338 பேருடன் ஒரே அறையில் இருக்கும்போது கட்சி மற்றும் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து நாட்டின் வளர்ச்சி என்ற தன்மை மேலோங்கி நிற்பதை நாடாளுமன்ற உறுப்பினராக தனது முதல் 100 நாட்கள் கற்றுத் தந்துள்ளதாகவும் தெரிவித்த அவர் நாடாளுமன்றத்தில் வெவ்வேறு கட்சிகளின் கொள்கைகளையும் தனிநபர் எண்ணங்களையும் கொண்ட 338 பேர் இருந்தாலும் அவற்றையும் தாண்டி அவர்கள் ஒவ்வருவரிடமும் மனித உணர்வுகள் உள்ளதை பார்க்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற அமர்வுகளுக்கு வெளியே அனைத்து கட்சிகளுடன் தொடர்புகளை பேண முயற்சிப்பதாக கூறிய கரி ஆனந்தசங்கரி, கனடிய நாடாளுமன்ற வளாகத்தில் முதல் தடவையாக கொண்டாடப்பட்ட தைப் பொங்கல் விழாவின்போது அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களின் பிரசன்னமும் பெருமையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒரு பதிவு எனவும் குறிப்பிட்டார்.

ஆட்சி செய்வதற்கான பொறுப்பை Scarborough Rouge Park தொகுதி வாக்காளர்கள் தனக்கு வழங்கியுள்ள நிலையில் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களுடனும் கலந்துரையாடுவதில் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் உறவுகள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற அவசியத்தை புரிந்துள்ளதாகவும் கூறினார்.

ஒன்ராரியோ மாகாணத்தின் லிபரல் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் 80 ஆசனங்களை வெற்றிபெற்றது. பொரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்றத்தில் லிபரல் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஒன்ராரியோ மாகாணத்தின் லிபரல் கட்சிக்குக் கிடைத்த 44 சதவீத ஆதரவு பிரதான காரணியாகும்.

இந்த நிலையில் ஒன்ராரியோ மாகாணத்தில் தொழில் இழப்புக்கள் பிரதான சவாலாகவுள்ளதாகவும் ரொறன்ரோ பெரும்பாகத்தைப் போலவே தனது தொகுதியிலும் பொதுப் போக்குவரத்து பிரதான விடயமாக உள்ளதாகவும் கூறிய அவர், புதிதாக ரொறன்ரோ நகரசபையினால் முன்வைக்கப்பட்ட போக்குவரத்து குறித்த திட்டம் தனது தொகுதியின் பிரதான தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையும் எனவும் மகிழ்ச்சி வெளியிட்டார்.

ஒரு தமிழராகவும் ஒரே ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தன்மீதுள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அறிந்தவராக உள்ள கரி ஆனந்தசங்கரி, இலங்கை குறித்தும் தமிழ் மக்களின் நீண்டகால தேசிய பிரச்சினைகள் குறித்தும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இலங்கை அரசாங்கத்தை எவ்வாறு கையாள்வது என்பது அவசியமானது எனக் குறிப்பிட்ட அவர் தற்போது இலங்கையில் சிவில் சமூகத்தின் நகர்வுகளுக்கான வெற்றிடம் ஒன்று உருவாகியுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். தமிழர்களின் தேசிய பிரச்சினை விடயத்தில் ஏதோ ஒரு வகையில் தீர்மானம் ஒன்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளபோதிலும் இந்த விடயத்தில்பெரும் நம்பிக்கையுடன் தான் இல்லை எனவும் கூறியுள்ளார். களத்தில் நின்று செயற்படுபவர்களுக்கான வெளி வழங்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய கரி ஆனந்தச ங்கரி அவர்களை ஆதரிக்க வேண்டிய அவசித்தையும் சுட்டிக்காட்டினார்.

யுத்தக் குற்ற விசாரணைகள் மற்றும் பொறுப்புக்கூறல் உட்பட இலங்கை குறித்த சில விடயங்களின் கனடிய அரசாங்கம் தெளிவாக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார் கரி ஆனந்தசங்கரி, ஐக்கியநாடுகள் சபையின் தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்தினால் பின்பற்றப்படுகின்றதா என்ற விடயத்தில் கனடிய அரசாங்கம் இலங்கை மீது தேவையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் சரியான பாதையில் செல்லாத நேரத்தில் அது குறித்த விமர்சனங்களை முன்வைக்க கனடா பின்நிற்கக் கூடாது எனவும் கூறிய கரி ஆனந்தசங்கரி இனப்பிரச்சினை விடயத்தில் கனடாவின் அரசியல் அமைப்புடன் ஒப்பிடக்கூடிய அரசமைப்பிற்கான சாத்தியக்கூறுகள் இலங்கையில் இருந்தால் அதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை கனடா வழங்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இந்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதை தொடர்ந்து வலியுறுத்த முடியும் எனக் கூறிய கரி ஆனந்தசங்கரி, இது ஒரு தனி நபர் மாத்திரம் தொடர்புபட்ட விடயம் அல்ல எனவும் சமூகத்தின் பலமே தனது பலம் எனவும் சுட்டிக்காட்டினார். தமிழர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள நிலையில் அவர் அனைத்தையும் கவனித்துக் கொள்வார் என்ற மன நிலையில் தமிழர்கள் இருந்துவிடுவதன் ஆபத்துக் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

கனடாவில் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் குறித்து கருத்துப் பகிர்வுடன் கரி ஆனந்தசங்கரியுடனான சந்திப்பு முடிவுக்கு வந்தது.

எதிர்கால சந்ததியினர் அரசியல் ஈடுபடுவதற்கான உதவிகளையும் தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் கூறிய கரி ஆனந்தசங்கரி, வாழ்நாள் முழுவதும் எவரும் அரசியல்வாதியாக இருந்துவிடமுடியாது எனவும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



இகுருவிக்கான பத்மன்

# ஹாப்பரின் மரபை மாற்றுகிறாரா ரூடோ?

இஸ்லாமிய தீவிரவாதிகள் குறித்த கனடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் கொள்கை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் கனடாவின் முன்னாள் பிரதமர் ஸரீபன் ஹார்ப்பர் ஆகியோரின் ஆதரவையும் உதவியையும் பெறுகின்றது என்றால் அது ஆச்சரியமான விடயமாக பலருக்கும் இருக்கும். ஆனாலும் அதுதான் உண்மை.

ஹார்ப்பர் கனடியப் பிரதமராக இருந்தபோது இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிராக அதிகளவில் நகர்வுகளை மேற்கொண்டிருந்தால் ரூடோ கனடிய குண்டுவீச்சு விமானங்களை தாக்குதல்களில் இருந்து வெளியேற்றியது பெரும் சர்சையாக மாறியிருக்கும். இஸ்லாமிய தீவிரவாதம், சிரியா மற்றும் ஈராக் குறித்த புதிய கனடிய அரசாங்கத்தின் கொள்கையை ஒபாமாவின் நிர்வாகம் பாராட்டியது பலருக்கும் மிகப்பெரிய ஆச்சரியமாகவே அமைந்தது.

அண்மைய நாடாக அமெரிக்கா இஸ்லாமிய தீவிரவாத்திற்கு எதிரான நகர்வுகள் குறித்து தன்மீது சுமத்திய பழியில் இருந்து கனடிய பிரதமர் தப்பியது மட்டுமல்லாமல், அதற்காக அவர் அமெரிக்க அரசியல்வாதிகளிடம் இருந்து ஒரு நேர்மறையான ஊக்கத்தையும் பெற்றார் என்பதே உண்மை. இதன் காரணமாகவே கனடாவின் எதிர்க்கட்சியான கென்சவேட்டிவ் கட்சியினால் ரூடோவையோ அல்லது லிபரல் அரசாங்கத்தையோ முன்பு போல் விமர்சிக்க முடியவில்லை.

அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் அஷ்டன் கார்ட்டர், ரூடோவின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் செயலை மட்டும் செய்யவில்லை, இஸ்லாமிய தீவிரவாத்திற்கு எதிரான கனடாவின் நிலைப்பாட்டை அமெரிக்காவின் மற்ற நட்பு நாடுகளும் பின்பற்றவேண்டும் எனவும் தெரிவித்தார் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர். "கனடாவின் அறிவிப்பானது, அமெரிக்கா தனது நட்பு நாடுகளிடம் இருந்து எதிர்பார்த்திருந்த ஒன்றே" என்ற அமெரிக்க அரசாங்கத்தின் பேச்சாளரின் கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவை எல்லாம் எவ்வாறு சாத்தியமானது?

ஒபாமா தலைமையிலான நிர்வாகத்திற்கு இஸ்லாமிய தீவிரவாத்திற்கு எதிரான யுத்தத்தை எந்த திசையில் நகர்த்திச் செல்வது என்பது தெரியாமல் உள்ளது என்பது இதற்கு ஒரு சாத்தியமான விளக்கமாகும். ஆனாலும் இதற்கு மற்றொரு சாத்தியமான விளக்கமும் உள்ளது : இஸ்லாமிய திவிரவாத்திற்கு எதிரான கனடாவின் முன்னாள் பிரதமர் ஹார்ப்பர் அரசாங்கத்தின் நகர்வுகள் தகுந்த அளவில் இல்லாமல் இருந்ததனால், அதிலிருந்து வெளியேறும் கனடாவின் தற்போதைய பிரதமர் ரூடோவின் நகர்வை விமர்சனத்திற்கு உள்ளாக்கமுடியாது.

இந்த விளக்கம் கொன்சவேட்டிவ் கட்சியின் ஆதரவாளர்களை அதிருப்திக்குள் உள்ளாக்கும் என்பது நியாயமே. ஆனாலும் தரவுகள் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. இஸ்லாமிய தீவிரவாத சக்திகளுக்கு எதிராக கனடாவின் 6 விமானங்கள் மூன்று சதவிகிதத்திற்கும் குறைவான தாக்குதல்களையே மேற்கொண்டிருந்தது. கடந்த வருடத்தின் செப்டம்பர் மாதத்தில் கனடிய விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களின் எண்ணிக்கை 10 மாத்திரமே.

இதனை கடந்த தலைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவற்றுள் உள்ள வித்தியாசம் புலப்படும். சதாம் ஹூஸெய்ன் குவைத்தின் மீது படையெடுத்தபோது 2 போர்க் கப்பல்கள் 24 போர் விமானங்கள் மற்றும் 2000 இராணுவ உறுப்பினர்களுடன் வளைகுடா பகுதியில் நங்கூரமிட்டிருந்தன. இது நடைபெற்றது பிறையன் மல்ரோனி கனடிய பிரதமராக இருந்த காலகட்டத்தில்.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின்னர், 20ஆம் நூற்றாண்டில் தீவிரவாதத்திற்கு எதிரான போரையும் ஹிட்லர் மற்றும் ஸ்டாலினுக்கு எதிரான போரையும் ஒப்பிட்டு பேசினார் ஹார்ப்பர்.

ஆனால் அப்போதுஹார்ப்பரிடம் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டிய கேள்வி இதுதான் — ஹிட்லர் மற்றும் ஸ்டாலினுக்கு எதிரான போரும் இன்றைய போரும் ஒரே மட்டத்தில் மதிப்பிடப்பட்டால்,, இம்முறை கனடாவின் வெறும் ஆறு போர் விமானங்களை மாத்திரம் இந்தத் போரில் ஈடுபடுகின்றன?

அதற்கான விடை தற்போது சற்றே தெளிவாகின்றது. "உங்கள் யுத்த விமானங்கள், எங்களுக்கு தேவையில்லை," என சமீபத்தில் இஸ்லாமிய தீவிரவாத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய நாட்டின் தூதர் ஒருவர் தெரிவித்திருந்தார். ஹார்ப்பரின் ஆட்சிக் காலத்தில் கனடிய படையினர் மேற்கொண்ட பயிற்சி முயற்சிகள் மிகவும் அடிப்படை தன்மை கொண்டவை. இதனை ரூடோவினால் மூன்று மடங்கு அதிகரிப்பது என்பது பெரும் விடயமல்ல. இந்த விடயத்தில் ஹார்ப்பரினால் எதிர்பார்ப்பு மிகவும் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டது.

2010க்குப் பின் ஹார்ப்பர் எப்போது முக்கிய முடிவுகளை எடுப்பார் என கட்சி மட்டத்திலேயே கேள்விகள் எழுந்தன. அதற்கு ஹார்ப்பர் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் இருந்து வந்த பதில்: "இதனை ஹார்ப்பர் வேறு முறையில் கையாள முனைகின்றார்" என்பதே. அதற்கான அர்த்தம் என்ன என யாரும் கேட்கவும் இல்லை. யாரும் பதில் கூற முனையவும் இல்லை.

அரசமைத்து 100 நாட்களில் கனடாவின் புதிய(இளைய) பிரதமர் ரூடோ ஹாப்பரின் மரபை கொஞ்சம் கொஞ்சமாக அகற்றி((அல்லது மாற்றி) வருவதை ஆச்சரியமாக நோக்க முடிகின்றது. பயங்கரவாத்திற்கு எதிரான போராட்டம் இதில் ஒரு அங்கமே ●


வீடென்ன
உலகத்தையே
வாங்கலாம்!

PURCHASE - REFINANCE - EQUITY TAKE OUT

Suganthan Thavarajasingam
Mortgage Agent Lic # M08010501
CALL 416.859.2564
Office: 416.283.2377 x 116
35 Grand Marshall Dr, Toronto ON M1B 5W9 FSCO #10473



ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலுடன் பாடலைக்கேட்டு-7

ஆனந்தபிரசாத்

Bon jour.

''சங்கீதமானது நிருத்த, கீத, வாத்யம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம் மூன்றின் சேர்க்கையே சங்கீதம் என்று 'இரத்தினாகரம்' முதலிய நூல்கள் கூறுகின்றன."

"காற்று, அக்னி இவையிரண்டின் சேர்க்கையே நாதம் எனப்படும். இந்த நாதம் ப்ரணவ ஸ்வரூபமானது. ப்ரணவம் ஓங்கார வடிவமானது. அகர, உகர,மகரம் சேர்ந்தது. இதுவே திரிமூர்த்தி ஸ்வரூபம். அதாவது அகரம் விஷ்ணு, உகரம் ப்ரம்மா, மகரம் சிவன்."



இப்படியெல்லாம் என்னுடைய பத்தாவது வயதிலேயே மூளைக்குள் திணிக்கப்பட்டது. பரீட்சைகளின் போது சப்பித் துப்பினேன். சத்தியமாக எனக்கு அப்போது ஒன்றும் புரியவில்லை. ப்ரணவப் பொருளை முருகப் பெருமானே நேரில் வந்து விளக்க நான் என்ன தந்தை சிவனா? பத்து வயதில் சுத்தமாய்ப் புரியவில்லை. இருபத்தைந்து வயதில் காற்றும், அக்னியும் சேர்ந்தால் இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை... என்கிற 'ப்ரிஸ்டல் சிகரெட்' டின் விளம்பர வாசகங்களை அனுபவித்த போது ஏற்பட்ட 'கிக்' மட்டுமே புலனாகியது. இப்போது ஏதோ கொஞ்சம் தெரிவதுபோல் தோன்றுகிறது.

இதையே இப்போது கொஞ்சம் biological ஆகப் போட்டுப் பார்ப்போம். உடல் இயங்க வேண்டுமாயின் தசைகளுக்குள் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அடினோசீன் மூபொஸ்பேற் (ATP) இந்தப் பிராணனை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் ஆக்ஸிஜன் மூலம் எரிக்கப்பட்டு அடினோசீன் இருபொஸ்பேற் (ADP) ஆக்கப்படல் வேண்டும். இந்த இரசாயன மாற்றத்தின் பின்னரே சக்தி உண்டாகிறது. எனவே சக்தி என்பது காற்று, அக்னி காம்பினேஷன். ஆகவே நாதம் ஒரு output. ந்ருத்தம், கீதம், வாத்யம் என்கிறதான கலைவடிவங்கள் பரிபூரணமான சக்தியின் வெளிப்பாட்டு ஊடகங்கள் output devices.

இணைந்து இல் வாழ்க்கை நடத்தும் இருவருக்கிடையே பரஸ்பரம் புரிந்துணர்வோடு ஒழுங்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தாம்பத்திய வாழ்க்கையை rythmic life என்போம் இல்லையா? ''இசைபட வாழ்தல்'' என்கிறார் வள்ளுவர். மனமொருமித்த தாம்பத்ய வாழ்க்கையை harmony in life என்கிறார்கள். Pleasing agreement of sounds in music. ஒப்பந்தம் செய்துகொண்ட ஒலிகளின் இசைவு. 'பணப் பந்தல்களின்' கீழே மணமுடித்துக் கொள்வோர்கள் எவரும் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்று இந்த harmony, இசைவு. லயத்துடன் பொருந்திய இல்லறம்.

இப்போது நாம் ஒரு முடிவுக்கு வரலாம். ஐந்து புலன்களின் தனித்தனியான சக்திகளை ஒருமுகப்படுத்தி நெஞ்சு நிறைய மூச்சை நிறைத்து ப்ராணனிலிருந்து சங்கீதம் வெளிப்படும் போது கலை நமக்குள் அனுபவமாகிறது. அரங்கு நிறைந்துவிடுகிறது.



நாத வெள்ளத்தால் பார்ப்போரும், கேட்போரும் வசியமாகி விடுகிறார்கள். இத்தகைய ஆழுமையுள்ள கலைஞர்கள் தான் பிரகாசிக்கிறார்கள். உன்னதமான கலைஞர்கள். மற்றவர்கள் எல்லாம்......

"நெஞ்சில் முட்செடிகளை வைத்துக் கொண்டு நாக்கில் மட்டும் எப்படி நந்தவனம் வளர்க்கிறீர்கள்...?"

(உபயம்: வைரமுத்து)

நாட்டிய சாஸ்திரத்தில் பரத முனிவர் பின்வருமாறு கூறுகிறார்.

"யதோ ஹஸ்தஸ் ததோ த்ருஷ்டி
யதோ த்ருஷ்டித் ததோ மனஹ
யதோ மனஹஸ் ததோ பாவ
யதோ பாவஸ் ததோ ரசக"

கைகள் எங்கெங்கெல்லாம் அசைகிறதோ கண்ணும் அதையே தொடர வேண்டும்.

கண் எங்கே பார்க்கிறதோ மனதும் அதன் வழியே செல்லவேண்டும். மனது எவ்வழி செல்கிறதோ பாவமும் அதனோடு ஒருமித்துப் போகும்போது தான் பண்ணுகிற கலையில் அழகியல் வெளிப்பாடு உண்டாகும். Aesthetic pleasure.

இன்று பெரும்பாலும் அப்படி இல்லை. ஏதோ ஹஸ்தம்... ஏதோ த்ருஷ்டி... எங்கேயோ மனது... எங்கேயோ பாவம்... ஐயோ பாவம்!!! அதனால் தான் ஆலைகள் நிறைந்து கிடந்த ஊருக்குள்ளே இலுப்பம் பூக்களெல்லாம் சர்க்கரைகளாகிக் கொண்டிருக்கிறது. அதுதான் கமலஹாஸன் சொன்னாரே... "உன் கண்ணு பார்வையாளர்கள் மேல..... காது அவங்க அடிக்கப்போற அப்ளாஸ் மேல...." என்று.

நல்ல அப்பியாசமும், மனப்பூர்வமான ஈடுபாடும், அர்ப்பணிப்பும் இன்றி எந்த ஒரு கலைப்படைப்பையும் வெற்றிகரமாக மேடை ஏற்றிவிட முடியாது.

இந்த வருடத்து ஆஸ்கார் விருது வழங்கும் வைபவத்தைப் பகிஷ்கரிப்பதெனக் கறுபிப்பினக் கலைஞர்கள் முடிவெடுத்துள்ளனர். காரணம் என்னவெனில் வெளுப்பினக் கலைஞர்களே பெரும்பான்மையான விருதுகளுக்கு வேட்பாளர்களானதே. இத்தனைக்கும் ஒரு கறுப்பினப் பெண்மணி தேர்வுக்குழுவின் தலைவியாக இருந்தும் கூட!!! எது எப்படியெனினும் "ஆஸ்கார் விருது" என்பது ஒரு வெகுஜன மாயையே.

சினிமாவே ஒரு "ஸெல்லுலொய்ட்" மாயை. இன்று ''டிஜிட்டல் + க்ராஃவிக்ஸ்" மாயமான் வேட்டை. பண வசூலில் வெற்றி பெறாத திரைப்படங்களை அதிகம் கண்டு கொள்வதில்லை... ஒரு சில விதிவிலக்குகள் இருந்தும் கூட. வங்கிக் கணக்கினுள் அகப்படாது.. சந்திக்கு வராத திரைக் கலைஞர்களுக்கு அவர்கள் தளர்ந்து மூப்படைந்த பின் வாழ் நாள் சாதனை விருதை வழங்குவார்கள். சத்யஜித் ராய்க்கு கூட மரணப்படுக்கையில் விருது வழங்கி தன்னை கௌரவப்படுத்திக் கொண்டது 'அக்காடமி'.

நான் பழங்கதை பேசவில்லை. ம்ருணாள் சென், க்ரீஷ் கர்னாட், ராமு காரியத், லெஸ்டர் ஜேம்ஸ் பீரீஸ், சுகதபால சேனரத் யாப்பா, மஜீத் மஜீதிஸ், அடூர் கோபாலக்ருஷ்ணன், ருத்ரைய்யா, ஸ்பைக் லீ, ஸாங்க் யிமோ, அகிரோ குரசோவா போன்ற எத்தனையோ கலைஞர்கள் பொருளாதர வலிவின்றி அவர்கள் வாழ்ந்த காலங்களின் அவலங்களை திரைக்கதைகளாய்ப் பதிந்தனர். இவர்களைப் போல எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின் உழைப்பும், பங்களிப்பும் உதாசீனப்படுத்தப்பட்டு..... கலைப் படங்கள் அல்லது Art film என்கிற வரையறைக்குள் 'ஆர்ட்' படுத்தப் பட்டுவிட்டன. இவ்வாறான கலைப் படங்களை ஒரு காலத்தில் 'கான்ஸ்' திரைப்பட விழாக்களில் காண முடிந்தது. இன்றோ காணாமலேயே போய்விட்டது. 'கான்ஸ்' திரைப்பட விழா இன்று கறுப்புப் பணத்தை வெள்ளைப்பணமாக்கும் கள்ள மார்க்கெட்டில் சங்கமித்துவிட்டது.




''பாம் தி யோர்'' விருதின் அந்தஸ்து அஸ்தமித்து விட்டது.

எனக்குத் தெரிந்து திரையிலும், தரையிலும் கதாநாயகனாகத் திகழ்ந்த ஒரேயொரு கலைஞர் மார்லன் ப்ராண்டோ அவர்களே. மூன்றாவது தடவையாகத் தனக்கு வழங்கப்பட்ட சிறந்த நடிப்பிற்கான ஆஸ்கார் விருதை அமெரிக்க ஆதிகுடியினரான செவ்விந்தியர் மீது இழைக்கப்படும் அநீதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நிராகரித்த ஆத்மார்த்தமான கலைஞன்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா இருந்தும் கூட இன்றும் ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கு எதிரான காவல்துறையின் எதேச்சாதிகாரம் எத்தனை இளசுகளைப் பலி வாங்கியிருக்கிறது? நிறவெறியின் நிறம் என்ன வெளுத்துவிட்டதா? நிறம், மதம், இனம், மொழி, ஜாதி இத்யாதி வெறிகள் 100% Alcahole. ஒரு மிடறு பருகினாலே சும்மா 'ஜிவ்' வென்று ஏறிவிடும். அதன் பிறகு முறியவே முறியாது. கறுப்பினக் கலைஞர்கள் ஆஸ்காரைப் பகிஷ்கரிக்கும் இவ் வேளையில் அமெரிக்க நிற நிலைப்பாடுகளின் முகத்தில் காறியுமிழும் வகையில் கேலியும், கிண்டலுமாக The Hateful Eight என்றொரு திரைப்படம் வெளி வந்திருக்கிறது. இதனை எழுதி இயக்கியவர் Quentin Jerome Tarantino. ஹாலிவூட் படங்களின் திரைக்கதை அமைப்பில் ஒரு கனதியான பாதிப்பை ஏற்படுத்தி அதன் போக்கையே மாற்றிவிட்ட Pulp Fiction என்ற திரைப்படத்தின் படைப்பாளி.

இந்தத் திரைப்படத்துக்கு சிறந்த பின்னணி இசைக்கோர்ப்பிற்கான 'கோல்டன் க்ளோப்' விருது அண்மையில் கிடைத்திருக்கிறது. இசை அமைத்தவர் யார் தெரியுமா? கடந்த மாதம் இத் தொடரில் 88 வயதிலும் பாடிக்கொண்டே எம்மை விட்டு மறைந்த எம்.எஸ்.வி.ஐயாவைப் பற்றி எழுதினேனல்லவா? இவரைப் போலவே 87 வயதில் இன்னமும் விருது வாங்கிக்கொண்டிருக்கும் இத்தாலியின் ரோம் நகரைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற இசை மேதை Ennio Morricone. அறுபதுகளில் எனது சின்னஞ்சிறிய வயதில்.....


அதுவரையில் சினிமாவின் பாடல்களை மட்டுமே பாடிக்கொண்டிருந்த என் வயதொத்த மிகப் பலரை... ஒரு திரைப்படத்தின் 'தீம் ம்யூஸிக்' கை அதன் வாத்தியங்களின் இசையை வாயாலேயே இசைத்து ஊளையிட்ட வண்ணம் ஈருருளிப் புரவிகளில் தாவிப் பாய்ந்து ஏறி மிதித்து... யாழ்ப்பாணத்துத் தெருக்களில் அலையவிட்ட அநியாயமான கலைஞன். அந்தத் திரைப்படம் "The Good, the Bad and the Ugly". இவரைப்பற்றி அடுத்த மாதம் எழுதுகிறேன். ●

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபேஸ்புக்கின் அபாயகரமான திட்டம்!

சுகந்தன்




ஃபேஸ்புக் நிறுவனம் முன்மொழியும் திட்டத்தின்படி ஃபேஸ்புக் உள்ளிட்ட சில வலைதளங்களை இணைய கட்டணமின்றி நுகர் வோர் பயன்படுத்த முடியும். ஆனால், ஏற்கெனவே மொபைல் டேட்டா சேவைக்குக் கட்டணம் செலுத்திவிட்டுத்தான் ஒட்டுமொத்த இணைய சேவையையும் நாம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஃப்ரீ பேசிக்ஸ் அறிமுகமானால், இலவச சேவை வழங்கப்படலாம். ஆனால், அடிப்படைத் தகவல் பரிமாற்றம் தவிர ஆடியோ, வீடியோக்களையும், ஃபேஸ்புக்கோடு உடன்படிக்கை செய்துகொள்ளாத மற்ற இணையதளங்களையும் அதில் இலவசமாகப் பயன்படுத்த முடியாது. ஆனால், இந்தத் தகவல்களைச் சாதுரியமாக மறைக்கிறது ஃபேஸ்புக்கின் பிரச்சாரம்




இலவச இணையத் திட்டத்தை 'ஃப்ரீ பேசிக்ஸ்'மூலமாக இந்தியாவில் அறிமுகப்படுத்த இருப்பதாகத் தொடர்ந்து ஃபேஸ்புக் நிறுவனம் பிரச்சாரம் செய்துவருகிறது. முழுக்க முழுக்க இலவசச் சேவை வழங்கும் திட்டம் என்று கூறிவருகிறது. ஃபேஸ்புக் பயனாளர்களிடம் இத்தகைய உத்தி என்றால், மறுபுறம் ஃபேஸ்புக் நிறுவனத்தின் தலைவர் மார்க் ஸக்கர்பெர்க் மீண்டும் மீண்டும் இந்தியாவின் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையமான டிராயைத் தொடர்புகொண்டு, இந்தியாவில் 'ஃப்ரீ பேசிக்ஸ்'திட்டத்தைக் கொண்டுவர கடுமையாக முயற்சித்துவருகிறார். வழியாக ஃபேஸ்புக்கின் பிரச்சார நடவடிக்கையைப் பகிரங்கமாக விமர்சித்தது.

ஃபேஸ்புக் நிறுவனம் முன்மொழியும் திட்டத்தின்படி ஃபேஸ்புக் உள்ளிட்ட சில வலைதளங்களை இணைய கட்டணமின்றி நுகர் வோர் பயன்படுத்த முடியும். ஆனால், ஏற்கெனவே மொபைல் டேட்டா சேவைக்குக் கட்டணம் செலுத்திவிட்டுத்தான் ஒட்டுமொத்த இணைய சேவையையும் நாம் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஃப்ரீ பேசிக்ஸ் அறிமுகமானால், இலவச சேவை வழங்கப்படலாம். ஆனால், அடிப்படைத் தகவல் பரிமாற்றம் தவிர ஆடியோ, வீடியோக்களையும், ஃபேஸ்புக்கோடு உடன்படிக்கை செய்துகொள்ளாத மற்ற இணையதளங்களையும் அதில் இலவசமாகப் பயன்படுத்த முடியாது. ஆனால், இந்தத் தகவல்களைச் சாதுரியமாக மறைக்கிறது ஃபேஸ்புக்கின் பிரச்சாரம்.

பயனாளர்களுக்குப் புரியாத வார்த்தைகளைக் கொண்டு ஜோடிக்கப்பட்ட படிவம் மூலமாக அவர்களது ஆதரவைத் திரட்டிவருகிறது. போதாக்குறைக்கு, படிவங்கள் அத்தனையும் டிராய்க்கு அனுப்பிக் கொண்டே இருந்தது ஃபேஸ்புக். இதன் மூலமாக டிராயின் நம்பகத்தன்மையை வென்றெடுக்கத் திட்டமிட்டது. ஆனால், டிராய்க்கு அனுப்பும் மின்னஞ்சல்கள் உரிய இடத்துக்குப் போய்ச் சேரவில்லை. அதற்குக் காரணம், மின்னஞ்சல்களைக் கையாளும் நபர் அதைத் தடுக்கிறார் என சந்தேகம் எழுப்பியது. இந்தத் தருணத்தில்தான் டிராய்க்கும் ஃபேஸ்புக்குக்கும் இடையில் மூண்டிருந்த பனிப் போர் வெடித்தது. அர்த்தமுள்ள கலந்தாலோசனை நடவடிக்கையாக இருந்திருக்க வேண்டிய இது இந்தியாவில் இணையச் சமநிலையைப் பாதிக்கும் என்ற அச்சம் விமர்சகர்களால் முன்வைக்கப் படுகிறது. இந்நிலையில், சமீபத்தில் டிராய் தன் மின்னஞ்சல் ஒன்றை, முரட்டுத்தனமான பெரும்பான்மைவாத, தூண்டிவிடப்பட்ட கருத்துக் கணிப்பாக மாற்றியிருப்பதாக ஃபேஸ்புக் குக்குக் கடும் கண்டனம் தெரிவித்தது டிராய்.

தகவல் தொழில்நுட்ப யுகத்தில் நாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும் விதத்தை இத்தகைய ஊடகங்கள் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், அதன் போக்கையே முற்றிலுமாக மாற்றி அமைக்கும் வல்லமையும் பெற்றுள்ளன. அதிலும் சட்டதிட்டங்களிலும், அரசுக் கொள்கைகளிலும் அவை ஊடுருவிவிட்டால், அதைவிடவும் ஆபத்து வேறெதுவும் இருக்க முடியாது. வணிகம் செய்வதற்கான உரிமம் கிடைத்துவிட்டதால், அந்தத் தளத்தைத் துஷ்பிரயோகம் செய்வது மிகப் பெரிய தவறு. குறிப்பாக, மக்களின் கருத்துக் கணிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, அரசுக் கொள்கைக்குள் நுழைய முயற்சிப்பது கண்டிக்கத் தக்கது. 'இண்டர்நெட். ஓ ஆர்ஜி'என்ற பெயரில் தான் செய்யத் திட்டமிட்டதற்கு வேறொரு கவர்ச்சிகரமான பெயரை மாற்றி, இந்த வேலையில் இறங்கியிருக்கிறது.

இந்தியாவின் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் செயல்பாட்டில் மூக்கை நுழைப்பதை எந்த விதத்திலும் ஃபேஸ்புக் நியாயப்படுத்த முடியாது. அதேசமயம் டிராய்க்கும் ஃபேஸ்புக்குக்கும் இடையில் நடக்கும் இந்தப் பிரச்சினையில் உண்மையான பிரச்சினை நீர்த்துப்போய்விட்டது. 100 கோடிக்கும் அதிகமான மக்கள்தொகையும் அதிலும் பெரும்பான்மை ஏழை எளிய மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்கு எத்தகைய இணைய சேவை தேவை? இந்தக் கோணத்தில் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களை முன்னெடுத்தால் உண்மையிலேயே தொழில்நுட்ப வளர்ச்சி பரவலாகப் பலரைச் சென்றடையும் ●

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலண்டர் உருவாகிய வரலாறு

எஸ்.ஆர்.ராஜபாலன்

காலத்தை கணக்கிடுவதற்கு உதவும் கலண்டர்கள் எமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்டுள்ளன.

சந்திரனில் ஏற்படும் மாறுதல்களால் உருவாகும் அமாவாசை, பௌர்ணமி என்பவற்றையும், சூரியனின் நகர்வினால் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆதி மனிதர்கள் காலத்தைக் கணக்கிட்டனர். ஆனால் காலப்போக்கில் பல நூற்றாண்டுகளாக பல்வேறு சமுதாயங்களில் நாகரீக வளர்ச்சி ஏற்பட்டு கணக்கீட்டு முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவே தற்போது நடைமுறையில் உள்ள கலண்டர் உருவாகியது.

லத்தீன் மொழியில், பதிவேடு அல்லது கணக்குப் புத்தகம் என்ற பொருள்படும் கலேண்டஸ் (Kalends) என்ற வார்த்தையில் இருந்தே கலண்டர் என்ற சொல் தோன்றியது.

வெவ்வேறு காலகட்டங்களில் அநேக அறிஞர்கள், வானசாஸ்திர நிபுணர்கள் ஆகியோரால் பல்வேறு மாறுதல்களுக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னரே தற்போதைய கிறகெறியன் கலண்டர் உருவாகியது.

ஏழு நாட்களையுடைய வாரங்களைக் கொண்ட தற்போதைய நவீன மயப்படுத்தப்பட்ட கிறகெறியன் முறைக் கலண்டரின் உதவியினால் நாம் காலத்தை சரியான முறையில் கணித்து அளவிட முடிகிறது.

### கிறகெறியன் கலண்டர் தோன்றிய வரலாறு

கிறிஸ்துவிற்கு முன்பு 2500ம் ஆண்டளவில் எகிப்தியர்களால் முதலாவது கலண்டர் உருவாக்கப்பட்டது என பொதுவாக நம்பப்படுகிறது. அதன் பின்பு கி.மு. 713 ம் ஆண்டில் ரோம் சாம்ராஜ்யத்தின் 2 வது அரசன் நூமா பொம்புலியஸ் என்பவர் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களை பழைய கலண்டரில் இணைத்தார். இதுவே ரோமன் கலண்டராக உருவாகியது.

அதன் பின் கி.மு. 46 ஆம் ஆண்டில் யூலியஸ் சீசர் அரசனால் ரோமன் கலண்டரில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, யூலியன் கலண்டர் உருவாக்கப்பட்டது. இந்த கலண்டர் ஏறக்குறைய 15 நூற்றாண்டுகளாக மேற்குலக நாடுகளிலும் ஐரோப்பாவிலும் நடைமுறையில் இருந்து வந்தது.

ஆனால் 1582 ம் ஆண்டில் பாப்பரசர் 13 வது கிறகெறி என்பவரின் ஆணைப்படி யூலியன் கலண்டரில் மாற்றங்கள் செய்யப்பட்டு தற்போது உலகெங்கும் பயன்படுத்தப்படும் கிறகெறியன் கலண்டர் உருவாக்கப்பட்டது.

### ஒரு நாள் என்னும் கால அளவினை வரையறுத்தல்

நள்ளிரவில் தொடங்கி மறுநாள் நள்ளிரவு வரையான காலப்பகுதியை நாம் ஒரு நாள் எனக் கணக்கிடுகிறோம். ஆனால் வானியல் நிபுணர்களின் கருத்துப்படி, கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் மத்திய இத்தாலி பகுதியில் வாழ்ந்து வந்த, உம்பீரியன்ஸ் எனப்படும் இனத்தவர்கள் நண்பகலில் இருந்து மறுநாள் நண்பகல் வரையிலான காலப்பகுதியை ஒரு நாள் எனக் கணக்கிட்டு வந்தனர். கீபுறா இனத்தவர்கள் சூரிய அஸ்தமனத்தில் இருந்து அடுத்த நாள் சூரிய அஸ்தமனம் வரையிலான காலப்பகுதியை ஒரு நாள் எனக் கொண்டனர். அதே வேளை புராதன பாபிலோனியரும், எகிப்தியர்களும், சீனர்களும், இந்துமதக் குருக்களும் சூரிய உதயம் முதல் அடுத்த சூரிய உதயம் வரையான காலத்தை ஒருநாள் எனக் கணக்கிட்டனர். எனவே ஒருநாள் என்பது ஒரு பகல் காலத்தையும், ஒரு இரவுக் காலத்தையும் உள்ளடக்குகின்றது என்பதில் கருத்து ஒற்றுமை இருந்த போதும் அதனை எவ்வாறு கணக்கிடுவது தொடர்பாக புராதன சமூகங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டு வந்தன.

### ஏழு நாட்களைக் கொண்ட வாரம் உருவாகியமை

முதலாம் நூற்றாண்டில் யூத இனத்தவர்களால் ஏழு நாட்களைக் கொண்ட ஒரு வாரம் என்ற கால அளவீடு அறிமுகப்படுத்தப்பட்டு பின்பு, அது கிரேக்கர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சந்திரனின் நான்கு வெவ்வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்கள் (4 Phases of Moon) ஒவ்வொன்றும் 7 நாட்கள் என்பதனாலும், பாபிலோனிய மக்களின் புனித எண் 7 என்பதனாலும், ஒரு வாரத்தில் 7 நாட்கள் எனக் கணக்கீடு செய்ததாக நம்பப்படுகிறது. அதே சமயம் ஏழு கிரகங்களைக் குறிக்கும் கடவுள்களின் லத்தீன் மொழி, ஸ்கந்திநேவிய மொழி பெயர்களும் மருவி வாரத்தின் ஏழு நாட்களின் பெயர்கள் உருவாகின என்றும் கருதப்படுகின்றது.

### மாதங்களின் பெயர்கள் தோன்றியமை

ஒரு வருடத்தில் 12 மாதங்கள் சந்திரனின் வளர்ச்சிச் சக்கரத்தைக் கொண்டு, கணக்கிடப்பட்டுள்ளன. அவற்றில் பல லத்தீன் மொழியில் இருந்து தோன்றின.

1) ரோம் சாம்ராஜ்யத்தின் ஆரம்பகாலத்தில் சந்திரனின் வளர்ச்சி மாற்றத்தின் அடிப்படையில் 10 மாதங்களையும், 303 நாட்களையும் கொண்டதான வருடமே உபயோகத்தில் இருந்தது.

2) கி.மு. எட்டாம் நூற்றாண்டிலேயே ஒரு வருடத்தில் 12 மாதங்கள் உள்ளன என்னும் முறை உருவாக்கப்பட்டது. ரோம் நகரின் 2 வது மன்னன் நூமா பொம்புலியஸ் அதுவரை உபயோகிக்கப்பட்டு வந்த 10 மாதங்களைக் கொண்ட கலண்டரில் மேலதிகமாக ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களை இணைத்து, 355 நாட்கள் கொண்ட கலண்டரை உருவாக்கினார்.

3) ஆறு நூற்றாண்டு காலத்தின் பின்னர் யூலியஸ் சீசரின் ஆட்சிக் காலத்தின் போது, கி.மு. 47 ம் வருடத்தில் ரோமன் கலண்டர் முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என முடிவு செய்தார். எனவே அவர் அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த கிரேக்க—எகிப்திய வானியல் நிபுணரான சோசியினஸ் என்பவரின் ஆலோசனைப்படி, 365 நாட்கள் கொண்டதான வருடத்தை ஏற்படுத்தியதுடன் 4 வருடங்களுக்கு ஒரு முறை லீப் வருடம் என்னும் முறையை அறிமுகப்படுத்தினார். இதே சமயம் அதுவரை குவின்ரிலிஸ் (Quintillis) என அழைக்கப்பட்டு வந்த 7வது மாதம், யூலியஸ் சீசரைக் கௌரவிக்கும் முகமாக யூலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட புதிய கலண்டர், யூலியன் கலண்டர் என அழைக்கப்பட்டது.

4) யூலியஸ் சீசர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ஆட்சிபீடமேறிய ரோம நகரத்தின் சக்கரவர்த்தி ஆகஸ்துஸ் சீசர், ஏற்கனவே செக்ஸ்டிலிஸ் (Sextilis) என அழைக்கப்பட்டு வந்த 8வது மாதத்தை, தனது பெயரின் நினைவாக ஆகஸ்துஸ் என்று மாற்றம் செய்தார். அத்துடன் அவரது வேண்டுகோளின் படி, பெப்ரவரி மாதத்தில் இருந்து ஒரு நாளைக் குறைத்து ஆகஸ்ட் மாதத்தில் அதிகரிக்கப்பட்டது. அதனையடுத்து பெப்ரவரி மாதத்தில் 29 நாட்கள் உள்ளன எனவும், ஆகஸ்ட் மாதத்தில் 31 நாட்கள் உள்ளன எனவும் முடிவு செய்யப்பட்டது.


| ரோமன் - கிறகெறிய கலண்டர்களில் நாட்கள் எண்ணிக்கை மாற்றம் அடைந்த வரலாறு | | | | | |
|---|---|---|---|---|---|
| கலண்டரை உருவாக்கியவரின் பெயர் | ரோமிபுலஸ் (Romulus) கி.மு. 738 | நூமா (Numa) கி.மு. 717 | யூலியஸ் (Julius) கி.மு.47 | ஆகஸ்துஸ் (Augustus) கி.மு.8 | கிறகெறி (Gregory) கி.மு. 1582 |
| ஒரு வருடத்தின் நாட்களின் எண்ணிக்கை | 303 | 355 | 365 | 365 | 365 |

### யூலியன் கலண்டர், கிறகெறியன் கலண்டர் - ஓர் ஒப்பீடு

யூலியஸ்சீசரின் ஆட்சிக்காலத்தின் போது உருவாக்கப்பட்ட யூலியன் கலண்டர் மிகவும் சிறந்த வானியல் நிபுணர்களான மதக் குருக்களினால் உருவாக்கப்பட்டதனால் அது ஓர் தரமான கலண்டர் என ஆதிக் கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் அதில் சில குறைபாடுகள் இருந்தது என பின்னர் அவதானிக்கப்பட்டது. யூலியன் கலண்டர் முறையின்படி ஒரு வருட காலம் எனக் கணக்கிடப்பட்டுள்ள காலப் பகுதியில் மேலதிகமாக 11 நிமிடங்கள் 14 வினாடிகள் உள்ளடக்கப்பட்டது என அறியப்பட்டது.

யூலியன் கலண்டரில் உள்ள இந்த குறைபாடு காரணமாக கி.பி. 1582 வரை வெவ்வேறு வருடங்களில் நாட்களின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் ஏற்பட்டன. பின்பு அறிஞர்கள் சில திருத்தங்களை உருவாக்கினர்.

இப்புதிய கலண்டர் கிறகெறியன் கலண்டர் என அழைக்கப்பட்டது. இதில் சேர்க்கப்பட்ட திருத்தங்களின்படி, 1600 ம் வருடத்தின் பின்பு 00 என்ற இலக்கங்களில் முடிவடையும் 4 நூற்றாண்டுகளில் 1700, 1800, 1900 ஆகிய மூன்றைத் தவிர நான்கு வருடங்களுக்கு ஒரு முறை லீப் வருடம் (Leap Year) உருவாகும் என முடிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக யூலியன் கலண்டரில் இருந்த குறைபாடு நீக்கப்பட்டு



கிறகெறியன் கலண்டரே தற்போது உலகம் எங்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலே குறிப்பிட்ட மாற்றத்தின்படி, 1600 ம் வருடம் லீப் வருடம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1700, 1800, 1900 ஆகிய வருடங்கள் சாதாரணமான வருடங்கள் (Common Years) என முடிவு செய்யப்பட்டது.

2000 ம் வருடம் முதல் ஒவ்வொரு அடுத்த நான்காவது வருடமும் லீப் வருடமாக அமையும் என்று தீர்மானிக்கப்பட்டது. லீப் வருடங்களை கணக்கிடுவதில் ஏற்படுத்தப்பட்ட இந்த மாற்றங்கள் காரணமாக காலத்தைக் கணக்கிடுவதற்கு கிறகெறியன் கலண்டர் மிகவும் சிறந்ததும், நம்பகத் தன்மையுடையதுமான கலண்டராக உருவாகியது.

ஐரோப்பாவில் உள்ள ரோமன் கத்தோலிக்க நாடுகள் கி.பி. 1587 இல் கிறகெறியன் கலண்டரை பயன்படுத்த ஆரம்பித்தன. ஆனால் ரோமன் கத்தோலிக்கரல்லாத நாடுகள் தொடர்ந்து நீண்ட காலமாக யூலியன் கலண்டரையே உபயோகித்து வந்தன. 165 வருட இடைவெளியின் பிரிட்டிஷ் அரசு, கிறகெறியன் கலண்டரை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தன. ஆனால் கிறீஸ், ரஷ்யா, சோபியா, ரோமானியா ஆகிய நாடுகளின் திருச்சபைகள் உத்தியோகபூர்வமான தேவைகளுக்காக யூலியன் கலண்டரையே இன்று வரை பயன்படுத்தி வருகின்றன. எனினும் உலகளாவிய ரீதியில் கிறகெறியன் கலண்டரே காலத்தைக் கணக்கிடுவதற்கு மிகவும் சிறந்தது என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்டாலினின் முடிவு

சிவதாசன்

சமீபத்தில் றோஸ்மேறி சுலிவன் எழுதிய ஸ்ராலினின் மகள் (Stalin's Daughter)என்னும் புத்தகத்தை வாசித்தேன். ஸ்டாலினை ஒரு கொடுங்கோலர், சர்வாதிகாரி எந்தும் படிமங்களூடு பார்த்திருந்த எனக்கு இன்னூல் ஒருவித சலனத்தை ஏற்படுத்தியிருந்தது.

சோவியத் குடியரசு பற்றி மறைக்கப்பட்ட பக்கங்கள் பல. ஸ்டாலினின் ரஷ்யா பற்றி நிறைய விடயங்களை ஸ்வெற்லானாவின் பிரதிபலிப்புக்களாக இப் புத்தகம் தருகிறது.

1926 இல் ரஷ்யாவில் பிறந்து கிரெம்லின் அரச மாளிகையில் வளர்ந்த ஸ்டாலினின் மகள் சுவெட்லானா தனது 85 வது வயதில் அமெரிக்காவில் தனிமையில் வறுமையில் மடிந்து போனார்.

ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி என்றே வரலாறு சொல்கிறது. சர்வாதிகாரிகள் கொடுங்கோலர்கள் என்றுதான் எமக்குக் கற்பிக்கப்பட்டது. இந்தப் புத்தகத்தை வாசிக்கும்போதும் அப்படியொரு உண்ர்வுதான் மேல் நிற்கிறது. அதற்கும் மேலால் இந் நூலில் இன்னுமொரு நிழலுணர்வு ஸ்டாலினையும் அவர் சார்ந்த கம்யூனிச சித்தாந்தத்தையும் பின்புலத்தில் நகர்த்திக் கொண்டிருக்கிறது. பிரச்சார சித்தரிப்புகள் என்று எதுவுமில்லை. வேண்டுமானால் ஸ்வெட்லானாவின் மீதான ஒரு கழிவிரக்கத்தை ஏற்படுத்தி அவரது தவறுகளுக்கான காரணங்களையும் ரஷ்யா மீது சுமத்தும் முயற்சி தென்படலாம்.

தாம் வரித்துக் கொண்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்த ஸ்ராலின் கையாண்ட வழிமுறைகள் நாகரிக நெறிமுறைகளுக்கு அப்பாற் பட்டவை. 16, 17ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அதிவேகமாகப் பரவிக்கொண்டிருந்த தொழிற் புரட்சி, நிலங்களை வளங்களாகக் கொண்டு அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியது. வறுமைக் கோடு, தன்நிறைவு பற்றிய பொருளாதார அளவுகோல்கள் பற்றி அறிந்திராத காலமது. நாடுகளிடையே பாதுகாப்பு மற்றும் பொருளாதார அணி சேர்தல் முடுக்கப்பட்ட நிலை. நகரமயமாக்கலும் இயந்திர மயமாக்கலும் மட்டுமே ஒரு நாட்டை முன்னிலையில் வைத்திருக்கும் எந்ற நம்பிக்கை ஆட்சியாளர்கள் மத்தியில் இருந்தது.

அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து லெனினின் நோக்கம் கம்யூனிச சித்தாந்தத்தின் அடிப்படையிலான பலமான சோவியத் குடியரசை அமைப்பது. அதற்கமைய கட்சி நிறுவப்பட்ட விஞ் ஞாபனம் மிகவும் இறுக்கமானது. அதை நடைமுறைப்படுத்த எவர் முன்வந்திருப்பினும் அவர் சர்வாதிகாரியாகவே இருந்திருக்க வேண்டும். ஸ்டாலின் அதைக் கட்சியின் விருப்பிற்கமையச் செய்தார். அதற்காக அவர் விரும்பி இழந்தது பல, ஒருவர் ஸ்வெட்லானா.

ஸ்டாலினுக்கு ஸ்வெட்லானாவைத் தவிர இரண்டு ஆண் பிள்ளைகள் இருந்தனர். ஆனாலும் ஸ்வெட்லானா மீது அவர் மிகவும் பிரியமும் கரிசனையும் கொண்டிருந்தார். ஜார் அரசரின் காலதில்போலவேமேற்தட்டுவர்க்கம் கல்வி பயிலும் பாடசாலையில் தான் ஸ்வெட்லானா கல்வி கற்றார். இலக்கியம், வரலாறு, ரஷ்ய கலாச்சாரம், மேடை இலக்கியம் கட்சி சித்தாந்தம் யாவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவ்ர் ஸ்வெட்லானா. அதனால் அவருக்கு நிறைய யூத—ரஷ்ய நண்பர்கள் கிடைத்தனர். அவர்களில் இருவரைத் திருமணமும் செய்துகொண்டார். பிள்ளைகளும் உண்டு. ஆனால் ஸ்டாலின் யூதரை வெறுப்பவர். அதனால் பேரப்பிள்ளைக்ளையும் வெறுத்தார்.

நகர மயமாக்கலின் போது விவசாயிகளின் நிலங்கள் பலவந்தமாகப் பறிக்கப்பட்டந. பஞ்சம் தலைவிரித்தாடியது. பல மில்லியன் மக்கள் பட்டினியால் மரணமடைந்தனர். எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டோ குளிர் வலையங்கள் அல்லது தனிமைச் சிறைகளில் அடைக்கப்பட்டோ துன்பங்களை அனுபவித்தனர். கட்சியின்பேரிலும் நாட்டின் பேரிலும் இவைகள் நியாயமாக்கப்பட்டன. ஸ்டாலின் அப்போதும் சிறந்த தலைவராகவே சோவியத் மக்களால் கருதப்பட்டார்.

கட்சியின் நடவடிக்கைகளை விமர்சிப்பவர்கள் துரோகிகளாக்கப் பட்டு சிறைகளில் தள்ளப்பட்டனர். சிலருக்கு மரணதண்டனை வழங்கப் பட்டது. அதில் ஸ்டாலினின் மனைவியின் பெற்றோர், மனைவியின் தங்கை மற்றும் உறவினர் பலர்.

ஸ்டாலின் தனது இரண்டு ஆண் மக்களையும் போர் முனைக்கு அனுப்பினார். அவர்களில் ஒருவர் ஜேர்மானியப் படைகளால் சிறைபிடிக்கப்பட்ட போது அவரை மீட்பதற்கு ஸ்டாலின் முயற்சி எடுக்க மறுத்துவிட்டார். கைதிகள் பரிமாற்றத்திகு ஜேர்மானியர் கேட்டபோது "எல்லா சோவியத் கைதிகளும் எனது பிள்ளைகள் தான்" என்று கூறி மறுத்துவிட்டார்.

கட்சியின் சித்தாந்தம் புனிதமானதாக இருந்திருக்கலாம். ஆனால் அதை நடைமுறைப் படுத்த கொடுத்த விலை பன்மடங்கு.

கட்சிக்கும் சரி கட்சியின் காவலர்களுக்கும் சரி கண்கள் இருண்டிருந்திருக்கலாம். மருண்டவர்கள் எல்லாம் எதிர்ப் புரட்சிக்காரார்களாகப் பட்டனர்.

எதிர்ப்புரட்சிக்காரரை இனம் காணும் பொறுப்பு மத்திய குழு உறுப்பினர் லவெண்றி பெரியா விடம் இருந்தது. ஸ்டாலினுக்கு நெருக்கமானவர்கள், உறவினர்கள் பலர் அவர் பட்டியலில் இருந்தனர். ஸ்டாலினை மாசுபடுத்தி நாட்டைச் சிதைக்க எதிரிகள் முனையலாம் அதற்கு உகந்தவர்கள் ஸ்டாலினுக்கு நெருக்கமானவர்களே என்றொரு கருத்தும் அதே வேளை ஸ்டாலினைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற பெரியா முயன்றிருக்கலாம் என்றொரு கருத்தும் இருந்ததாகத் தெரிகிறது.

எதுவானாலும் ஸ்டாலின் தான் இறுதிவரை நீதிமானாக நடந்து கொள்ள வேண்டுமென்பதனால் தான் தன் உறவினர்கள், நண்பர்கள் மீது குற்றங்கள் சுமத்தப்பட்ட போதும் கருணை காட்ட் மறுத்துவிட்டார் என்ற கருத்து மேலோங்கி நின்றது எனவும் கருதப்பட்டது.

ஸ்டாலினின் முடிவு சடுதியானது. முதல் நாளிரவு மத்திய குழுவின் முக்கியஸ்தர்கள், குருஸ்சேவ் பெரியா ஈறாக, ஸ்டாலினின் வீட்டில் இரவுணவு உண்டபின்னர் மறுநாள் சுகவீன முறுகிறார். கட்சியின் நடவடிக்கை காரணமாக ரஷ்யாவின் மிகச் சிறந்த மருத்துவர்கள் எதிர்ப் புரட்சிக்காரர்களெனச் சிறையிலடைக்கப் பட்டிருந் தனர் ('Doctor Plot'). சிறந்த மருத்துவர் ஒருவருக்கு விடுதலை யளிக்கப்பட்டு சிகிச்சைக் காகாக் கொண்டுவரப்பட்டார். உரிய காலத்தில் முறையான சிகிச்சை யளிக்கப்படாமல் ஸ்டாலின் உயிரிழந்ததாகச் சொல்லப்பட்டது.

சில நாட்களில் பெரியா கைது செய்யபட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. குருஸ்சேவ் ஆட்சியில் அமர்கிறார். அவரது முதல் கடமை ஸ்டாலினைத் துரோகியாக்குவது. அவரால் சிறை வைக்கப்பட்டவ்ர்களை 'குற்றங்கள் நிரூபிக்கப்பட முடியாமையால்' விடுதலை பெற்றனர்.

மார்ச் மாதம் 5ம் திகதி, 1953 ம் ஆண்டு ஸ்டாலின் மரணமடைந்தார். மக்கள் அவரை வெறுத்தற்கான அடையாள்ம் ஏதுமின்றி ஸ்டாலினின் மரணச் சடங்கு சிறப்பாக நடந்தது.

ஸ்டாலின் நாட்டுடமையெனக் கூறி அவரது சொத்துக்கள் அரசினால் எடுக்கப்பட்டன. சுவெட்லானா தெருவில் விடப்பட்டார்.

ஸ்டாலின் ஒரு புரட்சிக் காரர். சர்வாதிகாரியாக வரவேண்டுமென்று அவர் நினைத்திருந்ததற்கான தடயங்கள் தெரியவில்லை ஆனால் அவரைக் கொடுங்கோலனாக மாற்றியதற்குரிய தடயங்கள் நிறையத் தெரிகின்றன. அதிலொன்று, சந்தேகம். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## AJAX NS DENTAL பற்சிகிச்சை நிறுவனத்தின் திறப்பு விழா







மாக்கம் நகரில் வெற்றிகரமாக இயங்கி வரும் மாக்கம் NS Dental தனது இரண்டாவது கிளையை அஜக்ஸ் நகரில் மிகவும் கோலகாலமா திறந்து வைத்தது. பாரளமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் பாரளமன்ற உறுப்பினர் ஹரி Mark Holland இணைத்து திறந்துவைத்தார்கள். அதி நவீன தொழில்நுற்ப வசதிகளுடன் திறந்துவைக்கப்பட்ட இந்நிறுவனம் அன்றைய தினம் ஏராளமான மக்கள் அங்கு வந்து கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

Operation Smile தன்னார்வ நிறுவனத்திக்கு திறப்புவிழாவை முன்னிட்டு நன்கொடையும் வழங்கப்பட்டது

மேற்படி திறப்பு விழாவை சிறப்பாக நடத்துவதற்கு திரு சுதர்சன் மற்றும் பல்வைத்திய நிபுணர் திருமதி நளினி சுதர்சன் ஆகியோர் தங்கள் குழுவினரோடு இணைந்து அனைத்து ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்து விருந்தினர்கள் அனைவரையும் மகிழ்வித்தார்கள். இந்நிகழ்வின் புகை பட காணொளிகளை ஈகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்




## கோலாகலமாக திறந்து வைக்கப்பட்ட Remax Ace நிறுவனத்தின் திறப்புவிழா




சர்வதேச மட்டத்தில் ரியல் எஸ்ரேட் (Real Estate) உலகில் புகழ் பூர்த்த நிருவனாமன Re/Max நிறுவனம் தனது புதிய Franchise கிளையை கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது Remax Ace நிறுவனமாக இது திரு ஸ்ரீ நடாராஜசுந்தரம் மற்றும் ரதீஸ் பரமலிங்கம் அவர்களின் நிர்வாகத்தில் 20 ற்கு மேற்ப்பட்ட புதிய real estate முகவரகளுடன் வெற்றிகரமாக திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் Councillor Michael Thompson , Councillor லோகன் கணபதி , மற்றும் remax நிறுவன அதிகாரிகள் கலந்துகொண்டு சிறபித்தார்கள். இந்நிகழ்வில் கனடிய நாடாளமன்ற உறுபினர்களான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் Salma Zahid ஆகியவர்கள் கலந்து சிறப்பித்து தமது வாழ்த்துச் செய்திகளை வழங்கினார்கள்

இந்நிகழ்வின் புகை பட காணொளிகளை ஈகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



# JUST LISTED BY MOHAN
## Residential Properties



**Markham / Denison.**

Gorgeous 3 Bedrooms House W/to Bottom Upgrades.
Very Bright & Spacious Home, Harwood Floo
New Oak Stircase.
Close To School, High Demand Area.



**Nelson/ McLevin**

BEAUTIFUL Renovated Open Concept Detached House.
Near Mall, School, Library Public Transit.
Very convenience location.



**Highway 7/ 9th Line.**

Gorgeous Detached Home.
2200 sq ft.
3+1 bedroom, 3 washrooms.
Hardwood Floor. 3 Years Old.



Mohan PANCHALINGAM
Sales Representative
**Dir: 647.321.7575**
E: mohan_panch@hotmail.com

RE/MAX COMMUNITY Realty Inc, Brokerage
Bus: 416.287.2222
Fax: 416.282.4488
1265 Morningside Ave., # 203
Toronto ON M1B 3V9


ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Remax Royal Properties Awards 2016

Sick kids மருத்துவமனைக்கு 10000 $ அன்பளிப்புடன் ஆரம்பமான Remax Royal Properties Awards 2016



















இந்நிகழ்வின் மேலதிக படத்தொகுப்பை ஈகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்



ekuruvi Night 2016. April 3,2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## InForce Group நிறுவனத்தின்
## பிரமாண்ட மூன்றாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் மற்றும் விருது வழங்கும் விழா !!










Inforcelife Financial services inc நிறுவனத்தின் முதலாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் மற்றும் விருது வழங்கும் விழா இந்த மாதம் The Estate Banquet மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது. நிறுவன அதிபர் சந்திரன் ராஜலிங்கம் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து நிறுவன வளர்ச்சியில் பெரிதும் உதவியவர்களுக்கும், இன்சூரன்ஸ் தொகையை பெற்றுத் தந்த ஆலோசகர்களையும் கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டது. மிக நேர்த்தியாக நிகழ்வு ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன

## கனடிய பாராளுமன்றத்தில் பொங்கல் விழா

கனடியப் பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக திரு.ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில். பாராளுமன்ற சபாநாயகர், அமைச்சர்கள், அங்கத்தவர்கள் கனடியத் தமிழர் சமூக அமைப்பினர்களுடன் "தமிழ் மரபுரிமைத் திங்கள்" பொங்கல் விழா Feb 01, 2016 அன்று சிறப்புற கனேடிய பாராளுமன்றத்தில் நடைபெற்றது. விழாவில் ஹரி ஆனந்தசங்கரி தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழியில் தமிழ் மரபு திங்கள், பொங்கல் சிறப்பு பற்றி உரையாற்றி, கனடிய பாராளமன்றத்தில் தமிழ் மரபு சட்டமூலம் கொண்டுவரப்படும் என நம்பிக்கை தெரிவித்தார் .

இவ்விழாவில் டொரொண்டொ , மொன்றியல் மற்றும் ஒட்டவா தமிழ் மக்கள் மற்றும் ஒட்டவா , கால்ட்டன் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்




நிகழ்வின் புகைப்படத் தொகுப்பை முழுமையாக பார்வையிட ekuruvi.com அழுத்தவும்.

**ekuruvi Night 2016. April 3 2016 அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்திற்குள்ளே (தீர்வு) வராவிட்டால் அது வரவே வராது

கடந்த மாதம் கனடாவுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இகுருவி மற்றும் தமிழ் இனி பண்பலைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் இருந்து —

**கேள்வி: உங்கள் கனடிய விஜயமானது புலத்திலும் களத்திலும் ஒரு ஒன்றிணைந்த தமிழர்களுடைய சக்தியினை வெளிப்படுத்துகின்ற நோக்கம் கொண்டதாக பார்க்கப்படுகின்றது. தாயகத்திற்கும் புலத்திற்குமான ஒற்றுமை எவ்வளவு தூரம் அரசியல் தீர்வு விடயத்திலே முக்கியமானது என்று பார்க்கின்றீர்கள்?**

பதில்: புலத்திலே வாழுகின்ற மக்களோடு, முக்கியமான அமைப்புகளோடு 2010 ஆம் ஆண்டிலிருந்து நிறைய தொடர்புகளை நாங்கள் வைத்திருக்கின்றோம். 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே தென் அமெரிக்காவிலே அமெரிக்க தேசிய காங்கிரஸனுடைய 100வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அங்கே நாங்கள் சந்தித்து இருந்தோம். அதில் இருந்து ஆரம்பித்த பயணம் பிறகு ஒரு கட்டத்திலே மக்கள் அவை அதோடு புலம் பெயர்ந்த மக்களை ஒன்றிணைந்து நாடு கடந்த அரசாங்கம் அவர்களோடும் சேர்ந்து சில பேச்சுவார்த்தைகளை நாங்கள் செய்திருந்த வேளையிலே நான்கு தடவைகள் நாங்கள் சந்தித்து ஒரு புரிந்துணர்வு ஒன்றுக்கு வருவதற்கு தெரிந்திருந்தோம். வெகுவாக அது நிறைவேறியும் இருக்கிறது. இறுதி தீர்வு சம்பந்தமான விடயத்திலே இருக்கின்ற சில மாறுபட்ட கருத்துகள், அவர்களுடைய இலக்கு ஒன்றுபட்ட நாட்டுக்குள்ளே தீர்வு என்று நாங்கள் சொல்லுகின்றதோடு ஒவ்வாத காரணத்தாலே அந்த மாறுபாடான நிலைப்பாடுகளைத் தவிர மற்றபடி உடனடியாக இருக்கக்கூடிய பிரச்சனைகள் தீர்வு, அரசியல் தீர்வு சம்பந்தமாக கூட ஒரளவு எங்களுக்குள் இணக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நாட்டிலே எங்களுடைய மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீது நம்பிக்கை வைத்து அதனை தேர்ந்தெடுத்து இருக்கின்ற அதே வேளையிலே, புலத்திலே இயங்குகின்ற முக்கியமான இயக்கங்கள், மக்கள் எங்களுக்கு தங்கள் ஆதரவை வெவ்வேறு விதங்களிலே தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆகையினால் அரசியல் தீர்வு என்று வருகின்ற போது, எங்களுடைய மக்களுடைய கருத்தை அறிந்துள்ளது மட்டும் அல்ல, புலம்பெயர்ந்த நாடுகளிலே வாழக்கூடிய மக்களின் கருத்துக்களையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆகையினாலே ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுடைய அபிலாஷை என்ன என்பதை தெரிந்து, அதை பெற்றுக் கொள்கிற ஒரு தீர்வைத்தான் நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம்.

**கேள்வி: தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கின்ற தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறு இருக்கும் அல்லது அரசியல் தீர்வு எவ்வாறு முன்வைக்கப்படுகின்றது?**

பதில்: நாங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கைகளிலே தொடர்ச்சியாக சொல்லிவந்த வண்ணமாக ஒரு சமஷ்டி குணாதிசயம் கொண்ட அரசியல் அமைப்பை தான் நாங்கள் எதிர்ப்பார்க்கின்றோம். அதை தான் நாங்கள் ஏற்றுக் கொள்வோம். ஏனென்றால் சமஷ்டி என்கின்ற கொள்கையிலே சில முக்கிய விடயங்கள், கோட்பாடுகள் உண்டு. அதிகாரப் பகிர்வு எப்படியானதாக இருக்க வேண்டும். பகிரப்பட்ட அதிகாரங்கள் அந்தந்த விடயங்கள் மேல் பூரணமானதாக இருக்க வேண்டும். பகிரப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் பெறப்பட முடியாத வண்ணமாக அமைய வேண்டும். ஆகவே இந்த முக்கிய பல கோட்பாடுகளுக்கு இணங்கியதான விதத்திலே புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பது எங்களின் திடமான நிலைப்பாடு.



**கேள்வி: எப்படி வடக்கு கிழக்கு இணைவு என்பதை சாத்தியமாக்கலாம் அல்லது வடக்கு கிழக்கு இணைந்து இருக்கக் கூடிய சவால்கள் அல்லது இணைந்த வடக்கு கிழக்கு ஊடாக ஒரு தீர்வு என்பதற்கான வாய்ப்புகள் எவ்வளவு தூரம் இருக்கிறது?**

பதில்: வடக்கு கிழக்கு இணைப்பு எங்களுடைய மிகவும் முக்கியமான அடிப்படை தீர்வு கோட்பாடாக இருக்கிறது. அந்த இணைப்பு 87 ஆம் ஆண்டு இலங்கை இந்தியா ஒப்பந்தத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் 18 வருட காலத்திற்கு பிறகு தற்காலிக இணைப்பு துண்டிக்கப்பட்டது. இன்றைக்கு அந்த இணைப்பு தற்காலிகமாகவே ஏற்படுத்தப்பட்ட இணைப்பு இன்றைக்கு இருந்திருக்குமே இருந்தால் அதனை தீர்விலே சேர்ப்பதிலே அவ்வளவு பிரச்சனை இருந்திருக்காது. ஆனால் துண்டிக்கப்பட்டு இன்றைக்கு இருக்கிற நிலையிலே இரண்டு வித்தியாசமான மாகாண சபைகள் என்றெல்லாம் இருக்கிற போது ஏதோ பொதுவாக அதனை கொண்டு வருவதை போன்ற ஒரு பிரதிபலன்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே பெரிய சவாலாகத்தான் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் முஸ்லீம் மக்களோடு, முஸ்லீம் தரப்பினரோடு, முஸ்லீம் அரசியல் தலைவர்களோடு நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளிலே இதற்கு சுமூகமான ஒரு தீர்வு ஏற்படுத்த முடியுமென்ற நம்பிக்கையை எங்களுக்கு கொடுத்திருக்கிறது. ஆனால் அதே வேளையிலேயே அப்படியான ஒரு இணக்கப்பாடு தமிழ் முஸ்லீம் தரப்பினரிடையே ஏற்படுகின்றது என்பது சரியான நேரத்திலே அல்லது பிழையான நேரத்திலே பிழையான விதத்திலே வெளிவருவதாக இருந்தால் அதுவே அதற்கு தடையாக கூட இருக்கலாம். ஆகையால் நாங்கள் கவனமாக இந்த விடயத்தை அணுக வேண்டும். முஸ்லீம் மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றபடியால் இதனை இணைக்க முடியாது என்கின்ற வாதம் வருகின்ற போது நாங்கள் அதனை சந்திக்க அந்த வாதத்தை முன் வைக்க வேண்டுமென்று நினைக்கின்றேன்.

**கேள்வி: 2016 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதா அல்லது அடையக் கூடிய இலக்காக நீங்கள் பார்க்கிறீர்களா?**

பதில்: 2016 ஆம் ஆண்டிலே ஒரு தீர்வு வருமென்று எங்களுடைய தேர்தல் பிரச்சாரத்தின் போது தலைவர் சம்பந்தன் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருந்தார். இப்போதும் சொல்லி வருகிறார். நாங்கள் அதை குறித்து அவருடன் உரையாடி இருக்கிறோம். பாராளுமன்றக் குழுவாக அவரிடத்திலே நாங்கள் சில கேள்வி கேட்டிருக்கிறோம். தான் அப்படி சொல்வதற்கான காரணங்களை, நியாயங்களை அவர் எங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறார். இப்போது ஏற்பட்டிருக்கிற ஒரு சந்தர்ப்பம் இதன் மூலமாக ஒரு தீர்வு வரவேண்டுமாக இருந்தால் அது இந்த வருடத்திற்குள்ளே வரவேண்டும். இந்த வருடத்திற்குள்ளே வராவிட்டால் என்றால் அது வரவே வராது. ஆகையினாலே அதை இந்த வருடத்திலே வருவிக்க வேண்டும். வரும் என்று சொல்லிவிட்டு மைத்திரி பாலா கொண்டுவருவாரா, ரணில் கொண்டுவருவாரா, சந்திரிகா கொண்டுவருவாரா இருந்து பார்ப்போம், இவர்களை நம்பலாமா என்று சொல்லிக்கொண்டு நாங்கள் கையை கட்டிக் கொண்டு இருந்தால் தீர்வு வரவே வராது. தீர்விற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. அந்த சந்தர்ப்பத்திற்குள்ளே தீர்வை வருவிக்க வேண்டும் என்றால் நாங்கள் அதற்காக உழைக்க வேண்டும். அதை வருவிக்க கூடிய தீர்வு எங்களிடத்திலே கூடுதலாக இருக்கிறது. அது எங்களுக்கு தேவையான தீர்வு. எனவே அதை நாங்கள் செய்கின்ற போது, அது வரவேண்டும் என்ற நம்பிக்கையுடன் தான் நாங்கள் செயல்படவேண்டும். ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்களுடைய தலைவர் சொல்லியிருக்கின்ற அந்த எதிர்ப்பார்ப்பு, அந்த நம்பிக்கையை நாங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த சந்தர்ப்பத்தை நாங்கள் உபயோகிப்பதாக இருந்தால் இந்த வருடத்திற்குள்ளே ஒரு தீர்வை நாங்கள் ஏற்படுத்த வேண்டும். அதை ஏற்படுத்தக் கூடிய பாரிய பொறுப்பு எங்கள் தோள்களிலும் இருக்கிறது என்ற அடிப்படையிலேயே நாங்கள் அதற்காக முழுமையாக உழைப்போம்.

*(பத்திரிகைக்காக திருத்தப்பட்ட பதிவு இது — இந்தச் செய்வியை முழுமையாக பார்வையிட இக் QR Code ஸ்கேன் செய்வதன் மூலமோ அல்லது www.biztha.com/video எனும் இணையத்தளத்திலோ பார்வையிடலாம் )* ●

**செவ்வி கண்டவர்:**
**எஸ்.ரமணன்**

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கனடா மூர்த்தி எழுதும்

# இகுருவி ஐயாவும் நானும்

## ‘அரசாங்கத்திற்கு விரோதமாக எழுதப் பயப்படக் கூடாது!”

‘ஐயா... வலென்ரைன் டேக்கு என்ன செய்தனியள்? சீனாக்கார பெட்டையள் ஆருக்காவது பூ.. கீவ்... கொடுத்தனியளே..?” என்று கலாய்த்தேன்.

சிரித்தார் இகுருவி ஐயா.

‘ஐயா... உங்கட பிறந்தநாள் அண்டைக்கு உங்களுக்கு நண்பர்கள் தந்த ஸப்ரைஸ் பார்ட்டியில சீனத்துப் பைங்கிளியள் உங்களுக்குப் பின்னால சுழண்டுகொண்டு நிண்டவையாமே... கனபேர் சொன்னவை... அதை கனடாவின் மூத்த பத்திரிகையாளர் ஒருவரும் குறிப்பிட்டிருந்தாரே... வாழ்வுதான்..” என்றேன் விடாமல்.

‘போடா.. போடா..” என மீண்டும் கூச்சப்பட்டார் 65 வயது இளைஞர். பிறகு ‘என்னவோடாப்பா... இப்பிடி அன்பைக் காட்டி என்னைப் பெருமைப்படுத்திட்டியள்...” என்றார். கண்ணாடியை கழற்றி கண்களைத் துடைத்துக் கொண்டார். கசிவு.

‘நீங்க இகுருவின்ரை ஆள் எண்டாலும் சக பத்திரிகைகளான ஈழநாடு, உதயன் எல்லாம் உங்களை வாழ்த்தியிருக்கினம்.. பாத்தியளே..”

‘ஒரு சாதாரண போட்டோக்கிராபரான எனக்கு உப்பிடி ஒரு அன்பான பிறந்தநாள் கொண்டாட்டத்தை எல்லாருமாச் சேந்து செய்திருக்கிறியள்... இதுக்கு நான் தகுதிதானோ எண்டுதான் யோசிக்கிறன்..” என்று மீண்டும் குரல் தழுதழுத்தார்.

‘அய்க்.. அய்க்.. ஆளின்ரை தன்னடக்கத்தை பாரு..” என்று மீண்டும் கலாய்த்த நான் ‘மூவாயிரம் பேருக்கு மேல உங்களை வாழ்த்தியிருக்கினம் ஐயா... அந்த ஸப்ரைஸ் பார்ட்டிக்கு திடீரெண்டு 150 பேருக்குக் கிட்ட வந்திருக்கினம்... இதெல்லாம் சும்மாவே... இனி நீங்க எலெக்சனிலகூட நிக்கலாம்போல..”

‘டேய்.. டேய்... வெளுத்துப்போடுவன்... ஒரு அளவுக்குத்தான் பகிடி விடலாம்... திடீரெண்டு என்னைப்பாத்து எலெக்சன் அது இது எண்டுறாய்... எல்லாரும் கரி ஆனந்தசங்கரி ஆகிட முடியுமே..” என்றார்.

‘அதுவும் சரிதான்.. உங்கட தலபோல் வருமா... எது எப்பிடியானாலும் வெற்றிகரமான 100 நாட்களைத் தாண்டிப் படம் ஓடுது..” என்றேன்.

‘அட.. ஓமடாப்பா... எலெக்சன் முடிஞ்சு அதுக்குள்ள 3 மாதங்களுக்கும் மேல ஆயிட்டுது என...! ம்.. லிபரல்கள் பதவிக்கு வந்து நூறு நாட்கள் ஆகிட்டுது..”

‘இந்த நூறு நாட்களுக்குள்ள லிபரல் அரசாங்கம் செய்த வேலைகளை கவனிச்சுப் பார்த்தா... சிரிய அகதிகளுக்கு ஜஸ்ரின் காட்டின தீவிரம் வியப்பளிக்குது.. அதே நேரம் கொன்சவேடிவை வெல்லுறதுக்காக சொல்லப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில பல நிறைவேற்றப்பட முடியாத நிலைமையில் இருக்குது எண்டதும் அவரால ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கு..”

‘அரசாங்கம் எண்டு வந்திட்டா அவருக்கு வேறசில பிரச்சனைகள் இருக்கும்..” என்றார் அவர் சமாதானமாக.

‘எலக்சனுக்கு முதலே அதையும் தெரிஞ்சு தேர்தல் வாக்குறுதிகளை வாரி வழங்கியிருக்கலாமெல்லே... என்னதான் சனம் மறந்திடும் எண்டாலும் அரசியல் ஆய்வாளர்கள் சிலர் நினைப்பில வச்சிருப்பினம் ஐயா..”

‘போடா.. மத்திய கிழக்கில கனடா படைகள் செய்த வான்வெளித் தாக்குதல்களை குறைச்சாச்சில்லே..”

‘அப்படிப்பாத்தா...??? நிலத்தில் நடாத்தப்படுகிற பயிற்சித் திட்டங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கெல்லே...!!?? வான்வெளி தாக்குதலைவிட இதில கனடா படைக்கு உயிராபத்து அதிகமெல்லே...” என்று நான் தாக்குதலை ஆரம்பித்தேன்.

‘இளையர் வேலைவாய்ப்புக்களுக் கான தொகையை ஜஸ்ரின் இரண்டு மடங்கு ஆக்கித் தந்திருக்கிறார்... அதையும் கவனி... அரசாங்கம் எண்டா சில கொம்ரமைஸ_கள் செய்யத்தான் வேணும்.. ஆனாலும் இந்த முறை வரவுசெலவுத் திட்டம் பற்றாக்குறையோடதான் வரப்போகுது எண்டும் வெளிப்படையா இப்ப லிபரல்கள் சொல்லிற்றினம்.. கேட்க கஸ்டமாத்தான் இருக்கு...” என்றார் அவர்.

‘இண்டைய நிலைமையில ஒரு அரசாங்கம் தன்ரை பட்ஜட்டை சமன்படுத்திறதுக்கு மக்களும் சில பிரச்சினைகளுக்கு முகம் குடுக்க வேணும்.. ஆனா இதுக்கு முன்னர் ஹாப்பர் சமன்படுத்தின பட்ஜட்டை தந்தார் எண்டதை மறக்கக் கூடாது..”

‘இனி என்ன நடக்கும் எண்டு பொறுத்திருந்து பாப்பம்.. நடக்கிற உண்மையளைப் பயப்பிடாமச் சொல்லத்தான் மீடியா இருக்கே.. நாங்க அரசாங்கத்திற்கு விரோதமாக எழுதப் பயப்படக் கூடாது..” என்றார் இகுவி ஐயா.

‘ஆனாலும் சில மீடியாக்கள் ஆதரவு விளையாட்டெல்லே செய்து விட்டு விடும்... போன எலெக்சனில சிபிசி வெளிப்படையாவே ஜஸ்ரினுக்கு உதவி செய்தது. சிபிசியின்ரை பீற்றர் மான்ஸ்ப்ரிட்ஜ்கூட கவனமா அதை செய்தார்..”

‘அது வேற கணக்கு.. அதைவிடு.. ஒரு அரசாங்கத்தைப் பற்றி நல்லாச் சொன்னோமெண்டா அது ஆளும் கட்சிக்கு சார்பாத்தான் போய் முடிந்துவிடும்...”

‘அது ஜால்ராவா இல்லாத வரைக்கும் சரி... இப்ப பாருங்கோ.. தமிழ்மக்கள் அதிகமா வாழுற இன்னொரு இடமான விற்பி—ஓஸாவாவில ஒன்ராறியோ சட்டசபைக்கான இடைத் தேர்தல் இந்த பெப்ரவரியில நடந்துது. ஒன்ராறியோ பிசி கட்சிக்கு ஆதரவா ஒன்ராறியோ எதிர்கட்சித் தலைவர் பற்றிக் பிரவுண் பிரச்சாரம் செய்தார். ஒன்ராறியோ லிபரல் கட்சிக்கு ஆதரவா ஒன்ராறியோ முதல்வர் கத்ரின்வீன் மட்டுமில்லை... கனடாப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் பிரச்சாரம் செய்தார். கடைசில விற்பி தொகுதியில இப்ப எதிர்க்கட்சியா இருக்கிற ஒன்ராறியோ பிசி கட்சின்ரை வேட்பாளர் லோர்ன் கோய் வெண்டிருக்கிறார். ஆனா மீடியாக்கள் அந்த வெற்றி பற்றி அதிகம் பேசவில்லை கவனிச்சீங்களே...” என்றேன்.

‘அது ஒரு இடைத்தேர்தல் தானேயடாப்பா..”

‘அதுதான் கவனிக்கப்பட வேண்டியது.. கனடா பிரதமர் ஜஸ்ரின் பிரச்சாரம் செய்து பார்த்தும், ஒன்ராறியோ முதல்வர் கத்லின்வீன் பிரச்சாரம் செய்து பார்த்தும் ஒன்ராறியோ எதிர்க்கட்சித்தலைவர் பற்றிக் பிரவுணின்ரை கட்சிதான் வெண்டிருக்கு.. இந்த விசயத்தைபற்றி பெரிய மீடியாக்கள் மட்டுமில்லை எங்கட பேஸ்புக் மேதைகளும் — தமிழ் ஆக்களைத்தான் சொல்லுறன்.. — அதிகம் கவனிக்காம மெதுவா நழுவிற்றினம்..”

‘இடைத்தேர்தல் முடிவு ஒண்டால அரசாங்கத்திற்கு தோல்வி எண்டு சொல்ல ஏலாது. அது பி.சி. கட்சின்ரை தொகுதி.. அதாலதான் பலர் அலட்டிக்கொள்ளேல்ல. அது மட்டுமல்ல நம்மட பிரதமர் வந்தது முதல்வருக்கு அவர் நன்றி செலுத்தும் நிகழ்வாக இதை பார்க்கலாம் ...” என்றார் பிரதமருக்கு ஆதரவாக ..

‘அதுவல்ல பிரச்சனை.. அரசாங்கத்திற்கு விரோதமாக எழுதுதில எடுக்கிற அதீத கவனம்தான் பிரச்சினை.. புலிகளின் ரை அரசாங்கம் இருக்கேக்கை அதைப்பற்றி விரோதமா ஆரும் எழுதிறதில்லை... அதுக்குப் பிறகு பலர் மகிந்தா அரசை போட்டு தாக்கு தாக்கெண்டு தாக்குவினம்... இப்ப அவையே மைத்திரியின்ரை அரசாங்கத்திற்கு எதிரா எழுதிறத தவிர்க்கிறதில வலு கவனமா இருக்கினம்.. அரசாங்கம் எண்டு ஒண்டு கிடந்தா அதன் நடவடிக்கைகளை விமர்சிச்சு தைரியமா எழுதோணும்..”

‘நீசொல்றதும்சரிதான்..அரசாங்கம் எண்டா அது மக்களின்ரை சொத்து.. அதை விமர்சிக்கப் பயப்பிடக் கூடாது..” என்றார் இகுருவி ஐயா.

‘அந்த அரசாங்கங்கள் கிடக்கட்டும் ஐயா. நாடுகடந்த தமிழீழ அரசின்ரை தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டத்திற்கு போனனீங்களெல்லே... நீங்க எடுத்த படங்களைப் பாத்தனான்... நிகழ்ச்சி நல்லா இருந்திருக்கும்.. ஆனா மேடையின்ரை பின் பக்கத்தில போட்டிருந்த படங்கள்தான் பாக்கிறதுக்கு ஒரு மாதிரியா இருந்துது..”

‘நீ என்னடாப்பா குண்டு வீசுறாய்... நடுவில திருவள்ளுவர் படமும் அதைச் சுற்றி கனக்கத் தமிழறிஞர்கள் படங்களும் இருக்கிற மாதிரி ஒரு பெரிய பானர்

ekuruvi Night 2016. April 3,2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருந்தவங்கள்... அதில என்ன குற்றம் கண்டுபிடிக்கிறாய்?"

'தமிழ் மரபு எண்டுட்டு அதுக்குத் தமிழ்நாட்டிலதான் இருந்தவையின்ர படங்ளைத்தான் போட வேணுமே...? ஈழத்து அறிஞர்கள் கொஞ்சப்பேற்ர படங்களையும் போட்டிருந்தா நல்லா இருந்திருக்குமெல்லே..."

'ஓ... அதில திருவள்ளுவர் மட்டுமில்லை... எம்ஜிஆர் இப்பிடி கனபேற்ரை படங்கள் கிடந்தது... பொருத்தமில்லாத ஆக்களிரை படங்களை போட்டிட்டினம் எண்டுறியோ?"

'சே... சே... எங்கட தமிழ் மரபில திருவள்ளுவருக்கும் இடம் இருக்கு... எம்ஜிஆருக்கும் இடமிருக்கு... அதுவல்ல என்ரை முறைப்பாடு... அதில ஒரு ஈழத்தமிழாக்களின்ரை படமும் இருக்கேல்ல எண்டுறது என்ர அவதானம்."

'ம்... சொல்லு..." என்றார் இகுருவி ஐயா.

'மரபு எண்டுறது எங்கட விழுமியங்களை தொடர வைக்கிற முயற்சில ஈடுபட்டிருக்கிற ஆக்களின்ரை செயல்பாட்டால உருவாகிறது... எங்கட தமிழ்ப் பண்பாட்டின்ரை மரபுசார் தொடர்ச்சிக்கு ஈழத்தமிழர்களும் சம அளவில பங்காற்றியிருக்கினம்... ஆறுமுக நாவலர், ஆனந்தக் குமாரசாமி, விபுலானந்த அடிகளார், தனிநாயகம், கலையரசு சொர்ணலிங்கம், வி.வி.வைரமுத்து, கைலாசபதி, சிவத்தம்பி, எஸ்பொ எண்டு எத்தினையோ பேர் இருக்கினம்... இவையளும் திருவள்ளுவர் மாதிரி தமிழ் மரபினரை உயர்ச்சிக்கு பங்காற்றினவை... ஏன் எங்களோட இருந்து சமீபத்தில மறைஞ்ச அதிபர் கனகசபாபதியைக்கூட நாங்க மரபுத்திங்களில நினைவு கூரலாம்... இவையைப்பற்றி நாங்களே சொல்லாம விட்டா... பிறகு ஆர்தான் கொல்லப்போயினம்?"

'நீ என்ன இப்பிடிச் சொல்லுறாய்...? மரபுத்திங்களில கோயில் கட்டினதையும், பண்டைய இலக்கியங்களையும், காவியங்களையும் தந்தவையையும்தான் நினைக்க வேணும் எண்டு நினைக்கிறன்."

'அட போங்கையா... குழந்தையளுக்கு பஞ்சால தாடி ஒட்டி திருவள்ளுவர் எண்டுறதும், தலையை வெள்ளையாக்கி ஔவையார் எண்டுறதுமா ஒண்டையே திருப்பி திருப்பி செய்யிறதுதான் மரபுத்திங்கள் எண்டா எங்கட அறிவுத்திறமையில ஒரு குறைபாடு இருக்கு எண்டுதான் நான் சொல்லுவன். புதிசு புதிசா நாங்களும் தேட வேணும்."

'புதிசு புதிசா எண்டா???" என்று குழம்பினார் இகுருவி ஐயா. 'மரபில எதையடா புதிசு புதிசா தேடுறது?" என்றார் கிண்டலாக.

'அப்படிக் கேளுங்கோ... தமிழ் மரபில கனக்க இருக்கு... கட்டிடக்கலை மரபு, இலக்கிய மரபு, நாடக மரபு... எண்டு கனக்க இருக்கு.. உதாரணத்துக்கு தமிழ்ச் சமூகத்திற்கு வீரமரபை போதிக்க வந்தவையின்ரை வரிசையை பட்டியல் போட்டுப்பாருங்கோ.. இண்டைவரைக்கும் எத்தினையோபேர் அதில இருக்கினம்... தமிழரிடம் வீர மரபு இருந்ததைப்பற்றி பேசினா இண்டைய ஆயுத இயக்கத் தலைவர்ளைப்பற்றிவரைக்கும் பேசலாம்.. தமிழ்க்கடவுள் யார்? ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் எண்டு ஆரம்பிச்சு இண்டைய காலகட்டம்வரை வரலாம்... பிரபாகரன் கூட தமிழற்ரை வீரமரபிற்கு பங்களிப்புச் செய்த ஒருவர் எண்டும் சொல்லலாம். இது புதிசு.. பழசோட புதிசு..."

'ஆ... என்னடா இப்பிடிச் சொல்லுறாய்... மரபுத்திங்களில இப்பிடி எல்லாம் செய்யப்போனா பிறகு சண்டையள்தான் வந்து முடியும்... பாதுகாப்பா இருக்கவேணுமெண்டா பிரச்சினைகளை அவொய்ட் பண்ணுறதுதான் நல்லது. குறிப்பா அரசாங்கங்களுக்கு விரோதமா நாங்க போகக்கூடாது..."

'அரசாங்கம்தான் உங்களுக்கு திருப்பியும் பிரச்சனையோ? எந்த அரசாங்கம்? கனடா? ஸ்ரீலங்கா? இந்தியா? எந்த அரசாங்கம்? ஒண்டு சொல்லுறன்.. மரபு எண்டா என்னவெண்ட விவாதங்களை வைக்கிறதுகூட மரபுத்திங்களில செய்யக்கூடிய விசயங்கள்தான்... அதை ஆய்வுரீதியில செய்யிறதுக்கும் இந்த மாதத்தைப் பயன்படுத்த வேணும்..."

'அது சரியடாப்பா... ஆனா விமர்சனங்கள் வருமெல்லே..."

'வரும்தான்...! அதுக்காக?? ஆரை வணங்கிறது ஆரை விடுகிறது எண்டது காலமும் மக்களும் சேர்ந்து தீர்மானிக்கிற விசயம்.. காலம் உருவாக்கிற ஆக்களைத்தான் உருவத் திருமேனியாக நாங்க வழிபடுகிறம். எல்லாரையும் இல்லை... லெனின் உருவம் இப்ப ஆராதனை செய்யப்படுவதில்லை. ஆயிரம் ஆயிரமா எத்தினையோபேர் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தாலும் நாயன்மாரா அறுபத்தினான்குபேரைத்தானே நாங்கள் பூசிக்கிறம்.. விழிப்புணர்வை உருவாக்கிற எந்த விசயத்தையும் நாங்க தைரியமா செய்து பாக்கலாம்... அதில தவறே கிடையாது..."

'அடுத்த தலைமுறைக்கான விழிப்புணர்வு வர நடத்துறதுதான் மரபுத் திங்கள் எண்டு மட்டும் ஏற்பாட்டாளர்கள் நினைக்கிறதா இருக்கலாமெல்லே..."

'அதையே ஏற்பாட்டாளர் களுக்கு மரபு பற்றின ஆழ்ந்த அறிவு கிவீடாது எண்டும் மற்றவை நினைக்கலாம். அடுத்த தலைமுறைக்காகத்தான் மரபுத்திங்கள் செய்யிறம் எண்டா இன்னும் கவனமாக இருக்கோணும்.. இண்டைய தலைமுறையைவிட அடுத்த தலைமுறை பயங்கர ஸ்மார்ட்... அதுக்கு ஒரு குட்டிக் கதை சொல்லுறன் கேளுங்கோ."

'சொல்லு..."

'தமிழ்மரபில ஆர்வம் உள்ள ஒருத்தர் தன்ரை குழந்தைக்கு பாரி மன்னன் பற்றி கதை சொல்லியிருக்கிறார். ஒரு முல்லைக் கொடியின் வாட்டத்தைப் போக்கி அது படர வளர பாரி மன்னன் தன் தேரையே தந்த கதையை உருக்கமாக சொல்லியிருக்கிறார். அதைக் கேட்ட குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது..."


'ஏனடாப்பா?"

'ஒரு கொடிக்காக இப்ப தன்ரை தேரை ராசா கொடுத்துட்டார். இனி ராசாவுக்கு புதுத் தேர் வேணுமே... புதுத் தேர் செய்ய இனி எத்தினை மரங்களை ராசா வெட்டப்போகிறாரோ என்று நினைத்து — வெட்டப்படப்போகிற மரங்களுக்காக பரிதாபப்பட்டு — குழந்தை அழ ஆரம்பித்துவிட்டதாம்..." ●


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே?

**எழுதி இசையமைத்து முதலில் பாடிய கலைஞர் எம்.எஸ்.கமலநாதன் மறைவு**



“சின்ன மாமியே உன் சின்னமகளெங்கே ? என்ற இலங்கையின் பெப்பிசைப் பாடல் பட்டிதொட்டியெங்கும் பிரபலமானது.

இலங்கை இசை வரலாற்றில் பொப் இசைக்குத் தனி அத்தியாயம் உண்டு. கர்நாடக இசை,தமிழ் இசை ஆகியவற்றுக்கு மத்தியில் ஈழத்து மெல்லிசை வளர்ச்சி கண்டது. மெல்லிசைப் பாடல்கள் மேலெழுந்து வரும்போது பொப் பாடல்கள் ரசிகர்களின் மத்தியில் பிரபலமாகின. இலங்கை வானொலி ஈழத்து மெல்லிசைப்படல்களுக்கும் பொப் இசைப்படல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததனால் இலங்கையைத் தாண்டி தமிழகத்திலும் அப்பாடல்களுக்கு பெரிய வரவேற்பு இருந்தது.

“சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே” அன்றைய பொப் பாடல்களில் மிகவும் பிரபலமானது.

இலங்கையில் மாத்திரமல்லாமல் இந்தியாவிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பிரசித்தமான பாடல்தான் “சின்ன மாமியே உன் சின்னமகளெங்கே? பள்ளிக்குச் சென்றாளோ படிக்கச் சென்றாளோ ?' இலங்கை வானொலியில் தினசரி தவறாமல் ஒலிபரப்பாகும் இந்தப் பாடல் தமிழ்த் திரைப்படங்கள் சிலவற்றிலும் இடம்பெற்றுள்ளது.

இலங்கை வடமராட்சியைச் சேர்ந்த கலைஞர் எம்.எஸ்.கமலநாதன் எழுதி இசையமைத்த இந்தப் பாடலை ஒலிப்பதிவு நாடாவுக்காகப் பாடியவர் நித்தி கனகரத்தினம்.

ஆனாலும் இந்தப் பாடலை இயற்றி இசையமைத்து முதலில் பாடியவர் எம்.எஸ்.கமலநாதன் என்ற உண்மை காலம் கடந்து வெளியானது.

இளைஞர்களை பெரிதும் வசீகரித்த இந்தப் பாடலை இயற்றிய எம்.எஸ்.கமலநாதன் தனது 77வது வயதில் இலங்கையில் வடமராட்சியில் ஜனவரி மாதம் இயற்கை எய்தினார்.

கடந்த சில மாதங்களாக சுகவீனமுற்றிருந்த எம்.எஸ். கமலநாதன், வடமராட்சியில் சிறந்த கல்விப் பாரம்பரியத்தின் பின்னணியிலும் கலை, இலக்கிய ஊடகத்துறை செயற்பாட்டாளர்களின் பின்னணியிலும் வாழ்ந்தவர்.

இவர் சிறந்த உதைபந்தாட்ட வீரர். பின்னர் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு மத்தியஸ்தராகவும் விளங்கியவர்.

பாடல் புனையும் ஆற்றலும் இவருக்கிருந்தமையால் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் எழுதிய பாடல்தான் ”சின்ன மாமியே”.

இருந்தபோதிலும்இந்தப்பாடலை மேடைகள் தோறும் பெப்பிசைப் பாடகர் நித்தி கனகரத்தினம் பாடிக்கொண்டிருந்தமையால், எம்.எஸ்.கமலநாதனின் பெயர் வெளியில் தெரியவில்லை. எனினும் காலம் கடந்தாலும் இந்தப் பாடலின் ரிஷிமூலம் அண்மையில் தான் வெளிச்சத்திற்கு வந்தது

ஒரு காலகட்டத்தில் ஏ.ஈ. மனோகரன், நித்தி கனகரத்தினம், தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் அமுதன் அண்ணாமலை, இராமச்சந்திரன், முத்தழகு முதலான பலரால் பொப்பிசைப் பாடல்கள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பிரபல்யம் பெற்றனர்.

ஆனால் , அவர்கள் பாடிய பாடல்களை இயற்றியவர்கள் பற்றிய செய்தியை பாடியவர்களும் சொல்ல முன்வரவில்லை. ரசிகர்களும் கேட்கவில்லை. ஊடகங்களும் கண்டுகொள்ளவில்லை.

இதனால் இந்தப் பாடலாசிரியர்களும் அறியப்படாமல் மறைந்து விடுகின்றனர். எழுதியவர்களும் உரிமை கோருவதற்கு முன்வராமல் அடக்கம் பேணிவிடுவார்கள்.

இது பற்றி வானொலி நிலையமொன்றுக்கு அளித்த நேர்காணலொன்றில் நித்தி கனகரத்தினம் அளித்த விளக்கத்தில் தனக்கு இப்பாடலை எழுதியவர் எம்.எஸ்.கமலநாதனே என்ற விடயம் 2001இல் தான் தெரிய வந்தது என்று கூறியிருக்கின்றார்.

ஆனாலும் அவருக்கான அங்கீகாரம் எந்த ஒரு இடத்திலும் வழங்கப்படாமல் அவரது வாழ்வும் முடிவுக்கு வந்துள்ளது.

திரைப்படப் பாடலொன்றினைக் கேட்கும்போது அதன் இசையமைப்பாளரை நினைத்துக் கொள்கின்றோம். அதனைப் பாடியவர்களை நினைத்துக் கொள்கின்றோம். அதனை எழுதியவர்களை நினைத்துக் கொள்கின்றோம். எல்லாருடைய கூட்டு முயற்சியில் தான் அந்தப் பாடல் வெற்றி பெற்றிருக்கின்றது என்பதையும் நினைத்துக் கொள்கின்றோம்.

பட்டி தொட்டியெங்கும் புகழ் பெற்ற துள்ளிசைப்பாடல் 'சின்ன மாமியே உன் சின்ன மகளெங்கே?' ஆனால் அதனை எழுதியவரின் பெயரை அறிவிக்காமல் பலரும் பல ஆண்டுகளாகப் பயன் அடைந்திருக்கின்றார்கள். பாடலாசிரியருக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல் போயிருக்கின்றது.

பல தலைமுறைகளாக ”சின்னமாமியே” புலம்பெயர்ந்த நாடுகளில் நடக்கும்இசை களியாட்ட நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி, வீடுகளில் நடக்கும் பிறந்தநாள் விருந்துகளிலும் ஒலிக்கிறது.

அக்கினியில் சங்கமமான இந்தக் கலைஞரின் பாடல் வரிகள் இன்றும் மங்காமல் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

அந்த வேளைகளில் இந்தக் கலைஞனையும் ஒருமுறை நினைவில் கொள்வோம்.

கலைஞன் எம்.எஸ்.கமலநாதனுக்கு எமது அஞ்சலி. ●

**இகுருவிக்காக ராகவி**




ekuruvi Night 2016. April 3 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையின் உளவளர்ச்சியில்

# பெற்றோரின் நெறிப்படுத்தல்!



பேராசிரியர் இ. பாலசுந்தரம்

பிள்ளைச் செல்வத்தின் அருமை பெருமைகளை நம் முன்னோர்; சங்க காலம்முதலாக இலக்கியங்களில் குறிப்பிட்டு வந்துள்ளனர். பிள்ளைச் செல்வத்தினால் இம்மை, மறுமைப் பயன்கள் கைகூடும் என அகநானூறு (96), திருக்குறள் முதலான நூல்கள் பிள்ளைகளின் பெருமை பேசுகின்றன. இல்லற வாழ்க்கையில் எத்தகு பெருஞ் செல்வத்தைப் பெற்றோர் பெற்றிருந்தாலும் குழந்தைச் செல்வம் இல்லாவிட்டால் அந்த வாழ்வில் முழுமையான பயன் எதுவும் இல்லை என்றும், அவர்களின் வாழும் ஆயுட் காலமும் குறுகிவிடும் என்றும்; கருதும் அளவுக்குப் பிள்ளைச் செல்வத்தின் பெருமைகளை நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் அருஞ் செல்வங்களாகிய பிள்ளைகளைத் தக்க முறையில் நலமாகவும் உளநல வளர்ச்சியோடும் பேணி வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் கடமைகளும் பொறுப்புகளும் அளப்பரியன.

பிள்ளைகளின் முழுமையான வளர்ச்சி, அவர்களின் திறன்கள், சாதனைகள் என்பனவற்றைத் தம் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்காகப் பெற்றோர் பல அர்ப்பணிப்புக்களைச்செய்கின்றனர். அவற்றைப் பிள்ளைகள் தம் பாலர் பருவத்திற் புரிந்துகொள்வதில்லை. பிள்ளைகள் வளர்ந்து பெற்றோரைப் புரிந்துகொள்ளும் பக்குவத்தை அடைவதற்குரிய கால இடைவெளி மிகப் பெரிதாகும். பெற்றோரின் உணர்வுகளைப் பிள்ளைகள் சிறு வயதிலேயே புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகப் பெற்றோர் தாம் எடுக்கும் முயற்சிகளில்; அவர்கள்; சில சந்தர்ப்பங்களில் மனம் புண்பட்டுப்போவதும் உண்டு.

பிள்ளை வளர்ப்பிற் பல அணுகுமுறைகள் உள்ளன. பிள்ளை வளர்ப்போர் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட போம்றிண்ட் (Baumrind-1976) என்பவர் சில பெற்றோர்; அதிகார தோரணை, கட்டுப்பாடான முறை, என்பனவற்றின் மூலம் துடிப்பும், இன்ப நலநோக்கும், ஆற்றலும் மிக்க பிள்ளைகளை இவர்கள் உருவாக்குகின்றனர் என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்;. பிள்ளை வளர்ப்பு முறையில் அவரவர் பண்பாடும், மத ஒழுகலாறுகளும், தாம் வாழும் நாட்டுச் சூழலும், அவ்வந் நாட்டுச் சட்டஒழுங்கு விதிகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. பிள்ளை வளர்ப்பிலும் அவர்களை நெறிப்படுத்தலிலும் அதிமிஞ்சிய கட்டுப்பாடும் அதிகாரப் போக்கும் உகந்தவை அல்ல. பெற்றோர் எதற்காகப் பிள்ளைகளைக் கட்டுப்படுத்துகின்றனர்;? பிள்ளையுடன் ஏன் கண்டிப்பாக நடந்து கொள்கின்றனர்? என்பதைப் பிள்ளைகள் உணர்ந்துகொள்ளச் செய்வதிலேயே பெற்றோரின் முயற்சியின் வெற்றி தங்கியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும்போது அவர்கள் அதனை விளங்கிக் கொள்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளுதல் முக்கியமானது. பெற்றோர் கூறும் அறிவுரைகள், கட்டளைகள் என்பவற்றைப் பிள்ளைகள் புரிந்துகொள்ளும் பக்குவத்தை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

"பிள்ளை நல்லவராவதும் வல்லவராவதும் அன்னை வளர்ப்பிலே" என்ற வாசகம் மிகவும் பொருள் பொதிந்ததாகும். குழந்தை பிறந்து சுமார் மூன்றாண்டுகள் வரையும் பெற்றோரின் நேரடிக் கண்காணிப்பில் வளர்கிறது. பின்னர் அப்பிள்ளை பாலர் முன்பள்ளிக்குப் (Pree-school) போகத் தொடங்கியதும், அதன் நடத்தையிலும் உளப்போக்கிலும், பேச்சிலும் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றோர் அவதானிக்கின்றனர். சிலவேளைகளில் அதிர்ச்சியடையக் கூடிய அளவில் சில பிள்ளைகளின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுவதுமுண்டு. பாடசாலைக்குச் செல்லும் அவ்வாறான பிள்ளையிடம் சில தகாத பழக்கவழக்கங்கள் வந்து சேர்கின்றன. அவற்றைப் பெற்றோர் அறிந்ததும் உடனடியாகத் திருத்த முற்பட வேண்டும். அதற்குத் துணையாக ஆசிரியரையோ, பாடசாலை நிர்வாகத்தையோ அணுகவேண்டியது பெற்றோரின் கடமை. பிள்ளையிடம் காணப்படும் அக்குறைபாட்டை உடனடியாகப் போக்க முயற்சி எடுக்காவிட்டால், அதுபெரிதாகவளர்ந்துபிள்ளையின் படிப்பையும் எதிர்காலத்தையும் பாதித்துவிடலாம்.

பிள்ளைகளின் வாழ்விடச் சூழலும் அவர்களின் ஆரோக்கியமான உளநிலை வளர்ச்சிக்குத் துணையாகின்றது. பெற்றோர் தமது வீட்டை அழகாக ஒழுங்குபடுத்தி வைத்திருக்கும் முறையும் பிள்ளையின் படிப்புக்கு ஏற்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. சிறுபிள்ளைகளின் நடத்தையில் பெற்றோர் எப்போதும் கவனம் உடையவர்களாக இருத்தல் அவர்களின் பொறுப்பாகும். பிள்ளைகளிடம் குறும்புத்தனம், சொற்கேளாமை முதலான பண்புகள் காணப்படுதல் இயல்பே. பிள்ளைகள் வீட்டிலுள்ள பொருட்களை எல்லாம் ஒழுங்காக வைக்க விடுகிறார்களில்லை; எல்லாவற்றையும் இழுத்துக் குழப்பி வைக்கிறார்கள் ; வீட்டைக் குப்பையாக்குகிறார்கள் என்பன போன்ற குற்றச் சாட்டுக்களைப் பிள்ளைகள்மீது பெற்றோர் சுமத்துவர். இத்தகைய குற்றச் சாட்டுக்கள் அனைத்துக்கும் பொறுப்பானவர் பெற்றோரே. பிள்ளைகள் சுதந்திரமாக நடந்து திரிவதற்கும் விளையாடுவதற்கும் ஏற்ற வகையில் வீ;ட்டின் உட்புறச் சூழலை அமைத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு எவ்வகையிலும் இடையூறு ஏற்படாவாறு பாதுகாப்புள்ளதாக வீடு அமைந்திருக்க வேண்டும். பிள்ளைகள் வீட்டினுள் விளையாடுவதற்கு இடம் அமையும் வகையில் பொருட்களை ஒழுங்குபடுத்தி வைத்திருத்தல் நல்லது. தொலைக்காட்சி, அலுமாரி என்பனவற்றையும் பாதுகாப்பான இடத்தில் வைத்தல் அவசியம். சமையலறையிற் கத்தி, மற்றும் கூரான கருவிகளைக் குழந்தைகள் பயன்படுத்தாத வகையிற் கவனித்துக் கொள்வதோடு, சமையலறைக்குள்; பிள்ளைகள் பாதுகாப்பாகவும் கவனமாகவும் நடந்துகொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

வீட்டில் அனைத்தும் ஒழுங்காக இருக்குமாயின் பிள்ளை பாடசாலையிலிருந்து வந்ததும் தன் பாடசாலைப் பொருட்களை ஒழுங்காக வைத்துக்கொள்கிறது. வீட்டுப்பாடவேலைகளை ஒழுங்காகச் செய்து முடிக்கிறது. அப்பிள்ளை காலையில் பாடசாலைக்குப் புறப்படும்போது பாடசாலைக்குக் கொண்டுபோகும் பொருட்களை எளிதில் எடுத்துக்கொள்கிறது. இத்தகைய செயற்பாடுகள் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைக்கு உற்சாகத்தைக் கொடுப்பதோடு, ஒழுங்குமுறையையும் கற்றுக் கொடுக்கிறது. வீட்டிலுள்ள இந்த நடைமுறைகள் அப்பிள்ளை பாடசாலையிலும் தனது வகுப்பிலும் ஒழுங்காகச் செயற்படுவதற்குரிய பயிற்சியாகவும் அவை அமைகின்றன.

பிள்ளைகளின் உணவு விடயத்திலும் ஒழுங்குமுறை கடைப்பிடிக்கவேண்டும்.பிள்ளைகள் உரிய நேரத்தில் சாப்பிடப் பழக்க வேண்டும். பல வீடுகளிற் பிள்ளைகள் தொலைக்காட்சி அல்லது ஐபாட் பார்ப்பதில் இருந்துகொள்வர். பெற்றோர் சாப்பாட்டிற்கு அழைத்தாலும் நிகழ்ச்சிகளைப் பார்த்து முடித்த பின்னரே குழந்தைகள் சாப்பிடுவதை அவதானிக்கலாம். குழந்தைகளுக்கு உணவுப் பழக்கம் மிக முக்கியமானது. உணவுப் பழக்கம் சீராக அமையும்போதே பிள்ளைகளுக்குப் படிப்பும் நன்கு அமைவதாகக் கூறப்படுகின்றது. பிள்ளைகளை அதிக பசி, களைப்பு, சலிப்பு என்பவற்றுடன் இருக்க விடக்கூடாது. வெளியே செல்லும்போது பிள்ளைகள் விரும்பும் சிற்றுண்டிகளையும் விளையாட்டுப் பொருட்களையும் எடுத்துச் செல்லுதல் வேண்டும். அவர்கள் அடம்பிடித்தல், பிற பிள்ளைகளுடன் சச்சரவுக்குச் செல்லுதல் ஆகிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள இது உதவியாக அமையும்.

வீட்டுப்பாட வேலைகளைப் பிள்ளைகள் ஒழுங்காகச் செய்து கொள்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். பாடசாலை முடிந்து பிள்ளை வீட்டுக்கு வந்ததும் அவர்கள் தமது வீட்டுப்பாட வேலைகளைச் செய்து முடிப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்து கொடுக்க வேண்டும். சில பிள்ளைகள் பாடசாலையிலிருந்து வந்ததும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் முழு நேரத்தையும் செலவிடுகிறார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் நியாயமான ஒழுங்கு விதிகளைப் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கூறுதல் வேண்டும். பிள்ளையின் நடத்தைக்கு எதிர்மாறாக இல்லாமல், குறிப்பிட்ட அளவு நேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதற்கு ஒதுக்கிக் கொடுக்கலாம். வீட்டுப்பாட வேலை முடிந்ததும் தமது பொழுதுபோக்கை மேற்கொள்ளும்படியான கட்டளைகளை அன்பாக, வரன்முறைகளோடு அமைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

ekuruvi Night 2016. April 3,2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





TVI Superstar Grand Finale நிகழ்வின் படத்தொகுப்பு இந்நிகவின் மேலதிக படத்தொகுப்பை ஈகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்









**Life100 நிறுவனத்தின் விருது வழங்கும் விழா**

ஸ்ரீதரன் துரைராஜா அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் Life100 நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்ற புகைபடக்காட்சிகள் காணொளிகளை ஈகுருவி இணயத்தளத்தில் பார்வையிடலாம்







ekuruvi Night 2016. April 2,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உயிர்ப்பு 5

உயிர்ப்பு பெண்கள் நாடகப் பட்டறையின் ஐந்தாவது மேடையேற்றம் மார்ச் மாதம் 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறுகின்றது.

2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உயிர்ப்பு பெண்கள் நாடகப் பட்டறை இதுவரையில் நான்கு நிகழ்வுகளை நடாத்தி முடித்திருக்கின்றது.

''உயிர்ப்பு" நிகழ்வுகள் விழிம்பு நிலை மக்களின் குரலாய் நாடகங்களின் மூலம் ரொரொன்டோவில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

புதிய இயக்குனர்கள், நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒரு நாடக அமைப்பாக உயிர்ப்பு நாடகப்பட்டறை அமைந்துள்ளது. சீரிய நாடகங்களை எழுதித் தயாரிப்பதற்கு ஆர்வமுள்ளவர்களை தம்முடன் இணைத்துக் கொள்ள உயிர்ப்பு ஆர்வமாக உள்ளது.

மார்ச் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் உயிர்ப்பின் 5ஆவது நிகழ்வில் மூன்று நாடகங்கள் மேடையேற உள்ளன.

### மீராபாரதியின் எழுத்து இயக்கத்தில் - 'கங்கு'

தணலாய்த் தகித்து கொண்டிருக்கும் மனித மனங்கள், உணர்ச்சிகள், உணர்வுகள் என்பவற்றின் பிரதிபலைப்பாய்த் தோற்றம்பெற்றிருப்பதே கங்கு என்னும் இந்த அரங்க அளிக்கை.

'ஒடுக்கப்பட்டவருக்கான அரங்கு' என்ற அரங்க அணுகுமுறையின் அடிப்படையில், பங்களிப்போர் எல்லோரினதும் கூட்டு முயற்சியில் உருவாகியதே இந்தப் படைப்பு.

ஈழத் தமிழ் சமூகம் பல்வேறு ஒடுக்குமுறைகளை புறவயமாக எதிர்கொண்டபோதும் அது தனக்குள்ளும் பல்வேறு அக அடக்குமுறைகளை கொண்டிருக்கின்றது. இந்த முரண்பாடுகளின் சிறு துளியாய்க் கனல்கிறது கங்கு.

### இளங்கோவின் எழுத்து இயக்கத்தில் - 'சாம்பல் பறவைகள்'

இருப்பிற்கும் இழப்பிற்கும் இடையில் ஒரு பறவையைப் போல அலைகிறது வாழ்வு. வாழ்க்கையின் அர்த்தங்களைக் கண்டுபிடித்துவிடும் எத்தனிப்பில் கழிகிறது காலம். வானமெங்கும் உலாவித்திரியும் பறவையொன்று உதிர்த்துவிடும் சிறகொன்றை வைத்து பறவையின் வாழ்வை அளந்துவிடமுடியாதோ அவ்வாறே மனிதர்களுக்குள் சுழித்தோடும் எண்ணங்களையும் அவ்வளவு எளிதில் கணித்துவிட முடிவதில்லை.

இறுதியில் வாழ்வில் எதுவுமே எஞ்சுவதே இல்லையெனினும் ஏன் இவ்வளவு வெறுப்பையும் துயரத்தையும் காவிக்கொண்டு திரிகின்றோம். நேசிக்க மனிதர்களும், நேசிப்பதற்கு இயற்கையையும் இருக்கும்போது கூட நாம் ஏன் இன்னும் தனிமைப்பட்டுப் போனதாய் உணர்கின்றோம்.

வாழ்க்கையிற்கு உண்மையில் அர்த்தம் ஏதும் இருக்கவேண்டுமா?

இலக்குகளை நோக்கி எப்போதும் ஓடிக்கொண்டிருக்க வேண்டுமா?

நாம் நம்முடைய வாழ்வை வாழ்கின்றோமா அல்லது யாரோ ஒருவரின் வாழ்க்கையைத்தான் வாழத்தான் எல்லாவற்றையும் தொலைத்து அலைந்து கொண்டிருகின்றோமா?

நம் வாழ்வில் ஒருகாலத்தின் குறுக்கு வெட்டிலிருந்து தம் சிறகுகளை அசைத்துப் பறப்பதிலிருந்து விரிகிறது, சாம்பல் பறவைகள் என்கின்ற நாடகம்.

### சக்கரவர்த்தியின் எழுத்து இயக்கத்தில் - 'பகைப்புலம்'

பகைப்புலம் நாடகம் மூன்று பாத்திரங்களைக் கொண்டதாக அமைகிறது. அரச அடக்குமுறையின் கீழ் இராணுவ வல்லாதிக்கம் புரியும் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் அதனை முறியடிக்கவும் பழிவாங்கவும் முற்படுவதை வரலாறெங்கணும் அவதானிக்க முடியும்.

அவ்வாறான பாத்திரங்களான மாலதியும் குமரனும் கொழும்பில் வைத்து இராணுவ அதிகாரியொருவரைத் தற்கொலைத் தாக்குதல் மூலம் தீர்த்துக்கட்ட விழைகிறார்கள். இத்திட்டத்தைச் சரிவர நிகழ்த்துவதற்கான தயார் வேலைகளை திரையன் என்ற போராளிப் பாத்திரம் நிகழ்த்துகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பாவிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற மனிதாபிமானம் எழுந்து தாக்குதலைச் செய்வதில் சிக்கல்களை ஏற்படுத்தும் வேளையில் போராளிகளுக்கிடையில் அது பற்றிய சர்ச்சை உருவாகிறது.

திரையன் தலைமைக்கு விசுவாசமானவனாகவும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் குறியாக நிற்கிறான். மற்றவர்கள் குழப்பம் அடைகிறார்கள். முடிவில் அவர்கள் எத்தகைய தீர்மானத்திற்கு வந்தார்கள் என்பதைச் சித்தரிப்பதாக அமைவதே இந்த நாடகமாகும்.

சீரிய நாடகங்களில் ஆர்வமுள்ளவர்களுக்களை உயிர்ப்பு நாடக நிகழ்வுக்கு உயிர்ப்பு பெண்கள் நாடகப் பட்டறை வரவேற்கின்றது. ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஒரு அகதி குறித்த சிந்தனையோடு தான் இருக்கிறேன்"

## மாயாவுடன் ஒரு பேட்டி



உண்மையில் M.I.A(மாயா) என அறியப்படும் மாதங்கி அருள்பிரகாசம் வெளியிட்ட Borders காணொளிக் காட்சி பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஒரு சர்ச்சைக்குரிய, அரசியல் சார்ந்த விடயமாக அமைந்துள்ள இந்தக் காணொளிக் காட்சி குறித்தும் அவரது இசைப் பயணம் குறித்தும் அவர் பேசுகின்றார் .

அரசியல் மற்றும் சர்வதேசப் பிரச்சனைகளை கலைக் கண்களுடன் பார்க்கும் இவரது திறமை புத்துணர்ச்சியளிப்பதாக உள்ளது.

Borders காணொளிக் காட்சியில் மக்களை மனிதத்தன்மையுடன் காட்டியிருக்கிறோம் என மாயா சுட்டிக்காட்டுகி ன்றார்.

அவர் குறிப்பிடும் மக்கள் ஐரோப்பிய புலம்பெயர் விவகாரத்தில் கடந்த வருடம் அதிகமாக அறியப்பட்ட புலம்பெயர் அகதிகள் தான்.

தீவிர பிளவு மற்றும் புலம்பெயர் அகதிகளின் தவறான பிரதிநிதித்துவம் போன்றவற்றை பிரதிபலிக்கும் தனது காணொளிக் காட்சி பற்றிய நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளை கூர்ந்து கவனித்து வருகிறார் மாயா .

படகுகள் பாறையில் மோதி மக்கள் நீரில் மூழ்கி மடிகிறார்கள் போன்ற செய்திகளை நாம் தினமும் கேட்கிறோம். இதில் பெண்களும் குழந்தைகளும்கூட அடங்குகின்றனர். ஆனால் நாங்கள் இந்த விடயத்தை எதிர்கொள்ளும் விதம் குறித்து கேள்வி எழுப்புகின்றார் இந்தப் பாடகி.

"மனிதத்தன்மை" மற்றும் 'கருணை' ஆகிய இரண்டும் அழிந்து கொண்டிருக்கின்றன என நம்புகிறார் மாயா.

இவர் பெண்கள் மற்றும் குழந்தைகள் குறித்து பேசினாலும் தனது Borders காணொளிக் காட்சியில் அவர்களைக் காட்டவில்லை என்பது விமர்சனத்திற்கு உள்ளான ஒரு விடயமாகும்.

பலருக்கும் கெட்ட கனவாக இருப்பதை தான் காட்சிபடுத்த வேண்டும் என அவர் கூறுகிறார்.

"ஒரு கலைஞராக ஒரு அகதியைப் பற்றிய சிந்தனையோடு தான் இன்னும் இருக்கிறேன்" எனத் தெரிவித்த மாயா போரினால் சொந்த நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் பற்றி பேசுகிறேன் என்கிறார்.

தான் நினைத்ததை, நினைத்தவாறு செயல்படுத்த அவரால் முடியவில்லை, ஏனெனில் அவரது அரசியல் அனுபவம் அவரது உள்ளார்ந்த கலை உணர்வுடன் இணைந்துள்ளது.

ஆரம்பத்தில் இருந்தே நான் ஒரு அகதிதான்,புலம்பெயர்ந்தவள் அல்ல என்றஉண்மைக்கு குரலெழுப்பி வந்தேன். இதில் எந்த ரகசியமும் இல்லை. நான் இலங்கையை விட்டு வெளியேறியதற்கு காரணம் யுத்தம்தான். எங்கள் மீது குண்டுகளை பொழிந்தனர். துப்பாக்கியால் சுட்டனர். ஒருவேளை அங்கு வாழ்வதற்கான வாய்ப்பிருந்திருந்தால் நான் அங்கேயே இருந்திருப்பேன் எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

இங்கிலாந்து செல்ல வேண்டும், ஒரு பாப் இசைக் கலைஞர் ஆகவேண்டும் எனும் எந்தவொரு கனவை பின்பற்றி இங்கிலாந்து செல்லவில்லை எனக்கூறும் மாயா "நான் ஒரு போரில் இருந்து தப்பித்து வந்தேன் என்பதே உண்மை. நழுவிக்கொண்டு வரவில்லை" என்கிறார் .

புலம்பெயர் அகதிகள் சிலசமயங்களில் தங்களது ஆதி நிலையை மறந்துவிடுகின்றனர் என்றே தனக்கு தோன்றுவதாகவும் மாயா கூறுகிறார்.

மாயா அரசியலில் ஈடுபடத் தயங்கும் தமிழ் இளைஞர்கள் பற்றிய தனது ஐயத்தை வெளிக்காட்டுகிறார். குறிப்பாக தமிழர்கள் மீதான இலங்கை அரசின் செயல்பாடுகளைப் பற்றி பகிரங்கமாகப் பேசுவதினால் எதிர்காலத்தில் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதில் இருக்கும் சிக்கல்களை அவர் புரிந்துகொள்கிறார்.

மாயா தனது இசை மற்றும் கலையின் மூலம் இலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்பு, ஒரு குழந்தையாக போர் பகுதியில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் மற்றும் ஒரு அகதியாக இருந்தது போன்றவற்றை எவ்வித தயக்கமும் இன்றி வெளிப்படுத்திவரும் வேளையில், இத்தகைய மறுப்பு செயல்கள் அவருடைய உணர்வை பாதிக்கின்றன.

நாங்கள் வெளிநாடுகளுக்கு வந்திறங்கியவுடன், இலங்கையில் இருந்து முற்றிலுமாக எங்களை துண்டித்துக்கொள்ள விரும்பினோம். இதற்கு தர்மசங்கடம் மட்டும் காரணமல்ல, நாங்கள் இலங்கையில் இருந்து வந்துள்ளோம் என்பதையும் யாரிடமும் கூற விரும்பவில்லை, ஏனெனில் இலங்கையில் என்ன நடக்கிறது என்பது போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அது ஒரு உளவியல் ரீதியான மறுப்பு, இதனால் புதிய கலாச்சாரத்துடன் ஒன்றிவிடலாம். அது ஒரு சுய பாதுகாப்பு முறையைப் போன்றது எனவும் குறிப்பிட்டார் மாயா.

மாயாவின் கருத்துக்கள் பொதுவாக அவரது சமூகத்தின் அனுபவங்கள் மற்றும் இதே போன்ற அனுபவங்களைக் கொண்டவர்கள் ஆகியவற்றை ஒருசேரக் கொண்டுள்ளது.

நான் இங்கிலாந்து சென்றிராவிட்டால் இந்நேரம் மடிந்திருப்பேன். எவ்விதத்திலும் நான் உயிர் பிழைத்திருக்க மாட்டேன். இலங்கையில் இருந்த சூழ்நிலையில் என்னால் ஒரு கலைஞராகவோ அல்லது ஓவியராகவோ நிச்சயம் உருவாகியிருக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கின்றார் மாயா

மாயா எப்போதும் ஒரு இசைக் கலைஞராகவே இருப்பார். ஆனால், ஒரு தமிழச்சி, ஒரு அகதி, ஒரு தமிழ் அகதி என்னும் அடையாளத்தை அவர் எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டார் என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை.

நான் ஒரு பிரிட்டிஷ் தமிழ் அகதி. அமெரிக்காவில் வேலை செய்கிறேன். நான் இலங்கையில் இருந்து வந்தவள் என்கிற ஒன்றே பிரச்சனையாக இருக்கிறது. இலங்கை எங்களை உள்ளடக்கி உருவாக்கவில்லை என்றார் அவர்.

"கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், ஆனால் இப்போது புதிய கட்டிடங்கள் மூலம் கடந்த காலத்தை மறந்து இலங்கை சிங்கப்பூராகி விடும் என்றில்லை" எனவும் கூறுகின்றார்

"பல வழிகளில், இலங்கையில் நடந்த போர் மற்றும் அதனால் ஏற்பட்ட துன்பங்கள், தியாகங்கள், உயிரிழப்புகள் ஆகியன மில்லியன் கணக்கில் தமிழர்களை வெளிநாடுகளில் வாழவைத்தது" என்பதை நினைவு கூறும் மாயா அதை நாம் மறக்க கூடாது எனவும் எச்சரிக்கின்றார்

"வெளிநாடுகளில் உள்ள மில்லியன் கணக்கில் மக்கள் ஒன்றுகூடி எதையும் செய்யலாம் என்பது சாத்தியமே. இதற்காக நாங்கள் துப்பாக்கி ஏந்த வேண்டிய அவசியமில்லை. வேறு பல வழிகளும் இருக்கின்றன" என முடித்தார் இந்தப் பாப் தாரகை. ●

இகுருவிக்கான
மேனகா சத்தியமூர்த்தி

NAVA LAW
Professional Corporation
Real Estate · Corporate · Commercial · Immigration · Family · Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

ekuruvi Night 2016. April 3,2016 அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உள் நாட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதில் நோர்வேயின் வகிபாகம் TO END A CIVIL WAR: NORWAY'S PEACE ENGAGEMENT IN SRI LANKA என்ற நூல் கடந்த மாதம் ரொரன்ரோவில் வெளியிடப்பட்டது.

இந்த நூல் வெளியீட்டிற்காக நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இநத நூலின் ஆசிரியர் Mark Salter அவர்களும் ரொரன்ரோவிற்கு வருகை தந்திருந்தனர்.

இந்த நூல் வெளியீட்டின் போது இலங்கையின் சமாதான முயற்சிகளின் தோல்விக்கான காரணிகள் அரசாங்கத் தரப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் தவறுகள் என பல விடயங்கள் குறித்து இவர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

இதன் போது மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல மில்லியன் டொலர்கள் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதாக நூலாசிரியர் Mark Salter கூறினார்.

இந்த விடயம் குறித்து தான் தீவிரமான ஆராய்ச்சிகளை நடத்தியதாகவும் பலரிடமிருந்து தகவல்களை உறுதிப்படுத்தியதாகவும் அவர் அந்த விடயத்தை மிக முக்கியத்துவம் மிக்க ஒன்றாக மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தினார் அல்லது பதிவு செய்ய எத்தனித்தார்.

இந்தப் பணப்பரிமாற்றம் என்பது மகிந்த வெற்றியடைந்த நாள் முதல் புலிகள் தோல்வி அடைந்த நாள் வரை பலராலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கூறப்பட்டு வந்த ஒன்று என்பதால் அது அதிகமான கவனத்தை ஈர்க்கவில்லை.

கடந்த வருடம் மகிந்த தோல்வி அடைந்த பின்னர் இதுவரை அவருடன் ஒட்டி உறவாடிய ஜாதிக ஹெல உருமய மகிந்தவின் இந்த நடவடிக்கை;கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அன்ரன் சமில் லக்ஸ்மி கண்ணன் என்ற பெயரல் ஊடகப் பரப்பில் பரபரப்பாக அடிபடத் தொடங்கியிருக்கின்றது.

அன்ரன் சமில் லக்ஸ்மி கண்ணன் என்ற பெயரைக் கொண்ட எமில் காந்தன் என்பவர் இலங்கைக்கு வருகை தருவதற்கு தயாராக இருப்பதான தகவல் தான் அது.

இந்த பெயர் ரொரன்ரோவில் கடந்த மாதம் நோர்வே எழுத்தாளர் சொன்ன மகிந்தவின் தேர்தல் வெற்றி தொடர்பான பணபரிமாற்றத்தோடு நெருக்கமான தொடர்புகளை கொண்டுள்ள ஒரு பெயர் என்பது தான் இந்த கட்டுரைக்கு காரணமாகின்றது

2005ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் மகிந்த ராஜபக்சவை வெற்றியடையச் செய்யும் நடவடிக்கையினை விடுலைப் புலிகள் அமைப்பு மேற்கொண்டதாகவும் இதற்காகவிடுதலைப்புலிகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ வழங்கியதாக கருதப்படும் 180 மில்லியன் ரூபா பணத்தை விடுதலைப் புலிகள் சார்பில் பெற்றுக் கொண்டவர் தான் இப்போது நாடு திரும்ப விரும்பும் எமில் காந்தன்.

எமில்காந்தன் இலங்கைக்குள் கொண்டு வரப்படுவதன் மூலம், இந்த விடயம் குறித்து விவரமான தகவல்கள் வெகு விரைவில் அம்பலப்படுத்தப்படும் என்று அரசாங்க தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனாலும் எமில்காந்தனுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள பயணத் தடையை நீக்குமாறு அவரது சட்டத்தரணி நீதிமன்றில் நேற்று முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்வீகை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க உயர்பீடத்துடன் எட்டப்பட்ட பரஸ்பர பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே,எமில் காந்தன் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அடிப்படையிலேயே அவர் இலங்கை திரும்பவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதனால் இந்த நீதிமன்ற உத்தரவு சிக்கலை ஏற்படுத்தாது என்றும் கூறப்படுகின்றது.

அதிகாரமும் செல்வாக்குமிக்க அரசியல்வாதிகள் மற்றும் எமில்காந்தனின் இலங்கையிலிருக்கும் உறவினர்கள், மற்றும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய புலம்பெயர்ந்த அமைப்புகள் சிலவற்றின் முயற்சியூடாகவே எமில்காந்தன் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு இணங்கியதாக தெரியவருகின்றது.

இதன் மூலம் அரசாங்கம் மகிந்த ராஜபக்சவை தேசத் துரோகியாக மாற்றி அவர் மீது இன்னமும் கடும்போக்குள்ள சிங்கள மக்கள் வைத்துள்ள அபிமானத்தை சீர்குலைத்த அவர் மீளவும் எழுந்து விடாமல் செய்வதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்கு பின்னர் கொஞ்சம் அடங்கிப் போயிருந்த மகிந்த ராஜபக்ச தனது சகோதரர்களான பசில் மற்றும் கோட்டா ஆகியோருக்கிடையிலான முரண்பாடுகளை களைந்து தனது அணியை பலப்படுத்தி புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கும் முயற்சியை மகிந்த தீவிரப்படுத்தி வருகின்றார்.

மகிந்த ராஜபக்ச என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியில் மந்திரச் சொல்லாகவே இப்போதும் இருந்த வருகின்றது. எனவே மகிந்தவை மீளெழுச்சி அடையவிடாமல் செய்வதற்காக மிகப்பெரிய ஆயுதமாக எமில் காந்தனை அரசாங்கம் பயன்படுத்துகின்றது.

ஏற்கனவே நிதி மோசடிக் குற்றச்சாட்டில் மகிந்தவின் இளைய மகன் ஜோசிதவை சிறைவைத்துள்ள அரசாங்கம் அடுத்து நாமலையும் உள்ளே தள்ளி விடும்.

மகிந்த ராஜபக்ச என்பவர் தொடர்பான தவறான விம்பங்களை தொடர்ச்சியாக சிங்கள மக்களிடம் காண்ப்பிப்பதன் மூலம் ராஜபக்சவின் அரசியல் எதிர்காலத்தை மூடியழிப்பதே அவர்களின் திட்டம்.

இது தமிழர்களுக்கு நன்மைகளை விட தீமைகளையே அதிகம் ஏற்படுத்தப் போகின்ற ஒரு நகர்வு என்பது இதன் பின்னால் உள்ள நுண்ணரசியலை புரிவதன் மூலமே விளங்கிக் கொள்ள முடியும்.

மகிந்தவை மின்சார நாற்காலியில் இருந்து தான் காப்பாற்றியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அண்மையில் கூறினார்

அதே கருத்தை முன்னதாக மங்கள சமரவீரவும் கூறியிருந்தார்.

மகிந்த ராஜபக்ச இலங்கை ஜனாதிபதியாக தொடர்ந்தும் பதவி வகித்திருந்தால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களுக்காக மகிந்த ராஜபக்ச தண்டிக்கப்பட்டிருப்பார் என்றும் அவ்வாறு அவர் தண்டனை பெறாமல் நாட்டையும் அவரையும் ஆட்சி மாற்றத்தின் மூலம் தாங்கள் காப்பாற்றியதாக அவர்கள்





தமிழ் மக்கள் மீது இன அழிப்பை மேற்கொண்ட ஒருவரை காப்பாற்றியதாக கூறும் ஜனாதிபதியை நோக்கி தமிழர் தரப்பு எதிர்பு எதனையும் பதிவு செய்யாமல் இருப்பது தான் நல்லாட்சி அரசாங்கத்தின் வெற்றி அல்லது இணக்க அரசியலின் முதிர்ச்சி எனக் கொள்ளலாம்.

கூறுகின்றார்கள்.

இது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய அநீதி என்பதை தெரிந்தும் தமிழில் தேசிய கீதம் பாடும் போது கண்ணீர் விட்ட சம்பந்தன் ஐயாவோ அவரை ஆதரிக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளோ மூச்சுக் கூட விடவில்லை.

தமிழ் மக்கள் மீது இன அழிப்பை மேற்கொண்ட ஒருவரை காப்பாற்றியதாக கூறும் ஜனாதிபதியை நோக்கி தமிழர் தரப்பு எதிர்பு எதனையும் பதிவு செய்யாமல் இருப்பது தான் நல்லாட்சி அரசாங்கத்தின் வெற்றி அல்லது இணக்க அரசியலின் முதிர்ச்சி எனக் கொள்ளலாம்.

இது தான் தமிழர்கள் எதிர் கொண்டுள்ள மிகப் பெரிய அபாயம்.

மூன்று தசாப்த கால விடுதலைப் போரில் தமிழர்கள் சந்தித்த பேரிழப்பின் விலையான நியாயமான அரசியல் தீர்வு என்பது நடைபெற்று முடிந்த யுத்தக் குற்றங்களையும்இன அழிப்பினையும் நிறுவுவதன் மூலமாக மட்டுமே ஏற்படுத்தப்படலாம்

ஆனால் அதற்கான கதவுகளை "நல்லாட்சி"யின் பெயரால் தமிழ் பிரதிநிதிகள் இறுகச் சாத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

யுத்தன் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரிய அமெரிக்க தீர்மானம் கால ஓட்டத்தில் உள்ளக விசாரணையை வலியுறுத்தியதும் கலப்பு நீதிமன்றம் குறித்து பேசிய மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை விஜயத்தை முடித்த

ekuruvi Night 2016. April 3 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016ம் ஆண்டு தமிழ் மக்களின் அரசியல் தெரிவான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புலம் பெயர் தமிழர்களின் அமைப்பான உலகத் தமிழர் பேரவையும் ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும்.

# சூது கவ்வும்.. ஆனாலும்?

எஸ். ஆர்

பின்னர் சர்வதேச நீதியாளர்கள் குறித்த தாங்கள் அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று தடம் மாறிப் போவதற்கும் யார் காரணம் ?

அதனை ஆராய்வதற்கு முதல் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்த காரணிகள் எவை என்பதை சுருக்கமாக பார்த்து விடுவது பொருத்தமாக இருக்கும்.

சீனா தன்னுடைய ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய சந்தைக்கான கடல்வழிப் போக்குவரத்துக்கு விடுதலைப்புலிகள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று கருதியது. அமெரிக்கா இந்து சமூத்திர பிராந்தியத்தின் மீதான தனது ஆளுமைக்கு அச்சுறுத்தலான அமைப்பாக அவர்களைப் பார்த்தது. இந்தியா தனது பிராந்தியமேலாதிக்க கொள்கைக்கு தடையாக இருக்கும் அமைப்பாகவும் கருதியது.

உலக பெருமுதலாளித்துவ சக்திகள் இந்தியாவையும் சீனாவையும் உள்ளடக்கிய தங்களுடைய பெரும் சந்தைக்கு விடுதலைப்புலிகளின் வளர்ச்சி சிக்கலை தோற்றுவிக்கும் என்று கணிப்பிட்டன. மொத்தத்தில் உலக பெரு முதலாளித்துவ அதிகார வர்க்கம் ஒன்று சேர்ந்து மகிந்தவை முன்நிறுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்தி முடித்து.

இதனால் தான் விடுதலைப் புலிகளை அழிக்கும் ராஜபக்ச அரசாங்கத்தின் திட்டத்தை அனைத்து நாடுகளும் இணைந்து நடத்தி முடித்தன.

2009ம் ஆண்டு நடத்தி முடிக்கப்பட்டது ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பின் மீதான தாக்குதல் மட்டுமல்ல அது ஒரு இனத்தை அழித் தொழிக்கும் வகையிலான கொடூர யுத்தம் என்பதை மனித உரிமை அமைப்புகள் உலகத்திற்கு எடுத்த கூறத் தொடங்கின

விடுதலைப் புலிகளை அழிப்பதாக கூறி நடத்தப்பட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கும் இன அழிவிற்கும் பரிகார நீதி வேண்டி புலம் பெயர் தமிழர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் குரல் எழுப்பத் தொடங்கினார்கள்.

அப்போது தான் யுத்தத்தை முன்னெடுத்த தரப்புகள் விழித்துக் கொண்டன.

இந்த குரல்கள் தங்களையும் தாக்கும் என்பதால் தாமாகவே முன்வந்து அவர்களும் தமிழர்களின் பரிகார நீதிக்காக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் உரத்துக் குரல் எழுப்பத் தொடங்கினார்கள்.

எமக்காக குரல் கொடுக்கும் மீட்டபர்களை கண்ட தமிழர்கள் ஆனந்தம் கொண்டாடினார்கள். எல்லாம் வல்ல அமெரிக்கா எமக்கு நீதியையும் தமிழீழத்தையும் பெற்றுத் தந்த விடும் என்று நம்பினார்கள் அல்லது நம்பவைக்கப்பட்டார்கள்.

ஒரு பக்கம் நீதிக்கு குரல் கொடுத்தவாறே தங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்த ராஜபக்ச அன்ட் கோவை வெளியேற்றும் திட்டங்களை கச்சிதமாய் நிறைவேற்றியது மேற்குலகம்.

யுத்தக் குற்றங்களில் மகிந்தவை சிக்க வைப்பது என்பது ஒரு பொறியே தவிர அதனை அமெரிக்கா நடைமுறைப்படுத்தாது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மகிந்த சிக்கினால் தனக்கு கிளஸ்ரர் குண்டுகள் தந்தவர்கள்,இரசாயன ஆயுதங்களை விற்றவர்கள், செய்மதி படங்களை ஆய்;வு செய்தவர்கள் என்று அவர் அடுக்கப் போகும் நாடுகளும் நபர்களும் மாட்டிக் கொள்வார்கள்.

இதனால் தான் மகிந்தவை வேறு வழியில் சிக்கவைக்க மேற்குலகம் கணக்குப் போடுகின்றது

மகிந்த அரசில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த (தாங்கள்) சொன்னதை கேட்கும் மைத்திரியை ஜனாதிபதியாக்கியது.

எப்போதும்அமெரிக்கவிசுவாசம் மிக்கவர்கவர்களாகவே இருந்த வரும் ரனில் விக்கிரமசிங்கவும், சந்திரிக்கா பண்டாரநாயக்காவும் மங்கள சமரவீரவும் இந்த மாற்றங்களின் பங்காளர்களாயினர்.

அதன் சம நேரத்தில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த யுத்தக் குற்றங்கள் இன அழிப்பு நீதி விசாரணை போன்ற கோசங்களை எழுப்பாதிருக்க புலம் பெயர் தமிழர் அமைப்புகள் சிலவற்றிற்கும் " ஆலோசனை" அல்லது " அன்புக் கட்டளை" இடப்பட்டிருக்கின்றது.

அதனால் தான் சில அமைப்புகளும் சில " பிரமுகர்களும்" தடைவிலக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் தூதுவர்களாக தங்களை காட்டிக் கொள்வதையும் வெட்கப்படாமல் செய்யத் தொடங்கியிருக்கின்றார்கள்.

தமது நிலைப்பாடுகளை நியாயப்படுத்த உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் செயல்படும் ஊடகங்களையும் அவர்கள் உருவாக்கிக் கொள்கின்றார்கள்

மறுபுறம் இலங்கை அரசாங்கத்தோடு பேசுவதற்கு உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட் திரு. இம்மானுவேல் அடிகளாருக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கின்றது.

அவரும் வேறு சில முக்கிய புலம் பெயர் பிரமுகர்களும் கூட இலங்கைக்கு சென்றாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை !

இலங்கை மீது அவப் பெயரை ஏற்படுத்தியதற்காக சிங்கள கடும்போக்காளர்களால் சாத்தானாக சித்தரிக்கப்பட்ட சனல் 4 தொலைக் காட்சியின் நிகழ்சித் தயாரிப்பாளர் கலம் மக்ரே இலங்கைக்கு சென்று முள்ளிவாய்காலில் நின்று கதை சொல்கின்ற அளவிற்கு இலங்கையின் " ஜனநாயகம்" மீள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி மனித உரிமைக்கு குரல் கொடுப்பவர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது.

புலம் பெயர் தமிழர் அமைப்புகளில் தமக்கு சாதகமாக செயல்படும் "கொள்கைகளை" கொண்ட அமைப்புகளுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் நெருக்கமாக்கியது மேற்குலக இராஜதந்திரம்.அந்த இராதந்திரம் தான் எமில் காந்தனை இலங்கைக்கு கொண்டு வருகின்றது.

இப்போது எல்லாம் ஒரே கோட்டில் வந்து நிற்பது தெளிவாக புரியும்.

மேற்குலகளின் தாளத்திற்கு ஆடும் அரசாங்கம் — ஆமாம் போடும் எதிர்கட்சி மற்றும் புலம் பெயர் தமிழர் அமைப்புகள் பிரச்சினை ஓவர் !

இலங்கை பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் செக் மேட் திட்டம் இது தான்

2016ம் ஆண்டு தமிழ் மக்களின் அரசியல் தெரிவான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புலம் பெயர் தமிழர்களின் அமைப்பான உலகத் தமிழர் பேரவையும் ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும்.

அது சிங்கள மக்களின் மிகக் கடுமையான எதிர்ப்பின் மத்தியில் கொண்டு வரப்பட்ட ஒன்று என்பதை தமிழ் மக்களை நம்பவைப்பதற்காகவே கடந்த 4ம் திகதி தமிழில் தேசியக் கீதத்தை பாடவைத்து சம்பந்த(ன்) ஐயாவை "அழவும்" வைத்ததுஇந்த இராஜதந்திரம்.

தமிழில் தேசிய கீதம் பாடுவதே மிகப் பெரிய சவாலான நாட்டில் சமஸ்டிக்கு சில பல கிலோ மீற்றர்கள் நெருக்கத்தில் வழங்கப்படும் "ஒற்றையாட்சிக்குள்" வாழும் (மிகக் குறைந்தபட்ச) அதிகாரப் பகிர்வு திட்டதை பட்டாசு வெடித்து கொண்டாடியபடி தமிழர்கள்; வரவேற்பதோடு திரை மூடப்படும் !

அப்படியானால் இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளின் நிலை? கைது செய்யப்பட்டும் கடத்தப்படும், சரணடைந்தும் காணமல் போனவர்களின் நிலை? முள்ளிவாய்கால் பேரவலத்தில் செத்துப் போன மக்களின் மரணத்திற்கான நீதி ? என்று பலவாறான கேள்விகள் வேலையில்லாமல் இதனை கிறுக்கிக் கொண்டிருக்கும் எனக்கும் நான் எழுதியதை ஒரு வரியும் தவறாமல் வாசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கும் எழக் கூடும்எனவே தான் அதற்கான பதிலை இப்படியாக எழுதி முடிக்க ஆசைப்படுகின்றேன்; "தர்மத்தின் வாழ்வு தனை சூது கவ்வும் ஆனால் மறுபடி தர்மம் வெல்லும் " ●

ekuruvi Night 2016. April 3 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TO END A CIVIL WAR - Norway's peace engagement in Sri Lanka **என்ற புத்தகத்தில் ஆசிரியர்** Mark Salter **ஐநாவிற்கான மனித உரிமை ஆணையாளர்** Zeid Ra'ad Al Hussein**னின் இலங்கை விஜயம் குறித்த பதிவு தமிழில்**

# இலங்கையில் ஐநா மனித உரிமை ஆணையாளர்



ஐநாவிற்கான மனித உரிமை ஆணையாளர் Zeid Ra'ad Al Hussein, இலங்கையில் நான்கு நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின்போது அவர் அங்கு பலதரப்பட்ட மக்களை சந்தித்தார். இந்தக் கட்டுரையுடன் பிரசுரிக்கப்படும் புகைப்படங்கள் அவர் அங்கு சந்தித்த இரு முக்கிய குழுக்களை முன்னிலைப்படுத்துகிறது. அதில் முதலாவதாக, நாட்டின் முக்கிய புத்த மத தலைவர்களுடன் மேற்கொண்ட சந்திப்புக்கள்.

இரண்டாவதாக, நாட்டின் வடக்கு பகுதியின் வடுவாக இருக்கும் பல நலன்புரி வளாகங்களில் அவர் சந்தித்தது ஒரு தமிழர் குழுவுடையது. அவர்களுக்கான Zeid Ra'ad Al Husseinனின் அறிவிப்பு: அடுத்த முறை நான் இங்கு வரும்போதும் உங்களை உங்கள் சொந்த மண்ணில் காண்பேன் என நான் நம்புகிறேன். அந்தப் புகைப்படத்தில் இருக்கும் பெண்ணின் முகம், போர் முடிந்து ஏழாண்டுகள் கழித்து இத்தகைய மாற்றம் என்றாவது ஒருநாள் ஏற்படும், அந்தப் பொறுப்பு ஆணையாளரிடம் தான் இருக்கிறது என எனக்கு சுட்டிக்காட்டுகிறது.





Zeid Ra'ad Al Hussein தனது பயணத்தின் கடைசி நிகழ்ச்சியாக செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்று, நீளமான அறிக்கையை வெளியிட்டார். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கை அவரது மொத்த அறிக்கையின் சுருக்கம். பல ஆண்டுகள் நீடித்துவந்த போரின் காயத்தை ஆற்றும் வகையில் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மீதான உண்மையான கருத்து இடம்பெற்றிருக்கும் ஒரு பத்தி எனது கவனத்தை ஈர்த்தது.

தீவிரவாதிகளால் இலங்கையின் மீட்டெழுதலுக்கு ஆபத்து உள்ளது என Zeid Ra'ad Al Hussein எச்சரிக்கிறார்.

"If mistakes are made, or significant problems are downplayed or ignored during the first few years, they become progressively harder to sort out as time goes on. While the glass is still molten, if you are quick and skilful, you can shape it into a fine object that will last for years. Once it starts to harden in misshapen form, it becomes more and more difficult to rectify. Likewise if any of the four key elements of post conflict resolution — truth-telling, accountability, reparations and institutional reform — are neglected or mishandled, unresolved resentments will fester, new strains will emerge, and a tremendous opportunity to establish long-term stability, which in turn should result in greater prosperity, will be lost," - UN Human Rights Commissioner Zeid Hussein

"தவறுகள் நிகழ்த்தப்பட்டாலோ, அல்லது முக்கிய பிரச்சனைகள் குறைத்துக் காட்டப்பட்டாலோ அல்லது சில வருடங்கள் தவிர்க்கப்பட்டாலோ, காலம் செல்ல செல்ல அவற்றின் தன்மை கடினமாகிவிடும். கண்ணாடி உருகிய நிலையில் இருந்தால் அதை நமக்குத் தேவையான வடிவத்தில் மாற்றிக் கொள்ளலாம், அது பலகாலம் நீடிக்கும். ஒருவேளை தவறான வடிவத்தில் அது கெட்டியாகிவிட்டால் பின் அதனை மாற்றுவது கடினமாகிவிடும். அதைப்போலவே, உண்மை, பொறுப்புக்கூறல், இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் நிறுவன சீர்திருத்தம் போன்ற இந்த நான்கு கூறுகளின் பின் விளைவுகள் புறக்கணிக்கப்படுகிறது அல்லது தவறாக கையாளப்படுகிறது. இதன்மூலம் நீண்ட கால ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு பறிபோகும்,"

தீவிரமான தேசியப் போக்குகள் இலங்கை மோதலின் இதயத்தில் தான் இருக்கிறது. மேலும், நாட்டில் நீண்டகால ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவிருக்கும் வாய்ப்பை அவை மீண்டும் கீழருக்க விடக்கூடாது, என மனித உரிமைக்கான ஐநா ஆணையாளர் Zeid Ra'ad Al Hussein தெரிவித்தார்.




இலங்கையில் தனது பயணத்தின் கடைசி நிகழ்ச்சியாக கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் பங்கேற்ற அவர், ஒரு வருடத்திற்கு முன்பு பெரும்பாலான இலங்கைவாசிகள் மாற்றத்திற்காக, உண்மைக்காக, நீதிக்காக வாக்களித்தனர். மேலும், அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் செயல்படாமல் அச்சமூட்டும் வகையில் செயல்பட்டால் அது ஒரு அவமானத்திற்குரிய செயலாகிவிடும், என குறிப்பிட்டார்.

"இத்தகைய முக்கிய பிரச்சனைகள் பற்றிய ஒரு தீவிரமான விவாதம் இலங்கைக்குத் தேவைப்படுகிறது, இதில் தான் அவர்களுடைய எதிர்காலமும் அடங்கியுள்ளது. செப்டெம்பர் 2015 ஐநா அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நியாயமான முறையில் விவாதித்து தீர்வு காண வேண்டும். அனைத்து தரப்பினர்களின் பார்வையிலும் இது நியாயமாகத் தெரியவேண்டும் அதற்கு இலங்கைவாசிகளின் ஒத்துழைப்பும் வேண்டும்," என அவர் தெரிவித்தார்.

போரினால் ஏற்பட்ட சேதத்தை சரிசெய்வது ஒரு மிகப்பெரிய சவால், அதிலும் ஆரம்ப காலகட்டம் மிகவும் கடினமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பயணம், 2013 ஆகஸ்டில் தனக்கு முந்தைய ஆணையாளர் வந்துசென்றபோது இருந்ததை விட இது தனக்கு இனிமையானதாகவும், ஊக்குவிக்கும் வகையிலும் இருந்ததாகத் தெரிவித்தார். மேலும் அவர், கொடுமைப்படுத்தும் புகார்கள் குறைந்துவிட்டதாகவும் ஆனால் வேறு பல புதிய புகார்கள் தொடர்ந்து வருவதாகவும் தெரிவித்தார். ●



ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசி மையங்கள்? பொதி சுமக்கப்போவது யாரு?

தகவல் தொழில் நுட்பம் தனக்காக ஒத்தாசைக்கு வளர்த்து வரும் குழந்தைதான் Call Center என எங்கள் எல்லோராலும் அறியப்பட்ட தொலைபேசி மையங்கள். இவ்வகை மையங்கள் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட போது நல்ல தொழில் வாய்ப்பையும் வருமானத்தையும் எடுத்து வந்தது. இன்றைய தகவல் தொழில் நுட்பத்தின் வானளாவிய வளர்ச்சி இந்த உரையாடு மையங்களின் உயிரைப்பறித்து பால் ஊற்றி விடுமோ என்னும் ஓர் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அது நைரோபியில் உள்ள Shopping Mall ஆக இருந்தாலென்ன இராயப்பேட்டையிலுள்ள Express Avenue Shopping Mallஆக இருந்தாலென்ன யுவதிகள், இளைஞர்கள், பெரியவர் என அனைவரையும் கவரும் வகையில் Shopping Mallகள் எல்லாம் சினிமாக் கொட்டகைகள், உணவு அங்காடிகள், உடுப்பு வர்த்தக நிலையங்கள் என பலதரப்பட்ட வாணிப நிலையங்கைள தன்னகத்தே உள்ளடக்கிய ஓர் மாய உலகமாக காட்சியளிக்கும்.

ஆனால் பிலிப்பைன்ஸின் தலைநகரிலுள்ள SM Aura Shopping Mallஇன் கடசித்தளத்துக்கு மின்தூக்கி மூலம் சென்றால் ஒரு சினிமா கொட்டகையையோ அல்லது விலை உயர் ஆடைக் கடையையோ நீங்கள் பார்க்கப்போவதில்லை. மாறாக உலக வணிக நிறுவனங்களின் தொலைபேசி மைபங்களின் அணிவகுப்பைத்தான் பார்க்கமுடியும். எப்படி ஒரு Shopping Mallஇற்கு இளைஞர்கள், யுவதிகள், நடுத்தர வர்க்கத்தினர் தேவைப்படுகிறார்களோ அதேபோல்தான் தொலைபேசி மைபங்களுக்கும் நடுத்தர வாழ்வியலை விரும்புகின்ற இளைஞர்களும், யுவதிகளும் வேலையாட்களாக தேவைப்படுகிறார்கள். பிலிப்பீனர்களின் இந்த ஒழுங்கமைப்பு மிகவும் சாதுர்யமானது. நாளொன்றிற்கு குறைந்தது 100 பேராவது வேலைதேடி இந்த மையங்களுக்கு வருகிறார்கள்.

இவ்வாறு வருபவர்களில் பலரை உள்வாங்கும் இந்த தொலைபேசி மையங்கள் படிப்படியா தமது ஓர் அங்கமாக வந்தவர்களை மாற்றி விடுகிறது. இதனல் பிலிப்பைன்ஸ்சில் பல்லயிரக்கணக்கான மத்திய வர்க்கத்தினர் உருவாகிறார்கள். பிலிப்பைன்ஸ்சில் Shopping Mallகள் இல்லாத ஓர் இருந்தால் அங்கு தொலைபேசி மைபங்களும் இல்லை என்றுதான் பொருள்படும். ஆதலால் அங்கு மத்திய வர்க்கத்தினரும் இருக்கப் போவதில்லை. ஓர் குறிப்பிட்ட தொழில் வாய்ப்பின் மூலம் பொருளாதார மாற்றங் கொண்ட நாடாக பிலிப்பைன்ஸ்சைக் குறிப்பிடலாம். பிலிப்பைன்ஸ் அரசு தொலைபேசி மையங்களை அமைப்பதற்கு 1990ம் ஆண்டு அனுமதித்தது முதல் இன்றுவரை சுமார் 1,2மில்லியன் பேர் தொலைபேசி மையங்களில் பணியாற்றுகிறார்கள். இது பிலிப்பைன்ஸின் உள்ளக தேசிய வருமானத்தில் 8%வீதம் ஆகும். அதோடு வளரும் இந்த வர்த்தகம் இந்தியாவில் இயங்கி வந்த பல தொலைபேசி மையங்களையும் தன்னகத்தே ஈர்த்திருப்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

பிலிப்பைன்ஸின் இந்த வளர்ச்சி இத்தோடு முடிவுக்கு வந்து விடுமோ என்ற அச்சத்தை உருவாக்கி இருக்கிறது புதிய பேசும் மென்பொருட்களும் எந்திரன்களும் (robot), முதலில் ஏன் வெளிநாட்டு நிறுவனங்கள் பிலிப்பைன்ஸை தங்களுக்கான தொலைபேசி மையங்கள் உள்ள நாடாக தேர்ந்தெடுத்தன என்பதைப் பார்ப்போமேயானால் முக்கியமாக பிலிப்பைன்ஸின் தொலைபேசி அழைப்பு முறமையை வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு சார்பாக மாற்றி அமைத்தமை இரண்டாவதாக இந்தியா தவிர்ந்த வேறு ஒரு நாட்டில் தங்களுக்கான தொலைபேசி மையங்களை உருவாக்கி தங்களை சிக்கல்களில் இருந்து தவிர்ப்பது. அடுத்தது காற்புணர்ச்சியோடு அழைப்புகளை ஏற்படத்தும் வாடிக்கையாளர்களோடு நேர்படப் பேசும் திறன் கொண்டவர்களாக பிலிப்பீனர்கள் தம்மைஇனம்காட்டிக் கொண்டனர். அத்துடன் அமெரிக்க அழைப்பளர்களை லாவகமாகக் கையாள அமெரிக்க காலாச்சாரத்தையும் நன்கு அறிந்தவர்களாக பிலிப்பீனோக்கள் இருக்கிறார்கள்.



இதைவிடவும் பிலிப்பீனர்கள் தமது பேச்சுப் பாணியை மாற்றாமல் பேசுவதனால் அமெரிக்கர்கள் நம்பிக்கையாக பிலிப்பைன்ஸ் தொலைபேசி மையங்களோடு உரையாடுகிறார்கள். விளைவு இந்தியாவில் தொலைபேசி மையங்களின் சக்கரவர்திகளாக இருக்கும் Infosys மற்றும் Tata consultancy போன்றன தமது மையங்கள் பலவற்றை பிலிப்பைன்ஸிற்கு குடிபெயர்த்தியுள்ளது. இவ்வகை தொடர் மாற்றங்கள் மூலம் 70% விதமான அமெரிக்க தொலைபேசி அழைப்புகளை கையாளும் நாடாக பிலிப்பைன்ஸ் இன்று மாறியுள்ளது.

பணமும் வேலைவாய்ப்பும் வளர்ந்தாலும் இந்த மையங்களில் வேலை புரிபவர்களோடு பல்வேறு பிரச்சனைகளும் சேர்ந்தே வளர்கிறது. கண்விழிக்கும் அமெரிக்கர்களுடன் உரையாடுவதற்காக விழிமூடாமல் பணிபுரியும் தொலைபேசி மைய ஊழியர்கள் கடுமையாக இரவு முழுவதும் உழைத்த பின் அண்ணளவாக காலை 7:30 மணிக்கே உறங்கச் செல்கிறார்கள். பெருநகர் சாலைகளின் இரைச்சல்களும் வெப்பமும் இவர்களை சரியாகத் தூங்கவிடுவதில்லை. இதனால் தூக்கமின்மையால் வியாதி ஏற்படுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. தூக்கத்துக்கு மருந்தாக மதுபானத்தையும் போதைப் பொருட்களைம் பாவிக்கிறார்கள். மறுபுறம் வேலைக்காக தூர இடங்களில் இருந்து வந்து மாடிக்குடியிருப்புகளில் பகிர்ந்து வாழும் வேலையாட்கள் பலமாதங்களுக்கு தமது கணவன் மனைவியைப் பார்க்காமல் இருக்கிறார்கள் இப்படி இருக்கும் பொழுது தமது பாலியல் ரீதியான தேவைகளை சக ஊழியர்களோடு வைத்துக்கொள்வதனால் பிமிக்ஷி போன்ற நோய்த்தொற்றுதல்களுக்கு ஆளாகிறார்கள் என பிலிப்பைன்ஸ் அரசாங்கம் கவலை தெரிவிக்கிறது.

சொல்லப்பட்ட பிரச்சனைகள் இருந்தாலும்நுனிநாக்கு ஆங்கிலத்தின் மூலம் வாடிக்கையார்களை கவரும் இந்த ஊழியர்களுக்கு அவர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் உடற்பயிற்சி நிலையம், கணினி கேளிக்கைகள் என பலவகை தற்காலிக இன்பங்களை வேலை செய்யும் பொழுதே வழங்குகின்றது. ஆனால் அறிமுகம் ஆகும் பேச்சுத்திறன் கொண்ட எந்திர மென்பொருட்கள் சிறிது சிறிது சிறிதாக உள் நுளைத்து இந்த தொலைபேசி மைபங்களின் தொழிலாளர்களின் வேலை வாய்பை நிறுத்துவதற்கு பன்நாட்டு நிறுவனங்கள் சரியான நேரத்துக்காக காத்திருக்கின்றன. உறக்கம் இன்மை தொற்று வியாதி என பாதிக்கப்பட்ட பலரின் நிலை??? வீழ்ச்சி பெறும் வாழ்க்கைத்தரம் என பல தரப்பட்ட பிரச்சனைகளை எதிர்கொள்ளப் போகிறார்கள் இவர்களுக்கு பன்னாட்டு நிறுவனங்கள் ஏதாவது பரிகாரம் வழங்குமா? இல்லை பிலிப்பையின் அரசுதான் பொதிசுமக்க வேண்டுமா?

என்ன இருந்தாலும் என் நாட்டு நிறுவனத்துக்கு வேலை பார்க்கலம் போல் இருக்கிறது. ●




**சிவமணி**

ekuruvi Night 2016. April 3,2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE
25 CTCC 1991 - 2016

# கனேடிய வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாக் கொண்டாட்டதில் வர்த்தகத்துறையில் சாதனை படைத்த தமிழர்களுக்கான விருது

CTCC 25 ஆண்டுகளாக தொடரும் வெற்றிகள்

தமிழர்கள் மத்தியில் தொடர்ந்து 25, 20, 15, 10 ஆண்டுகளாக வியாபார நிறுவனங்கள் மற்றும் தொழில்சார்துறை வர்த்தகத்தில் சாதனை படைத்திருக்கும் தமிழர்களை கௌரவித்து அவர்கள் மேலும் வெற்றிகளைப் பெற ஊக்கப்படுத்தும் முயற்சியாக எமது வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் நிகழ்வில் நீண்டகால வர்த்தக வெற்றியாளர்களுக்கான சிறப்பு விருதுகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

## விருது தேர்வு விதிமுறைகள்

### தேவையான தகுதிகள்

- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் தேவையான சகல உரிமங்களையும் கொண்டு மிகச் சிறந்த நிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் வியாபார நிறுவனத்தின் உரிமையாளராகவோ அல்லது தொழில்சார் துறையில் சேவையாற்றுபவராகவோ இருத்தல் அவசியம்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனடாவில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் வங்கிகளுடனான முறிதல் அதாவது வங்குரோத்து செய்திருந்தால், அதிலிருந்து சட்டப்படி வெளியேறியவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் முன்னரோ அல்லது தற்போதோ குற்றச்செயல்களில் ஈடுபட்டு குற்றம் சுமத்தப்பட்டவராக இருக்கக் கூடாது. குற்றச் சாட்டுகளில் இருந்து மன்னிப்பு பெற்றுக்கொண்டவர்களுக்கு விலக்கு அளிக்கப்படும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனேடிய மத்திய (சமஷ்டி), மாகாண அல்லது மாநகர அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினராகவோ அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவோ இருக்கக் கூடாது.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் கனேடிய மத்திய (சமஷ்டி), மாகாண அல்லது மாநகர அரசாங்கத்தில் இருந்து எவ்வகை கொடுப்பனவுகளையும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் ஏதேனும் ஒரு விருது வகைக்கு மட்டுமே பரிந்துரை செய்ய முடியும்.
- நீண்டகால வியாபார சாதனையாளர் விருதைப் பெறுவதற்கு விண்ணப்பதாரர் அல்லது நியமிக்கப்படும் வேட்பாளர் இடைவெளி இல்லாது தொடர்ந்து வியாபார நிறுவனத்தை அல்லது நிறுவனங்களை நடத்தியவராக இருக்க வேண்டும்.
- குடும்ப வியாபார நிறுவனத்தை நடத்தியவர்கள் தங்களுடைய துணைக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ வியாபாரத்தை மாற்றிக் கொடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்விடயம் குறித்து விசேட கவனம் எடுக்கப்படும்.

### தேர்வின் செயற்பாட்டு முறை

- விருதுகளுக்காய் விண்ணப்பித்தவர்களை அல்லது நியமிக்கப்பட்ட வேட்பாளர்களை கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு விருது தேர்வுக் குழுவினர் மிக தெளிவாக மதிப்பீடு செய்து வெற்றியாளரைத் தெரிவு செய்வார்கள்.
- மதிப்பீடு செய்யும் காலப்பகுதியில் மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால், விருதுகளுக்காக விண்ணப்பித்தவர்களை அல்லது நியமிக்கப்பட்ட வேட்பாளர்களை கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் 25வது ஆண்டு நிறைவு விருது தேர்வுக் குழுவினர் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வார்கள்.

விண்ணப்பப்படிவங்கள் தேவையானோர் www.ctcc.ca இணையத்தில் பதிவிறக்கம் செய்யலாம். உங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது எமது தபால் முகவரிக்கு தாமதிக்காமல் அனுப்பி வையுங்கள்.

**5200 Finch Ave. East, Suite # 209, Toronto, ON M1S 4Z4.** **Email : info@ctcc.ca**

உங்கள் விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 2016– ஏப்ரல் – 29 மாலை 5 மணி.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : ரொஷான் தவரட்ணம்
**Roshan Thavaratnam 416-561-5733**

**SILVER JUBILEE CELEBRATIONS**
September 9 -10, 2016
Markham Hilton Hotel & Metro Toronto Convention Centre

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பா நோக்கிய அகதிக் குடியேற்றம்

இகுருவிக்காக அரவிந்தன்

கனடிய அரசாங்கம் சிரியாவின் அகதிகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்ததன் பின்னர் பதினெட்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கனடாவுக்குள் வரவேற்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் கனடா மாத்திரமல்லாது ஐரோப்பாவும் பல மில்லியன் மக்களை தமது நாடுகளுக்குள் ஏற்றுள்ளது.

2015ஆம் ஆண்டில் மாத்திரம் மில்லியன் கணக்கானவர்கள் ஐரோப்பாவில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். இதற்கு முழு முக்கியக் காரணம், சிரியாவின் போர். இரண்டாம் உலகப்போருக்குப் பின் இந்த சம்பவமே அதிக எண்ணிக்கையிலான மக்களை ஐரோப்பாவில் தஞ்சம்புக வைத்துள்ளது.

போர், வறுமை மற்றும் துன்புறுத்தல் போன்ற காரணங்களுக்காக ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் தத்தமது நாடுகளில் இருந்து வெளியேறி ஐரோப்பாவில் நுழைந்துள்ளனர் என குடியேற்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த சம்பவம், ஐரோப்பிய ஒற்றுமைக்கு சவால்விடும் ஒரு மைல்கல்லாக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெனிவாவில் உள்ள குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம் (மிளிவி), கடந்த வருடத்தை விட நான்கு மடங்கு அதிகமான (அதாவது 1,005,504) மக்கள் ஐரோப்பாவினுள் நுழைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. இதில் கடல்மார்க்கமாக சென்றவர்களே அதிகம். இவ்வாறாக ஐரோப்பாவிற்குள் கடல்மார்க்கமாக செல்ல முயன்றவர்களில் 3,692 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனவும் புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவத்தின் இயக்குனர், குடியேற்றத்தை அவதானமாக கையாளுமாறு ஐரோப்பிய அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த விடயம் குறித்து அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம் கிரீஸ், இத்தாலி, பல்கேரியா, ஸ்பெயின், மால்டா மற்றும் சைப்ரஸ் அரசுகளின் பதிவுகளில் இருந்து விவரங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. இருந்தபோதிலும் ஐரோப்பாவில் நுழையும் மக்கள் இன்னும் அதிக எண்ணிக்கையில் இருக்கலாம் எனவும் ஐரோப்பாவுக்குச் செல்லும் மக்கள் அதிகளவில் இருப்பதால் அனைவரையும் கணக்கிட அதிகாரிகள் தடுமாறுவதை குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம் பதிவு செய்யவும் தவறவில்லை.

ஐரோப்பாவுக்குள் குடிபெயர கிரீஸ் நாட்டை தான் அதிகளவில் அகதிக் கோரிக்கையாளர்கள் பயன்படுத்துகின்றனர். மொத்தம் 820,000 மக்கள் துருக்கியில் இருந்து படகுகள் மூலம் கடல் வழியாக கிரீஸ் நாட்டில் கால்பதித்துள்ளதாக குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம் கூறுகின்றது.

இதுதவிர 150,000 மக்கள் வட ஆப்பிரிக்காவில் இருந்து மத்தியத் தரைக் கடல் வழியாக இத்தாலியில் நுழைந்தனர். துருக்கியில் இருந்து கிரீஸ் மற்றும் பல்கேரியாவினுள் நுழைந்தவர்களில் சிலர் இத்தாலியிலும் தஞ்சம் புகுந்தனர். ஏனைய மத்தியத் தரைக் கடல் நாடுகளுக்கு படகுகள் மூலம் சிறிய எண்ணிக்கையிலான மக்கள் சென்றடைந்துள்ளதாகவும் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவத்தினால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாத ஏனையவர்கள், ரஷ்யாவில் இருந்து நார்வே வரையிலான வேறு சில எல்லைகள் மூலம் ஐரோப்பாவினுள் நுழைந்துள்னர். ஐரோப்பாவினுள் நுழைந்த அகதிகளுள் பாதிக்கும் மேலானோர் சிரியர்கள், 20 சதவீதம் ஆப்கன் மக்கள் மற்றும் 7 சதவீதத்தினர் ஈராக்கியர்கள் எனவும் குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம்தெரிவித்துள்ளது. இவர்களில் போர் மற்றும் துன்புறுத்தலினால் வெளியேரியவர்களுக்கு அகதிகள் எனும் அடையாளம் வழங்கப்படும். வேலை தேடி சென்றவர்கள் திருப்பி அனுப்பப்படுவது வழமையாகின்றது.

ஐரோப்பா நோக்கிய பயணத்தில் இறந்தவர்களுள் 2,889 பேர் வட ஆப்பிரிக்காவில் இருந்து இத்தாலி நோக்கி சென்றவர்கள். 706 பேர் ஏகியன் கடல் வழியாக கிரீஸ் நோக்கி சென்றவர்கள் மற்றும் 72 பேர் ஸ்பெயின் நோக்கி சென்றவர்கள் என குடியேற்றத்திற்கான சர்வதேச நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகையே உலுக்கிய 3 வயது ஆலன் குர்தி போன்றவர்களின் உடல்கள் கிரேக்க கரைகளில் ஒதுங்கின. ஆலன் குர்தியின் மரணம் ஐரோப்பா விழித்துக்கொள்ள பேருதவி செய்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த அரை நூற்றண்டில் காணப்படாத இந்த குடியேற்றங்களுக்கு முக்கிய காரணம் சிரியாவில் நடைபெறும் போர். அகதிகளை எவ்வாறு வரவேற்க வேண்டும், எவ்வாறு சமாளிக்க வேண்டும் போன்ற விடயங்களில் ஐரோப்பிய அரசுகள் தடுமாற்றத்தைக் கண்டன.


கோடை காலத்தில், சில ஐரோப்பிய நாடுகள் தங்களது எல்லைகளை திறப்பதும் மூடுவதுமாக இருந்தன. பின் குளிர்காலத்தில் ஒரு நிலையான முறை அமலாகுவதற்கு முன்வரை குழப்பங்கள் இருந்துகொண்டே இருந்தன. முக்கியமாக ஹங்கேரி நாடு தனது எல்லைகளில் முள் வேலிகளை அமைத்து தனது அண்டை நாடுகளுக்கு எரிச்சலூட்டியது. இதனால் அகதிகள் வேறு வழிகளை தேடிச்செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.



ஜெர்மனி மற்றும் ஸ்வீடன் அதிக அளவிலான அகதிகளை வரவேற்றுள்ளது. ஜெர்மனி 1 மில்லியன் குடியேற்ற மக்களை 2015ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டுள்ளது. இதில் திருப்பி அனுப்பப்படும் மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. ●



ekuruvi Night 2016. April 3 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூர்வீககுடி மக்களின் பண்பாட்டு அபகரிப்பு



**எஸ்.ராஜ்மோகன்**

சங்ககாலத்தில் ஓர் அரசன் போர் புரிந்துநாட்டை வென்றபின்னர், அங்கு ஒரு சிற்றரசனை நியமித்து அரசாட்சி செய்வது வழக்கம். சிலசமயங்களில் சிற்றரசரை நியமிக்காமல் அந்தநாடு முழுமையாக அழிந்துபோக விடப்படும். இதற்காக அரசர்கள் செய்த யுக்திகளில் ஒன்றுதான் கொள்ளு விதைத்தல் ஆகும். அழிக்கப்பட வேண்டிய நாட்டில் உள்ள மக்களையும், வளங்களையும் தனது அதிகாரத்தில் உள்ள பகுதிகளுக்கு இடம் மாற்றி விட்டு, அந்தப் பகுதிகளில் உள்ள வயல்களில் கொள்ளு எனப்படும் தானிய வகையை விதைத்து விடுவார்கள். இந்தக் கொள்ளு என்ற தானியத்தின் சிறப்பம்சம்யாதெனில் அதை எங்கு விதைத்தாலும் நல்ல விளைச்சல் கிடைக்கும்; மழையோ தண்ணீரோ அதிகம் தேவையில்லை; பராமரிப்பும் தேவையில்லை; தம்மைத் தாமே இனப்பெருக்கி குறுகிய காலத்தில் பெருகி விடும். இதைவிட கொள்ளுக்குரிய இன்னுமொரு முக்கியமான சிறப்பம்சம், மண்ணில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் தாரளமாக உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. இதனால் கொள்ளு விதைத்த பகுதிகளில் உள்ள மண் வளங்கள் யாவும் விரைவில் பாதிப்படைந்து, வேளாண்மைக்கு உதவாத பகுதியாக மாறிவிடும். இதன் மூலம் நீண்ட காலத்திற்கு இந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியாதநிலை தோன்றும். இதுதான் அரசர்கள் ஒருநாட்டை உருப்படாமல் செய்வதற்கு செய்யும் இயற்கையான வழிமுறை.

இதே பாணியில் நாடு ஒன்றிற்குப் பதிலாக, உலகில் வாழ்ந்த ஒருமனித இனம் மறைமுகமாக அழிவுக்குள்ளாகியிருப்பது நாகரிகம் அடைந்த உலகில், வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒருநிகழ்வாக உள்ளது.

இயற்கையோடு வாழ்ந்து, அதனை நேசித்து, ஒன்றித்து, வணங்கி, பண்பாட்டு விழுமியங்களில் சங்கமித்து, பலமொழிகள்பேசி, சமூகப் பொருளாதார முறைமைகளைக் கொண்டு உறுதியாக இருந்த ஒரு சமுதாயம் தான் கனேடிய பூர்வீககுடி மக்களாவர் (Aboriginal people) இந்த சமுதாயத்தின் கட்டுமானம் தான் ஐரோப்பியர்களின் திட்டமிட்ட சதியினாலும், ஆக்கிரமிப்பினாலும் சீர்குலைக்கப்பட்டது. இந்த நிலை கனடாவில் வாழ்ந்த பூர்வீக குடிமக்களுக்கு மட்டுமல்ல அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த பூர்வீக குடிமக்களுக்கும் ஏற்பட்டது. உலகெங்கும் இவர்கள் Aboriginal People, Native Indians, First Nation People, Red Indians போன்ற பலபெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.

கனேடிய பூர்வீககுடி மக்கள் என்பது, ஐரோப்பியர்கள் கனடாவிற்கு குடியேற முன்பு, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இங்கு வாழ்ந்த மக்கள் ஆகும். கண்ணியமாகவும், கட்டுப்பாடாகவும் வாழ்ந்த கனேடிய பூர்வீககுடி மக்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் பின்வரும் மூன்று இனங்களாகப் பிரிக்கப்படுகின்றனர். முதல் குடிமக்கள் (First Nations), இனியுட் (Inuit), மெற்றிஸ் (Metis). அத்துடன் இவர்கள் வாழ்ந்த பிரதேசங்களின் அடிப்படையில் மேலும் பலபிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒரு பெரிய சமுதாயத்தின் நீண்டகால அழிவின் பின்னர், 2011 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின் படி,கனடாவில் 1,400,685 பூர்வீககுடி மக்கள் வாழ்வதாகத் தெரிய வருகின்றது. இதுகனடாவின் மொத்த சனத்தொகையில் 4.3 சதவீதமாகும். இவர்களில் முதல் குடிமக்களின் தொகை 851,560 ஆகவும், மெற்றிஸ் இன் தொகை 451,795ஆகவும், இனியுட் இன் தொகை 59,445 ஆகவும் இருக்கின்றது.

ஐரோப்பியர்கள், குளிர் தேசத்தில் எவ்வாறு தப்பிப் பிழைத்தல் என்பதை பூர்வீக குடிமக்களிடம் இருந்து கற்றுக் கொண்டு, அவர்களுக்கே ஆப்பு வைத்துவிட்டார்கள். தொடர்ந்த ஐரோப்பியர்களின் குடியேற்றமும் ஆதிக்கமும் பூர்வீககுடி மக்களின் வாழ்வியலை சிதைத்து குட்டிச் சுவராக்கியது. ஐரோப்பியர்கள் வந்தபோது தனிச்சொத்துரிமை என்ற கருத்துருவை மட்டுமே கொண்டிருந்த இந்த மக்களிடமிருந்து பெரும் நிலப் பகுதிகளை மிகச் சொற்ப தொகைகளுக்கு ஐரோப்பியர்கள் சொந்தமாக்கிக் கொண்டார்கள். இதனால் பூர்வீககுடி மக்களின் சொத்துகள் பெருமளவில் அபகரிக்கப்பட்டு ஐரோப்பியர்களின் கைகளுக்கு மாறியது. இதற்கு முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது போதைப் பொருட்கள் ஆகும். குறைந்த விலையில் மதுபானங்களை அதிகளவில் விநியோகித்து, பூர்வீககுடிமக்களை அதில் அடிமையாக்கி, காரியத்தை இலகுவில் முடித்துக் கொண்டார்கள். இது ஒரு முற்று முழுதான ஏமாற்றும் செயலாகவே கருதப்படுகின்றது. அத்துடன் ஐரோப்பியர்களின் வருகையினால் புதுப் புது நோய்களும் மக்களுக்குப் பரவ ஆரம்பித்தது. இந்தப் புதிய நோய்களுக்குரிய எதிர்ப்புத்தன்மை மற்றும் மருத்துவ வசதிகள் ஏதுவும் இன்றி பெரும்பான்மையான பூர்வீககுடி மக்கள் மரணமடைந்தார்கள். ஐரோப்பியர்களுக்குக் கிடைக்கும் மருத்துவ வசதிகள், இவர்களுக்குக் கிடைக்காமையே இந்த அழிவுக்குக் காரணமாக அமைந்தது.

ஐரோப்பியர்களின் வருகையை எதிர்த்து பூர்வீககுடி மக்கள் பலவழிகளிலும் போராட முயன்ற போதும், துப்பாக்கிகளுக்கு முன்னால்அம்பும் வில்லும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. தொழில்நுட்பத்திலும், ஒழுங்கமைப்பிலும், நிர்வாகத்திலும் மேம்பட்டிருந்த ஐரோப்பியர்கள், இவர்களை இலகுவாக வெற்றிகொண்டார்கள் என்பதே உண்மை. ஐரோப்பியர்கள் ஆயிரத்து நானூறுகளின் பின்பகுதியில் அமெரிக்கக் கண்டத்தை ஆக்கிரமித்துத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்கள் ஆவர். அதன் பின்னரான காலத்தில் பூர்வீககுடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் அத்தியாவசிய வசதிகளற்று அரசியல், சமூகம், கல்வி, விளையாட்டு போன்ற எந்தத் துறையிலும் போதிய முன்னேற்றமின்றி வாழ்ந்து வருகின்றனர். அகதிகளாக வந்த புலம் பெயர் மக்களை இந்நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டுவரும் அரசுகள், பூர்வீககுடி மக்களைஅவர்களது சொந்த இடத்திலேயே கவனிப்பாரற்று விட்டுவிட்டது. வீதிகளில் பிச்சை எடுப்பவர்கள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களில் (homeless) பெருமளவிலானவர்கள் பூர்வீககுடிமக்களே என்பது கவலைக்குரிய விடயம்.

தமது சமய மற்றும் பண்பாட்டுக் கொள்கைகளை வலியுறுத்திய ஐரோப்பியர்கள், கணிசமான அளவு பூர்வீககுடிமக்களைக் கட்டாயமாக கிறித்தவ சமயத்திற்கு மதமாற்றம் செய்தார்கள். அதற்கு வறுமையும் ஒரு காரணமாக இருந்தது. கிறித்தவ பாடசாலைகள்அமைக்கப்பட்டு, குழந்தைகள் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்டனர். விடுதிகளில் தங்கவைக்கப்பட்ட பூர்வீககுடி மக்களின் குழந்தைகள் மீது பாடசாலை நிர்வாகம் இழைத்த கொடுமைகள் எண்ணிலடங்காது. பிள்ளைகளை மதம் மாற்றி, அவர்களை தமது பழக்கவழக்கங்களுக்கு இசைபடவைத்து அவர்களின் பாரம்பரியத்தை முற்றாக இழக்கச் செய்தார்கள். பாடசாலை விடுதிகளில் இடம்பெற்ற துஷ்ப் பிரயோகங்களும், கொடுமைகளும் இறுதியில் நிர்வாகத்தினரால் ஒப்புக்கொள்ளப்பட்டு முடிவுக்கு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

தனிமை வாழ்க்கை, ஏழ்மை நிலை,உறைவிடமின்மை,பண்பாட்டு விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தரப்படாமை போன்ற பல காரணங்களால் பாதிப்படைந்த இந்தச் சமுதாயத்தில் தற்கொலை, போதைப் பொருள் பாவனை, குற்றநடவடிக்கை போன்றவை தலைவிரித்தாடுகின்றன. கனேடிய அரசுகள் யாவும் பூர்வீககுடிமக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள போதும் அது எந்தஅளவுக்கு வெற்றியடையும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

அண்மைக் காலங்களில் பூர்வீககுடிமக்கள் பற்றிய பலவிடயங்கள் வெளிச்சத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. கடந்த மாதம் Saskatchewan இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம், பூர்வீககுடி மக்களின் இன்றைய நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றது. அரச நிர்வாகம் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு, நிதிவசதிகள் தேவைப்படுபவர்களுக்கு சரியாகச் சென்றடைந்தால் மட்டுமே பூர்வீககுடி மக்கள் அழிவுநோக்கிய தமது பயணத்தில் இருந்து மீளமுடியும்.

இயற்கையுடனான சங்கமிப்பு என்ற வாழ்வியல் வேதாந்தத்துடன் வாழ்ந்த ஒருசமுதாயத்தின் நிலப்பரப்பில் ஐரோப்பியர்கள் விதைத்த கொள்ளுபற்றைக் காடுகளாகிவிட்டது. ●

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடாவின் வரலாறு-1

குரு அரவிந்தன்

கனடா 1867 ஆம் ஆண்டே அரசியல் சட்ட அமைப்பு கொண்ட, சுமார் 30 லட்சம் குடிமக்களைக் கொண்ட, ஒரு நவீன கூட்டாட்சி நாடாக உருவானது. ஆனால் அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே பழங்குடிமக்கள் கனடா நிலப்பரப்பில் வசித்து வருகின்றனர். இன்று கனடா சுமார் 350 இலட்சம் பல்லின மக்களைக் கொண்ட வளர்ச்சியடைந்த இரண்டாவது பெரிய நிலப்பரப்பைக் கொண்ட ஜனநாயக நாடாக இருக்கின்றது. வட அமெரிக்காவின் பழங்குடி மக்களே காலாகாலமாய் இந்த மண்ணில் வாழ்ந்தவர்களாவார்.

பல ஆயிரம் வருடங்களுக்கு முன் பழங்காலத்து இந்தியர்களின் (Paleo-Indians) வருகையுடன் கனடிய சரித்திரம் ஆரம்பமாகியிருக்கிறது. கற்கால ஆயுதங்கள் வட அமெரிக்காவில் பாவிக்கப்பட்டதற்கான ஆதாரத்தில் இருந்தே இதை உறுதி செய்ய முடிகின்றது. கடல் மட்டம் அக்காலத்தில் பதிவாக இருந்ததால் சில கண்டங்களுக்கு இடையிலான தொடர்பு காரணமாகத் தரைமார்க்கமாகவே அனேகமான இடங்களுக்கு மக்களால் செல்ல முடிந்திருக்கிறது என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணமாக இருக்கின்றது. தொடக்க காலத்தில் ஓல்ட் குறோ பிளாட்ஸ் (Old Crow Flates), புளுபிஷ் கேவ்ஸ் (Blue Fish Caves) போன்ற சில இடங்களில் பழங்குடி இந்தியர் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இருக்கின்றன. ஆதிகாலத்தில் பாவிக்கப்பட்ட ஈட்டி, உளி, பானை, காப்பு போன்ற மிகப்பழைய பொருட்களின் சிதைவுகளை இப்பகுதிகளில் அகழ்வுகளை மேற்கொண்ட போது காணமுடிந்தது. அரும்பொருட் காட்சியகத்தில் ஆதிகாலத்தில் பழங்குடி மக்களால் பாவிக்கப்பட்ட பொருட்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

கனடிய பழங்குடிமக்கள் அரசியல் நோக்கில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பின்வரும் மூன்று வகைகளாக இனங்காணப்படுகின்றனர்.

1. பெஸ்ட் நேசன்ஸ் (First Nations)
2. இனுவிட் (Inuit),
3. மெயிற்ரீஸ் (Metis).

இவர்கள் மூன்று பெரும்வகையான அரசியல் சட்ட அடையாளங்களை கொண்டிருந்தாலும், இனம், மொழி, பண்பாடு, வாழ்வியல், புவியியல் நோக்கில் பலவகையாக வேறுபடுவார்கள்.

தங்களை 'இண்டியன்ஸ்' என்று சொல்வதை இழிவானதாகக் கனடிய பழங்குடிமக்கள் கருதியதால், அவர்கள் தங்களை முதற் குடிமக்கள் (First Nations) என்று அழைத்தார்கள். இவர்களைக் கனடிய செவ்விந்தியர்கள் என்றும் சிலர் குறிப்பிடப்படுவதுண்டு. இம்மக்களின் வாழ்க்கைமுறை அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளைப் பொறுத்து வேறுபடுகின்றது. இம்மக்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளைக் கவனத்தில் கொண்டு முதற் குடிமக்களை ஆறு வகையாகப் பிரிக்க முடிகின்றது. அவை பின்வருமாறு:

1. சமவெளி குடிமக்கள் — (Plains)
2. இறொக்குவா குடிமக்கள் - Iroquoian Nations
3. வடக்கு வேடர் குடிமக்கள் — Iroquoian Nations
4. வடமேற்கு குடிமக்கள் — Northern hunters
5. அல்கோன்கியன் குடிமக்கள் — Igonkian Nations
6. பீடபூமி குடிமக்கள் (Plateau)

கனடாவின் மிக குளிரான மேற்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடி மக்களே இனுவிட் குடிமக்களாவார். எஸ்கிமோ என்று இவர்களைச் சிலர் முன்னாளில் அழைத்தாலும், அதை அவர்கள் இழிவாகக் கருதியதால் அந்தப் பதம் தற்போது கைவிடப்பட்டுள்ளது.




### ஐரோப்பியர்களின் வருகை

கடல்வழி மார்க்கம் கண்டு பிடிக்கப்பட்டதால், ஐரோப்பாவில் இருந்து முதன் முதலாகப் பிரெஞ்சு மக்கள் 1605 ஆம் ஆண்டளவில் ரோயல் துறைமுகம் என்ற பகுதியில் வந்து குடியேறினார்கள். அதனைத் தொடர்ந்து 1608 ஆம் ஆண்டளவில் மேலும் சில பிரெஞ்சு மக்கள் கியூபெக் பகுதியில் முதன்முதலில் வந்து குடியேறினார்கள். அவர்களைத் தொடர்ந்து வடஅமெரிக்காவிற்கு வந்த ஆங்கிலேயர் நியூ பவுண்ட்லாந்தில் 1610ம் ஆண்டு குடியேறினர். 1600களில்தான் ஐரோப்பியரின் குடியேற்றங்கள் வட அமெரிக்காவில் இடம் பெற்றன. மிருகத்தோல் வியாபாரத்தில் அவர்களுக்கு இருந்த நாட்டம் காரணமாகவே வட அமெரிக்காவிற்கு வந்த அவர்கள் நாளடைவில் நிரந்தரமாகத் தங்குவதற்கு முற்பட்டனர். ஆயுதப் பலம் கொண்ட இவர்களின் வருகையால் பழங்குடிமக்கள் தங்கள் பாரம்பரிய நிலங்களில் இருந்து படிப்படியாக வெளியேற வேண்டிய நிலை அனேக இடங்களில் இடம் பெற்றது. அது மட்டுமல்ல, பழங்குடி மக்களை இவர்கள் தங்கள் தேவைக்கேற்பப் போர்வீரர்களாகவும், வேட்டை ஆடுபவர்களாகவும், தோல் வியாபாரத்திற்கு வேண்டியவர்களாகவும் பாவித்துக் கொண்டனர்.

மிருகத்தோல் வியாபாரமே முக்கிய வியாபாரமாக இருந்ததால் பிரெஞ்சு மக்கள் குடியேறிய இடங்கள் அதற்குச் சாதகமாக இருந்தது. அவர்கள் குடியேறிய பகுதிகளிலேயே விலங்குகள் அதிகமாக இருந்ததால் அவர்களின் வியாபாரமும் செழிப்படைந்தது. இதன் காரணமாக பிரித்தானியருக்கும் பிரெஞ்சு வியாபாரிகளுக்கும் இடையே வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டது. எனவே பிரெஞ்சுக் குடியேற்றங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று பிரித்தானியர் விரும்பினர். இதன் காரணமாக 1756 இல் ஏழுவருடப்போர் (Seven Years War) பிரித்தானியாவிற்கும் பிரான்சுக்கும் இடையே ஆரம்பமானது. பிரெஞ்சு குடியேற்றவாசிகள் அதிகமாக வடஅமெரிக்காவில் குடியேறியிருந்தாலும் அவர்களிடம் அதிக போர்வீரர்கள் இருக்கவில்லை. எதிர்பாராத விதமாகப் பிரித்தானிய படைகளின் திடீர் தாக்குதலால் பிரெஞ்சுப் படைகள் நிலை குலைந்தன. இறுதிப் போரான பட்டில் ஒவ் த பிளென்ஸ் ஒவ் அப்ரகாம் (Battle of the plains of Abraham) போரில் பிரெஞ்சுப்படைகள் (1759) சரணடைந்தன. இதனால் பிரெஞ்சு குடியேற்றங்கள் எல்லாம் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. ஜேம்ஸ் வூல்வ் என்பவர் பிரித்தானிய படைத் தளபதியாகவும் மாக்கியூடி மொன்ற்ஹாம் என்பவர் பிரெஞ்சுப்படைத் தளபதியாகவும் இருந்தனர். இந்த யுத்தத்தில் இருவரும் மரணமடைந்தனர். (James Wolfe and the Marquis de Montcalm were the respective commanders of the British and French forces in the Seven Years War. )

(தொடரும்)



கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வளர்ச்சி நிதிக்காக நிகழ்த்தப்பட்ட நிகழ்வில் கோயில் தர்மகர்த்தாவும் , அதன் ஸ்தாபகருமான ராஜ்குமார் சின்னத்துரை அவர்களுக்கு அழிக்கப்பட்டது . இவர் தன் சுயமுயற்சியால் அக்கோயிலை புனரமைத்து அதன் பின்னர் அதனை பொது கோயிலாக மக்களிடம் கொடுத்தவர் என்பது குறிபிடத்தக்கது . இக்கோயில் கடந்த நான்கு வருடங்களாக வெகுசிறப்பாக நடைபெறுகின்றது





ekuruvi Night 2016. April 3 2016 அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிரிய நெருக்கடியும் மியூனிச் இணக்கப்பாடும் மோதல்கள் நிறுத்தப்படும் எனும் மாயை

கடந்த வெள்ளிக்கிழமை மியூனிச் நகரில் முக்கியமான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்த உடன்பாடு சிரியாவில் சண்டையை நிறுத்துவதுடன் தொடர்புடையதாகும். இதன் பிரகாரம், சிரியா முழுவதிலும் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். சண்டையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும். அடுத்ததாக, சமாதானப் பேச்சுவார்த்தை. இந்தப் பேச்சுவார்த்தையில் சிரியாவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய நிலைமாற்றத்திற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

சிரிய உதவிக்குழு என்ற பெயரில் அணி திரண்ட நாடுகள், இத்திட்டத்தை வரைந்துள்ளன. இந்தக் குழுவில் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன. சவூதி அரேபியா, ஈரான், துருக்கி ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. இவை சிரியாவின் நெருக்கடியில் நேரடியாக சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு ஆதரவளிப்பவை. ஐந்தாண்டு கால யுத்தம் எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில், இந்நாடுகளின் செல்வாக்கு முக்கியமானது.

சிரியாவின் நெருக்கடியைப் போன்று, ஆயுத மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் சிக்கலானது. இந்த மோதல்களில் சம்பந்தப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். பொதுவாக ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் தரப்பை ஒரு பக்கத்திலும், எதிரணியை மறுபக்கத்திலும் வைத்துப் பார்க்கலாம்.

ஜனாதிபதியை ஆதரிக்கும் தரப்பில் சிரியாவின் இராணுவம், ஹிஸ்புல்லா என்ற லெபனானிய ஷியா குழு, ஈராக்கிய ஷியா ஆயுதபாணி இயக்கங்கள் முதலானவை இருக்கின்றன. எதிரணியில் பல்வேறு இயக்கங்கள் உள்ளன. இந்தத் தரப்புகளுக்கு ரஷ்யா உதவி செய்கிறது. ஈரானின் உதவியும் உண்டு. எதிரணியிலும் பல ஆயுதபாணிக் குழுக்கள் இயங்குகின்றன. இவற்றில் சிரிய விடுதலைச் சேனை முக்கியமானது. இது தவிர, ஷியா குழுக்களை பகையாளிகளாக நோக்கும் சுன்னத்துல் ஜமாஅத் குழுக்களும் உண்டு. இந்தக் குழுக்களில் பலவற்றிற்கு சவூதி அரேபியா உதவி செய்கிறது.

இந்த நெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களில், அல்நுஸ்ரா இயக்கமும், இஸ்லாமிய இராச்சியம் என்று கூறிக் கொள்ளும் இயக்கமும் முக்கியமானவை. இதில் அல்நுஸ்ரா முன்னணி அல்—கொய்தாவுடன் தொடர்புடையது. இந்தக் குழு ஷியா கோட்பாடுகளுக்கு எதிரானது. இஸ்லாமிய இராச்சியத்தைப் பிரகடனப்படுத்திய ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்திற்கு சிரியாவின் நெருக்கடியில் இருக்கும் பங்கு முக்கியமானது. இந்த இயக்கம் பஷார் அல்—அசாத்தின் அரசாங்கத்திற்கு எதிராகவும், குர்திஷ் இயக்கங்களுக்கு எதிராகவும் சண்டையிடுகிறது.

ஆயுதக் குழுக்களின் வலைப்பின்னல் சிக்கலானது. இதில் ஆயுதக் குழுக்களின் சார்புநிலைகளை வரையறுக்க முடியாதது. ஒவ்வொரு குழுக்களும் அரசியல் நோக்கங்கள் இருக்கின்றன. இவை வேறுபட்ட மதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றுகின்றன. உதாரணமாக அல்நுஸ்ரா என்ற குழுவை எடுத்துக் கொண்டால், இதனை சலாபிஸ ஜிஹாதிஸம் என்ற இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளை அனுசரிக்கும் குழுவாக இனங்காட்டலாம். இந்தக் குழு ஷியா கோட்பாடுகளை ஏற்பதில்லை. அதற்காக, அல்நுஸ்ரா இயக்கத்தை சவூதி அரேபியாவின் தரப்பிற்குள் வைத்து பார்க்க முடியாது. ஏனெனில், அந்த இயக்கம் சவூதியின் வஹாபிஸத்தை ஏற்பதில்லை. சவூதி அரேபியா அல்—நுஸ்ராவை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்திருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மியூனிச் நகரில் ஐந்து மணித்தியாலம் பேச்சுவார்த்தை நடத்திய தரப்புக்கள், இந்த சிக்கலை சிறப்பாக உணர்ந்திருக்கின்றன. சிரியாவில் போர் நிறுத்தம் என்பது எட்டாக்கனி என்பதை அறிந்து, போர் நிறுத்தத்திற்கு பதிலாக தற்காலிகமாக மோதல்களை நிறுத்துதல் என்ற சொற்றொடரைப் பிரஸ்தாபித்துள்ளன. இதன் பிரகாரம், சண்டையின் தீவிரத்தைக் குறைத்துக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு ஏதுவான பின்புலத்தை ஏற்படுத்துவது வல்லரசுகளின் நோக்கம். பேச்சுவார்த்தையில் போர் நிறுத்தம் பற்றி பேசலாமென அவை கூறியிருக் கின்றன.

இதில் முக்கியமான விஷயம் யாதெனில், மோதல்களை நிறுத்தும் திட்டத்திற்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கமும், அல் நுஸ்ராவும் உள்வாங்கப்படவில்லை. அவை பயங்கரவாத இயக்கங்களாக முத்திரை குத்தப்பட்டிருப்பதால், அவற்றிற்கு எதிரான தாக்குதல்கள் தொடருமென அமெரிக்காவும், ரஷ்யாவும் அறிவித்துள்ளன.

சிரிய உதவிக் குழுவின் திட்டம் தாக்குப் பிடிக்குமா என்பது முக்கியமான கேள்வி. சிரியாவின் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட வெளிச்சக்திகள் முக்கியமான விடயங்களை எவ்வாறு கையாளப் போகின்றன என்பதில், கேள்விக்கான விடை தங்கியிருக்கிறது என்று கூற முடியும்.

முதலில் மோதல்களை நிறுத்துதல் என்ற விடயத்தை ஆராயலாம். இன்று ரஷ்ய போர் விமானங்கள் அலெப்போவில் நடத்தும் கடுமையான விமானத் தாக்குதல்கள் காரணமாக, சிரிய அரச படைகளின் கை மேலோங்கியிருக்கிறது. எதிரணிப் படைகள் பலவீனம் அடைந்துள்ளன. சிரியாவிற்கு படைகளை அனுப்பப் போவதாக சவூதி அரேபியா எச்சரித்த பின்புலத்தில், மியூனிச் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், பயங்கரவாதிகள் தொடர்ந்தும் தாக்கப்படுவார்கள்.

இதில் பயங்கரவாதிகள் என்ற பதம் சிக்கலானது. சிரியாவின் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் மத்தியிலான கொள்கை வேறுபாடுகளை ஆராய்கையில், யாருக்கு யார் பயங்கரவாதி என்பதை தீர்மானிப்பது கடினம். ஒரு நாடு ஒரு இயக்கத்தின் மீது பயங்கரவாத முத்திரை குத்தியிருக்கிறது என்று வைத்துக் கொள்வோமே. அதே இயக்கத்தை இன்னொரு நாடு விடுதலைப் போராட்ட இயக்கமாக அங்கீகரித்திருக்கக் கூடும். எனவே, அந்த இயக்கத்தின் மீதான தாக்குதல் சமநிலையைப் பாதிக்கலாம். இது குழுக்களுக்கு இடையிலான உறவுகளுக்கும் பொருந்தக்கூடிய விஷயமாகும்.

இங்கு ஐ.நா. அனுசரணையிலான சிரிய சமாதானப் பேச்சு வார்த்தைகளை நினைவுகூர்வது அவசியமாகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகள் கடந்த ஜனவரி மாதம் ஜெனீவாவில் இடம்பெற்றன. ஆரம்பித்த மாத்திரத்தில் பேச்சுக்கள் முறிவடைந்திருந்தன. இதற்கான பல காரணங்களில் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியல் பற்றிய கருத்து வேறுபாடும் முக்கியமானது. பேச்சுவார்த்தைக்கு முன்னதாக பயங்கரவாதக் குழுக்கள் அடங்கிய பட்டியலைதயாரிக்கவேண்டும்என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்ய எந்தவொரு தரப்பாலும் முடியவில்லை.

அடுத்து மோதல்களை நிறுத்துதல் என்ற விஷயத்தை ஆராயலாம். சிரிய நெருக்கடியில் சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுக்கள் சிரிய உதவிக் குழுவின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டால் மாத்திரமே, துப்பாக்கிகளுக்கு ஓய்வு கொடுக்க முடியும். இது எந்தளவிற்கு சாத்தியம் என்பது முக்கியமானதொரு கேள்வி.

ரஷ்யாவும், ஈரானும் பஷார் அல்—அசாத்தை ஆதரிக்கின்றன. அந்நாடுகள் சொல்வதை சிரிய ஜனாதிபதி கேட்பார். அவர் தமது பக்கத்தைச் சேர்ந்த குழுக்களைக் கட்டுப்படுத்தி வைக்கலாம். சிரிய அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடும் குழுக்கள் ஒரு கட்டுக்கோப்பிற்கு உட்படாதவையாகும். அவற்றைக் கட்டுப்படுத்துவது கடினம்.

இந்தக் குழுக்கள் மியூனிச் இணக்கப்பாட்டை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றன. போர் நிறுத்தம் என்ற பெயரில், போர்க்களத்தில் அரச படைகள் வலுவூட்டப்படுவதாக எதிரணிக் குழுக்கள் கருதுகின்றன.

மியூனிச் இணக்கப்பாடு அரசியல் நிலைமாற்றம் தொடர்பான இறுதி இலக்கு பற்றி பேசுகிறது. இந்த நிலைமாற்றத்தில் பஷார் அல்—அசாத்தின் நிலை பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை.

அல்—அசாத் இல்லாத சிரியாவை ரஷ்யாவும், ஈரானும் விரும்ப மாட்டா. அவர் பதவியில் இருப்பதை அமெரிக்காவும், சவூதி அரேபியாவும் விரும்பப் போவதில்லை.

இந்நாடுகளுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகளை தற்காலிகாக தள்ளி வைத்து, சமாதான முயற்சிகளை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்தும் ஏற்பாடாக சிரியாவின் அரசியல் நிலைமாற்றத் திட்டத்தில் அல்—அசாத்தின் பெயர் சேர்க்கப்படவில்லை என்று கருதலாம். ஆனால், அல்—அசாத்தின் பங்களிப்பு இல்லாத சமாதானத் திட்டம் எந்தளவிற்கு சாத்தியம் என்பது கேள்விக்குறியே.

துப்பாக்கிகளுக்கு முற்றுமுழுதாக ஓய்வு கொடுக்க முடியாத போர் நிறுத்தம். போரிடும் தரப்புக்களை சரியாக வரையறுக்க முடியாத பொறிமுறைகள். போரில் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் நம்பிக்கையை வெல்ல முடியாத சமாதான திட்ட வரைபு. இவையே மியூனிச் இணக்கப்பாட்டின் குணாதிசயங்கள்.

முழுமை பெறாததொரு சமாதானத் திட்டத்தின் தேவை, ஐரோப்பிய நாடுகள் தொடுத்த அழுத்தத்தால் ஏற்பட்டதென கருத இடமுண்டு. சிரியாவில் இருந்து புலம்பெயரும் அகதிகள் உலகளாவிய நெருக்கடியாக பரிணமிக்கக் கூடும் என்ற அச்சத்தின் அடிப்படையில், இந்தத் தற்காலிகத் தீர்வு எட்டப்பட்டிருக்கவும் கூடும்.

இந்த இணக்கப்பாடு எந்தத் திசையில் செல்லக்கூடும் என்று கணிப்பதை விடவும், இது ஏற்படுத்தியுள்ள வாய்ப்பைப் பிரஸ்தாபிப்பது முக்கியமானதென கருத முடியும். இந்த வாய்ப்பு வேறொன்றும் அல்ல. வாரக்கணக்கில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அல்லற்படும் இலட்சக்கணக்கான மக்களுக்கு பொருட்களை விநியோகிப் பதற்கு கிடைத்துள்ள வழியாகும்.

இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையை வெல்லாத பட்சத்தில், எந்தவொரு இணக்கப்பாடும் வெற்றி பெறப் போவதில்லை.

இந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்தி யிருப்பவர்கள் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லர். தத்தமது சுயநல நோக்கத்திற்காக பிரச்சினையை ஏற்படுத்தியவர்கள் ●

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thank you

**For Your**

*Continuous Trust*




Life100 TOP Producer 2014

Life100 TOP Producer 2015







Life100
INSURANCE & INVESTMENTS INC.

*For friendly advice & free quote,*

**Vimal Visvanathan**
Insurance/Investment Advisor

**647.991.1110**
vimal@life100.ca

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6. www.life100.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை எதிர்ப்பு முயற்சியில் இணையும் தமிழ் பல்பொருள் அங்காடிகள்

நாம் ஒரு மிகச்சிறந்த நகரத்தில் வசித்தாலும், சில சவால்களை எதிர்கொள்கின்றோம். இவற்றில் ஒன்று வறுமை. ரொறன்ரோவில் சிறுவர் வறுமை 29 சதவீதமாக உள்ள நிலையில் ரொறன்ரோவை கனடாவின் சிறுவர் வறுமை தலைநகரம் என சிலர் வர்ணிக்கின்றனர். இதனை எதிர்கொள்ளும் வகையில், New Spiceland பல்பொருள் அங்காடி, New Ocean பல்பொருள் அங்காடி, ERAA பல்பொருள் அங்காடி மற்றும் Sun City பல்பொருள் அங்காடிகளுடன் பல சமூகத் தலைவர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து ஸ்காபுரோவைத் தளமாகக் கொண்ட வறுமை எதிர்ப்புக் குழுவான Scarborough Rosewood Food Drive Inc.(SRFD) என்னும் நிறுவனத்தின் ஊடாக எமது நகரத்தை முன்னேற்ற முன்வந்துள்ளனர்.

ரொறன்ரோவில் குறிப்பாக ஸ்காபுரோ மற்றும் எடொபிகோக் ஆகிய பகுதிகள் வசிப்பதற்கு மிகச் சிறந்தவை. இருப்பினும் இவை அதிகரித்த வறுமை மற்றும் பசி போன்ற சிக்கல்களை சந்திக்கின்ற பகுதிகளாகவும் அடையாளம் காணப்பட்டவை. Toronto Star பத்திரிகை அண்மையில் "குறிப்பிடத்தக்க நடுத்தர வருமான கொண்ட நகரம் என்னும் நிலையிலிருந்து, ஏழைகளைச் சூழ்ந்து செல்வந்தர்கள் வாழும் ஒரு புறநகர்" என ரொறன்ரோவை வர்ணித்துள்ளது.

ஸ்காபுரோ மற்றும் எடோபிகோக் பகுதிகளில் வாழும் பலர் மறைமுகமாக இந்த வறுமையை சந்திக்கிறார்கள். நிச்சயமற்ற தொழில்களை எதிர்கொள்கிறார்கள். (குறிப்பிட்ட சம்பளம் இல்லாத பணி, நேர நிலையற்ற பணிகள், அனுகூலமில்லாத பகுதிநேர பணிகள் போன்றவை). இதனால் வீடு, போக்குவரத்து, உணவு, குழந்தை பராமரிப்பு போன்ற அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட செலவிட பணமில்லாமல் தவிக்கின்றனர்.

ஸ்காபுரோ மற்றும் எடோபிகோக் பகுதிகளில் வாசிக்கும் பணியாளர்கள் இந்த நிச்சயமற்ற பணிகளின் ஒரு பகுதியாக இருப்பது மட்டுமல்லாமல் இந்த பணியாளர்களின் எண்ணிக்கை கூடுவதால் இவர்களும் இவர்களது குழந்தைகளும் உணவு வங்கிகளை நாடுகின்றனர். மொழி வேறுபாடு மூலம் வரையறுக்கப்பட்ட சமூகங்களின் குழந்தை வறுமை விகிதங்கள் ஆங்கிலம் பேசும் குடும்பங்கள் வசிக்கும் பகுதிகளை விட 4 மடங்கு அதிகமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

2015ஆம் ஆண்டின் அறிக்கையின் பிரகாரம் 150,000 குழந்தைகள் ரொறன்ரோவில் வறுமையில் வாழ்கின்றனர். ரொறன்ரோவில் வாழும் குழந்தைகளில் 3இல் 1 குழந்தைக்கு உணவு வங்கியின் தேவை இருப்பதாக உணவு வங்கி கூறுகின்றது. குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இந்த பரிதாப நிலை ஏற்படக் காரணம் இவர்களது பெற்றோர் கடினமாக உழைப்பதில்லை என்பதில்லை, ஸ்காபுரோ மற்றும் எடோபிகோக் பகுதியில் ஏற்பட்டிருக்கும் நிச்சயமற்ற பணிநிலை என்பது மட்டுமே இந்த நிலைக்குக் காரணமாகும். இவர்கள் பணியாற்றும் ஏழைகளாக இருக்கிறார்கள் என்பதே உண்மை.

பெற்றோர்கள் அனைவரும் தங்களது குழந்தைகள் கல்வியில் சிறந்து வாழ்வில் உயரிய நிலைக்குச் செல்லவேண்டும் என்பதையே விரும்புவர். நல்லெண்ணம் கொண்ட பெற்றோராக நம்மில் பலர் குழந்தைகளை வழிநடத்தி, பயமுறுத்தி அவர்களை மேல்கல்விக்கு வழிநடத்துகின்றோம். எமது குழந்தைகள் சிறந்த எதிர்காலம்பெற பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி கல்வியே போதும் என நாம் நினைக்கின்றோம். ஆனால் உண்மை அதுவல்ல. இன்று, கல்விக் கடன் மற்றும் நிச்சயமற்ற பணி போன்ற சுமைகளினால் பெரும்பாலான பல்கலைக்கழக மற்றும் கல்லூரி பட்டதாரிகள் தங்களது தொழில் வாழ்க்கையை மேம்படுத்த, தங்களது குடும்பத்தை நடத்த, தங்களது கடன்களை திருப்பி செலுத்த மற்றும் சமுதாயத்திற்கான தங்களது பங்கினை அளிக்க செலவு செய்யும் அளவிற்கு பணம் சம்பாதிக்க இயலவில்லை.

பெரும்பாலான பல்கலைக்கழக மற்றும் கல்லூரி பட்டதாரிகள் இந்த நிச்சயமற்ற பணிகளின் ஒரு பகுதியாக மாறி, உணவு வங்கியின் வாடிக்கையாளர்களாக மாறி வருகிறார்கள். உணவு வங்கியின் 2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையின் பிரகாரம், 38 சதவீதமான உணவு வங்கி பயனாளர்கள் கல்லூரி அல்லது இளநிலை பட்டம் அல்லது அதற்கும் மேற்பட்ட கல்வி பயின்றவர்களே.

பெரும்பாலான ரொறன்ரோ வாசிகளிடம் பாதுகாப்பான தனியார் அல்லது அரசு ஓய்வூதியத் திட்டங்கள் இல்லை. அத்தகைய ஓய்வூதியம் இல்லாதவர்கள் தங்களது ஓய்விற்குப் பின்னான வாழ்க்கைக்கு தேவையான பணத்தை தற்போதிலிருந்தே சேமிக்க தொடங்குங்கள் என பலரும் கூறத் தொடங்கியுள்ளனர். ஒருவர் தனது வீடு, போக்குவரத்து, பயன்பாடுகள், குழந்தை பராமரிப்பு மற்றும் உணவு போன்றவற்றிற்கு செலவு செய்ய இயலவில்லையெனில், எதிர்காலத்திற்கான முதலீட்டையும் செய்யவும் முடியாது. உணவு வங்கிகளின் உதவியுடன் பல்கலைக்கழகம் அல்லது கல்லூரிக்கு சென்று படித்தவர்கள், நிரந்திரமற்ற வேலை வாய்பினால் மீண்டும் அதே உணவு வங்கிகளின் உதவியை நாடுகின்றனர், பின்னர் ஓய்வு பெற்ற பின்னரும் அதிகபட்சமாக வருடத்திற்கு 16,000 டொலர்கள் CPP பெறும்போது, மீண்டும் அதே உணவு வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.









இவ்வாறான உண்மைகளின் பின்னணியில் ஸ்காபுரோவைச் சேர்ந்த வறுமை எதிர்ப்புக் குழுவான Scarborough Rosewood Food Drive Inc. (SRFD) நிறுவனம் தனது சேவைகளை முன்னெடுக்கின்றது. இந்த உணவு வங்கியின் வாடிக்கையாளர்கள் புதிய கனடியர்கள்.

நான்கு தமிழ் பல்பொருள் அங்காடிகளும் தமது வியாபார நிலையங்களில் உணவு நன்கொடை பெட்டிகளை வைக்க முன்வந்துள்ளனர். இவ்வாறு செய்வதன் மூலம், உணவு வங்கி வாடிக்கையாளர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது இலகுவாகின்றது.

Scarborough Rosewood Food Drive Inc.(SRFD) குறித்த மேலதிக விபரங்களுக்கு scarboroughrosewoodfd.wordpress.com

தொடர்புகளுக்கு scarboroughrosewoodfd@hotmail.com அல்லது 647 385 1256 ●

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# 'குடி' மக்களுக்கு செங்கம்பளம் விரிக்கிறது ஒன்ரேறியோ மாகாண அரசு!

'குடி' குடியைக் கெடுக்கும் என்பது தமிழில் உள்ள பழமொழி. திருவள்ளுவர் கள்ளுண்பதை மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார். அதற்காக ஒரு அதிகாரத்தையே ஒதுக்கியுள்ளார்.

நாணெனும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளெனும்

பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. (குறள் 924)

குடிப்பழக்கம் உள்ளவனை பெற்ற தாயும் விரும்பமாட்டாள். சான்றோர் அவனை வெறுப்பர். நாணம் அவனைவிட்டு நீங்கும். எனவே குடிப்பழக்கம் என்பது பெருங்குற்றத்துக்குச் சமமானது.

சங்க காலத்தில் தமிழர்கள் கள்ளுண்டு மகிழ்ந்ததை அக்கால இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். சங்க காலத்தில் காதலும் போரும் போற்றப்பட்டது. போர்க்களத்தில் அரசர்களும் மறவர்களும் கள்ளுண்டு மகிழ்ந்தனர்.

சங்கம் மருவிய காலத்தில் (கிபி 2 ஆம் நூற்றாண்டு) கொல்லாமை, கள்ளாமை, பொய்சொல்லாமை போன்ற அறக் கருத்துக்களை கடுமையாக வலியுறுத்திய சமயங்களான சமண, பவுத்த சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றன. சமண, பவுத்த இலக்கியங்கள் எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்ற மைய அறக் கருத்தைப் போதித்தன.

பலியிடுவதற்காகக் கொண்டு செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு அபயம் அளித்தவர் புத்தபிரான்.

மது பானம் என்பது ஒருவகை குடி. அதில் வெறியம் (Alcohol) கலந்துள்ளது. மதுபானம் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பியர், வைன் மற்றும் வடிகட்டிய சாராயம். மாகாண அரசுகளின் புதிய வழிகாட்டுதல்கள் ஒருமுறை அருந்தும் மதுவின் அளவுகோலை வரையறை செய்துள்ளது.

* 341 மிமீ (12 அவுன்சு) போத்தல் பியர், சைடர் 5 % வெறியம். (341 ml (12 oz.) bottle of 5% alcohol beer, cider or cooler.)

* 142 மிமீ (5 அவுன்சு) கிளாஸ் வைன் 12 % வெறியம். (142 ml (5 oz.) glass of 12% alcohol wine.) * 43 மிமீ (1.5 அவுன்சு) வடிகட்டிய சாராயம் (spirits) 40 % வெறியம். (43 ml (1.5 oz.) serving of 40% distilled alcohol (rye, gin, rum, etc.)

கள்ளுண்ணாமை பற்றி திடீரென்று எழுத வேண்டிய அவசியம் அல்லது அவசரம் என்ன?

ஒன்ரேறியாவில் மது விற்பனை பேரளவு அரசின் ஏக போக உரிமையாக இருக்கிறது. ஒன்ரேறியோ மது கட்டுப்பாட்டு வாரியம் (LCBO) வெளியிட்டுள்ள 2014/2015 ஆண்டு அறிக்கை அதன் விற்பனை டொலர் 5.214 பில்லியன் (521.4 கோடி), நிகர இலாபம் டொலர் 1.818 பில்லியன் (181.8 கோடி) அரசுக்கு கொடுத்த ஈவுத்தொகை (dividends) டொலர் 1.805 பில்லியன் (180.5 கோடி) எனக் கூறுகிறது. விற்பனை செய்யும் அங்காடிகளின் எண்ணிக்கை 651 ஆகும்.

ஏற்படும் மருத்துவச் செலவு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, உற்பத்தி இழப்பு, வண்டிகள் விபத்துக்குள்ளாவது, தீ விபத்து, நிருவாகச் செலவு போன்றவை ஒரு ஆண்டில் டொலர் 5.3 பில்லியன் (530 கோடி) என மதிப்பிடப்படுகிறது. அதாவது மது விற்பனை மூலம் வரும் வருவாயை விட செலவு மூன்று மடங்கு அதிகமாகும்.

ஒன்ரேறியோ கடந்த ஆண்டு நல்வாழ்வு அமைச்சுக்கு ஒதுக்கிய நிதி டொலர் 50.1 பில்லியன் (501 கோடி) ஆகும். இது மொத்த வரவு — செலவுத்திட்டத்தில் 41.9 விழுக்காடாகும்.

மது அருந்துவது வரலாற்றுக் காலம் முதல் இருந்து வருகிறது. அது வெள்ளைநிற கனடியர்களது பண்பாட்டில் காணப்படுகிறது. 2013 இல் கனடாவின் மொத்த மக்கள் தொகையில் 22 மில்லியன் (80 %) குடிக்கிறார்கள். இதில் 4.4 மில்லியன் மக்கள் கல்லீரல் நோய், பலவிதமான புற்று நோய் வரக் கூடிய அளவுக்கு குடிக்கிறார்கள். குடிக்கும் அளவு இருபாலாருக்கும் ஒரேமாதிரி இருக்கிறது.

இன்னொரு கெட்ட செய்தி பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மத்தியில் குடிப் பழக்கம் அதிகரித்து வருகிறது. வகுப்பு 7 (10 %) வகுப்பு 8 (20%) வகுப்பு 9 (38 %) வகுப்பு 10 (50 %) வகுப்பு 11 (62 %) வகுப்பு 12 (68 %) குடிக்கின்றனர்.

அதாவது வகுப்பு ஏற ஏறக் குடிப்பழக்கம் கூடிக் கொண்டு போகிறது. அதாவது 7 ஆம் வகுப்பு மாணவர்களில் 20 % குடித்தார்கள். அது 12 ஆம் வகுப்பில் 68 விழுக்காடாக உயர்ந்து விட்டது! 7—9 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களில் 10 %ம் 10 — 12 வகுப்புகளில் 45 %ம் முடாக் குடியர்கள். அதாவது ஒரே நேரத்தில் 4 கிழமைகளில் 5 அல்லது அதற்கு மேலான மது (drinks) அருந்துகிறார்கள்.

மது குடிப்பதை ஒன்றும் செய்ய முடியாது. தடுத்தால் வருவாய் போய்விடும். எனவே அளவோடு குடியுங்கள் என்று ஒன்ரேறியோ மாகாண அரசு 'குடி' மக்களுக்கு அறிவுரை சொல்கிறது.

ஒன்ரேறியோ மாகாண அரசு மது வாங்குவதை சுலபமாக்கிறது. அப்படிச் சுலபமாக்கும் போது மது அருந்துதல் அதிகரிக்கிறது. இப்போது நுகர்வோர் 6 பியரைக் கொண்ட பெட்டிகளை 60 பல்பொருள் அங்காடிகளில் வாங்கலாம். 2017 ஆம் ஆண்டளவில் பல்பொருள் அங்காடிகளின் எண்ணிக்கை 450 ஆக உயர்ந்துவிடும்.

ஒன்ரோறியோ அரசு பியர் விற்பனையோடு நின்றுவிடாமல் வைன் விற்பனையை 70 பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்ய அனுமதியளித்துள்ளது. இதில் 35 பேரங்காடிகள் உள்ளூர் தயாரிப்பு வைனையும் எஞ்சிய 35 பேரங்காடிகள் பன்னாட்டு வைனையும் விற்பனை செய்ய இருக்கின்றன. நாளடைவில் 150 பேரங்காடிகளில் வைன் விற்பனையை விரிவு படுத்த மாகாண அரசு திட்டமிட்டுள்ளது.

கனடா உட்பட மேற்குலக நாடுகளில் மது அருந்துவது நாகரிகமாகப் பார்க்கப்படுகிறது. அது வெள்ளை நிற கனடியர்களின் பண்பாட்டின் ஒரு கூறாக இருக்கிறது. ஆண் பெண் வேறுபாடின்றி இரு பாலாரும் குடிக்கிறார்கள். சில பெண்கள் முடாக்குடியர்களாகக் காணப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பல நோய்களோடு பிறக்கின்றன. மூளை வளர்ச்சி இல்லாமல் பதினைந்து வயதிலும் எழுதப் படிக்க முடியாமல் இருக்கின்றன. முடாக்குடியர் என்பவர் ஒரே நேரத்தில் 5 அல்லது அதற்கு மேலாக மது அருந்துபவர் (drinks ) ஆவர். பெண்கள் 4 அல்லது அதற்கு மேலாக குடிப்பவர் ஆவர்.

கனடிய தமிழர்களும் யாருக்கும் சளைத்தவர் அல்லர். அவர்களது திருமண வரவேற்புகளிலும் பிறந்த நாள் கொண்டாட்டம்களிலும் ஒன்று கூடுதல்களின் போதும், விழாக்களிலும் களியாட்ட நிகழ்வுகளிலும் மது அருந்துதல் என்பது இன்று சாதாரண நிகழ்வாகிவிட்டது. அதிலும் மது காசில்லாமல் கிடைத்தால் கேட்க வேண்டியதே இல்லை. இதில் இந்து, கிறித்தவர் என்ற வேறுபாடு இல்லை. ஆண்களிடம் காணப்படும் இந்தக் கெட்ட பழக்கம் பிள்ளைகளிடம் தொற்றிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நல்ல காலமாக இந்தப் பழக்கம் எமது பண்பாடு காரணமாக எமது தாய்க் குலத்திடம் இல்லை. அதற்காக அவர்களை வேண்டுமட்டும் பாராட்டலாம். அங்கொன்று இங்கொன்றாக விதி விலக்கு இருக்கலாம்.

மது அருந்துவதற்கும் கொலை, களவு, பாலியல்வன்முறை போன்ற குற்றங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. மிகையாக மது அருந்துவதால் பலர் பலவித நோய்களுக்கு உள்ளாகுகிறார்கள். அறுபதுக்கும் மேலான மருத்துவம் தொடர்பான சிக்கல்களில் (Medical conditions) குடிகாரர்கள் மாட்டிக் கொள்கிறார்கள். மதுவினால்

ekuruvi Night 2016. April 3, 2016 அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புத்தளர்ச்சி, மறதி, பாலியல் குறைபாடு, ஈரல் கரைதல், கணையைச்சிரை, புற்றுநோய், இருதய நோய், எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. முடாக்குடி இந்த நோய்களின் தாக்கத்தை மூன்று மடங்கு உயர்த்திவிடும்.

மதுவை அருந்தியவுடன் மது அருந்துபவர்களின் வயிற்றுச் சுவர் ஊடாக நேரடியாக அது குருதியில் கலந்துவிடுகிறது. மூளைக்கு மது கலந்த குருதி செல்வதால் உடல் உறுப்புகளை இயக்கும் மூளை நரம்புகள் சரிவரச் செயல்படுவது தடைபடுகிறது. உயரழுத்தம் அதிகரிக்கிறது. நடை தள்ளாடுகிறது. நாக்குக் குழறுகிறது. கண்பார்வை விரிவடைவதால் பார்வை மசமசப்பாகிறது. உடல் இயக்கங்களை ஒருங்கிணைப்பதும் சிந்திப்பதும் கடினமாகின்ற காரணத்தால் மறதி (dementia) ஏற்படுகிறது. குடும்ப உறவில் முறிவு ஏற்படுகிறது. தொடர்ந்து மது அருந்துபவர்கள் உடம்பில் மதுவுக்கு எதிரான தாங்குதிறன் (Tolerance) அதிகரிக்கிறது. அதாவது குறைந்த அளவு மது வெறியை ஏற்படுத்துவது இல்லை. எனவே மேலும், மேலும் குடிக்கவேண்டும் என்ற அவாவைத் தூண்டிவிடுகிறது.

குடித்துவிட்டு வண்டி ஓட்டுபவர்கள் சாலை விபத்தில் சிக்குவதற்கான வாய்ப்புக் கூடுகிறது. கனடாவில் 2010 ஆம் ஆண்டு சாலை விபத்துக்களில் 2,541 பேர் இறந்து போனார்கள். இதில் 1,082 பேர் குடித்துவிட்டு வண்டி ஓட்டியதால் ஏற்பட்ட இறப்புக்கள் ஆகும். (MADD Canada — மதிப்பீடு)

மதுப் பழக்கம் வழக்கமாகி விடுவதைத் தடுக்கச் சில நாட்கள் மது அருந்துவதை முற்றாக நிறுத்த வேண்டும். ஒரு நாளில் ஒரு தரம் குடித்தாலே புற்றுநோய் தாக்கத் தொடங்கிவிடும் என்கிறார் ரிம் ஸ்ரொக்வெல் என்ற மருத்துவர்.

கனடியர்கள் குடிக்கும் அளவு கூடிவருகிறது. தோராயமாக ஒரு கனடியர் ஒரு ஆண்டில் 8.2 லிட்டர் வடிகட்டிய மதுசாரத்தை விழுங்குகிறார். இது உலக சராசரியை விட 50 % அதிகமானது.

மதுவோடு புகைப் பழக்கத்துக்கும் அடிமையானவர்கள் தங்களது ஆயுளில் 8 ஆண்டுகளைக் குறைத்துக் கொள்கிறார்கள். தீராத நோய்களால் பீடிக்கப்பட்டு யமனின் அழைப்புக்கு காத்திராது அவனை வலிந்து கூப்பிட்டுப் மறு உலகத்துக்குப் போய்விடுகிறார்கள்.

மது குடிப்பதை முற்றாக தடை செய்ய முடியாது. அது நடைமுறைச் சாத்தியமில்லை. பூரண மது விலக்கு பல நாடுகளில் தோல்வி கண்டுள்ளது. இதில் மேற்கு கிழக்கு என்ற வேறுபாடு இல்லை. காந்தி பிறந்த இந்தியாவில் மூன்று மாநிலங்களில் (குஜராத், நாகலாந்து, மிசரோம்) மட்டும் மதுவிலக்கு இருக்கிறது.

எனவேதான் அளவோடு குடித்து "வளத்தோடு" வாழுமாறு கனடா நாட்டு மாகாண அரசுகள் 'குடி'மக்களுக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளது! ஒன்ரேறியோவின் முதன்மை உடநல அதிகாரி கிரெகரி ரெயிலர் அவர்களின் கூற்றுப்படி கனடாவில் ஒரு ஆண்டில் 4,000 பேர் மதுப் பழக்கம் காரணமாக இறந்துவிடுகிறார்கள்.

மதுவில் இரண்டுவகை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒன்று அதிகம் வெறிக்கக் கூடிய விஸ்கி, பிரண்டி, வொட்கா போன்ற மதுபானங்கள். மற்றது அதிகம் வெறிக்காத பியர், வைன் போன்ற மதுபானங்கள். இப்படி வெறிக்காத மதுபானங்களால் உடம்புக்கு கேடு இல்லை எனப் பலர் நினைக்கிறார்கள். சிலர் அப்படிக் குடிப்பது உடம்புக்கு நல்லதென்று நம்புகிறார்கள். ஆனால் மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள்?

ஒரு கிளாஸ் சிவப்பு வைன் உட்கொள்ளும் முன்னர் ஒருமுறைக்கு இரண்டு முறை சிந்திக்குமாறு கேட்கிறார்கள். அண்மைக்கால ஆராய்ச்சி ஒரு கிளாஸ் சிவப்பு வைன் குடிப்பதால் உடம்புக்கு எந்தப் பலனும் இல்லை என்கிறது.

தேசியளவில் பியர், வைன் போன்றவற்றை அருந்துவதால் ஏற்படும் விளைவுகளை இட்டு மறுசிந்தனை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மது உற்பத்தியாளர்கள், மது விற்பனையாளர்கள் மற்றும் 22 மில்லியன் (2.2 கோடி) மக்களை ஒன்ரேறியோ மருத்துவக் கழகத்தின் தலைவர் மருத்துவர் கிறகெரி ரெயிலர் தனது அறிக்கையில் கேட்டுள்ளார். குடியினால் ஏற்படும் தீமையை எப்படிக் குறைக்கலாம் என்பதையிட்டு ஆட்சியில் உள்ளோர் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என்கிறார்.

குறைந்த பட்சம் 4.4 மில்லியன் பேர்கள் புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதற்கு ஈடான மதுவை அருந்துகிறார்களாம். இவர்களில் 70 % னருக்கு மது ஒரு புற்றுத்தூண்டி (carcinogen) என்ற உண்மை தெரியாது இருக்கிறது!

குடிப் பழக்கம் அதிகரித்து வருவதற்கு இன்னொரு காரணம் அது பற்றிய கவர்ச்சிகரமான விளம்பரமாகும். கடந்த 10 — 15 ஆண்டுகளில் விளம்பரம் அதிகரித்து வருகிறது. மாணவர்கள் ஒரு ஆண்டில் மது குடிக்குமாறு தூண்டும் 300,000 இலட்சத்துக்கும் அதிகமான கவர்ச்சிரமான விளம்பரங்களினால் ஈர்க்கப்படுகிறார்கள்.

2013 இல் 56 விழுக்காட்டுப் பெண்கள் முடாக்குடியர் எனக் கண்டறியப்பட்டது. 2004 ஆம் ஆண்டோடு (44 %) ஒப்பிடும் போது இது அதிகமாகும்.

அதிகளவு மது அருந்துவதால் எல்லாவிதமான மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. குடிப்பழக்கத்துக்கும் தற்கொலைக்கும் தொடர்பு இருப்பதாக கொள்ளப்படுகிறது. இது பற்றிய ஆராய்ச்சியில் Norman Giesbrecht என்ற ஆராய்ச்சியாளர் அமெரிக்க நாட்டு அறிவியலாளர்களோடு ஈடுபட்டுள்ளார்.

தற்சமயம் மது ஒரு உணவாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆனால் மதுவில் சிந்தனையை, நடத்தையை, மனநிலையை பாதிக்கக் கூடிய உளவியல் வேதிப் பொருட்கள் இருப்பதை கவனிப்பதில்லை. மதுவை தொடர்ந்து பாவிப்பவர்கள் அதிலிருந்து மீள முடியாது அதற்கு அடிமையாகி விடுகிறார்கள். எனவே மது ஒருவகை உணவு என்று சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் மாற்றி எழுதப்பட வேண்டும்.

இது குடிகாரர்களுக்கு நல்ல காலம் பிறந்துள்ளதைக் காட்டுகிறது. 'குடி'மக்களுக்கு செங்கம்பளம் விரிக்கிறது ஒன்ரேறியோ மாகாண அரசு! ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சையிட் அல் ஹுசைன் வருகை உணர்த்திச் சென்றவை!

புருஜோத்தமன் தங்கமயில்



ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் இலங்கைக்கான விஜயமொன்றை அண்மையில்(பெப்ரவரி 06—10,2016) மேற்கொண்டிருந்தார். அவரின் விஜயத்தை அரசாங்கம், பிரதான எதிர்க்கட்சி, சிவில் அமைப்புக்கள், காணாமற்போனோரின் உறவினர்கள் உள்ளிட்ட பல தரப்புக்களும் ஆர்வத்தோடு எதிர்கொண்டிருந்தன. ஐக்கிய நாடுகளின் முக்கியஸ்தர் ஒருவரின் வருகையை ஒன்றோடு ஒன்று மல்லுக்கட்டும் தரப்புக்கள் எல்லாமும் ஏகோபித்து வரவேற்று காத்திருந்ததை காண முடிந்தது. ஒப்பீட்டளவில் அது ஆச்சரியமான ஒன்று.

ஏனெனில், ஐக்கிய நாடுகளின் முக்கியஸ்தர்கள் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்கின்ற பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவது வழக்கம். குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தின் அமைச்சர்களே ஐக்கிய நாடுகளின் உத்தியோகபூர்வ வருகையாளர்களை எதிர்த்து போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். ஏகத்துக்கும், வரம்பு மீறி விமர்சித்திருக்கின்றனர்.

ஆனால், மைத்திரிபால சிறிசேன— ரணில் விக்ரமசிங்க ஆகியோர் அதிகாரத்துக்கு வந்த பின்னர் அந்த நிலைமைகள் அப்படியே மாறின. ஐக்கிய நாடுகளின் முக்கியஸ்தர்களின் வருகை அரசாங்கத்தின் பெரும் அனுசரணையோடும், பெருமைப்படும் வகையிலான வரவேற்போடும் இடம் பெற்று வருகின்றன. தோற்றுப்போன ராஜபக்ஷ தரப்பு சில ஆர்ப்பாட்டங்களை தென்னிலங்கையில் முன்னெடுத்தாலும், அது பெருமளவு எடுபடுவதில்லை. அப்படியான சந்தர்ப்பமொன்றிலேயே, சையிட் அல் ஹுசைன் இலங்கை வந்து சென்றிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை மீது பாரிய குற்றங்கள் சுமத்தப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்படியான நிலையில், கண்காணிப்பு பாணியிலான விஜயத்தினை தான் மேற்கொண்டிருப்பதாக சையிட் அல் ஹுசைன் கொழும்பு வந்திறங்கியதும் தெரிவித்திருந்தார். இதனையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போதும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பின் போதும் அவர் வெளிப்படுத்தினார்.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்புக்களின் போதும், தென்னிலங்கையில் அவர் வெளிப்படுத்திய உடல்— ஊடக மொழியிலும் கண்காணிப்பு பணிகளுக்கு அப்பாலான எண்ணத்தை அவரின் விஜயம் கொண்டிருந்தது என்பதைக் காட்டியது. அதாவது, இலங்கை அரசாங்கத்துடனான இணக்கப்பாட்டினையும், நல்லிணக்கத்தினையும் ஐக்கிய நாடுகள் புதிய வடிவில் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக கையாளப்பட்டது. அதனை, சையிட் அல் ஹுசைன் இலங்கையின் விஜயத்தின் பின்னரான தன்னுடைய ஊடக உரையாடல்களிலும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"இறுதி மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய விசாரணைகள் தொடர்பில் இலங்கை மீது எந்தவொரு அழுத்தத்தையும் விடுக்கவில்லை. சர்வதேச நீதிபதிகளை விசாரணை நடவடிக்கையில் இணைத்துக் கொள்வது சம்பந்தமாகவும் நாம் அழுத்தம் கொடுக்கவில்லை. எனினும், இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடைமுறையும் பக்கச்சார்பற்ற முறையில் சுயாதீனமானதாக இருக்க வேண்டும்." என்று ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியொன்றில் சையில் அல் ஹுசைன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இன்னொரு பக்கம், "பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தின் உள்ளடக்கங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் அவசரப்படத் தேவையில்லை. உலகில் எந்தவொரு நாடும் குறுகிய காலத்திற்குள் பொறுப்புக்களை நிறைவேற்றிய தில்லை." என்று ஐக்கிய நாடுகளின் உண்மை, நீதி மற்றும் வன்முறைகளை தடுத்தல் விவகாரத்துக்கான விசேட பிரதிநிதி பப்லோ டி க்ரீப் தெரிவித்திருக்கின்றார். அவரும் அண்மையில் (ஜனவரி 26— பெப்ரவரி 01, 2016) இலங்கைக்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்கவும், பொறுப்புக்கூறவும் பணிக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைத் தீர்மானம் கடந்த ஆண்டு, இலங்கையின் புதிய அரசாங்கத்தின் ஒப்புதலோடும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அந்த நிலையில், குறித்த தீர்மானத்தின் உள் வரைபில் இருக்கின்ற விடயங்களை நியாயமான முறையில் செயற்படுத்த வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. அதனை, சரியான வழியில் கண்காணித்து அறிக்கையிட வேண்டியதும், தேவையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியதும், ஐக்கிய நாடுகளின் கடமை. ஆனால், ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட பல்கூறுகளும் இலங்கையின் புதிய அரசாங்கத்தின் மீதான நல்லெண்ணத்தினை வெளிப்படுத்துவது தொடர்பிலேயே ஆர்வத்தோடு இருக்கின்றன.

இந்த நிலையில், இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலை என்ன, அது தீர்க்கமான பாதையில் பயணிக்கின்றதா என்கிற கேள்விகள் எழுகின்றன. ஏனெனில், மிகப்பெரிய சர்வதேச சதிராட்டத்துக்குள் தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்தி தமிழ் மக்களின் சார்பிலான அரசியலையும், ஆற்றலையும் வெளிப்படுத்த வேண்டியிருக்கின்றது. அப்படியான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பயணம் முட்டுச்சந்துகள் நோக்கியதாக இருக்கின்றதோ என்றும் அஞ்ச வேண்டியிருக்கின்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் மேற்கு நாடுகள்— இந்தியா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளும், ஐக்கிய நாடுகளின் முக்கியஸ்தர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சந்திப்பதை வழக்கமாக கொண்டிருக்கின்றன. இலங்கை அரசாங்கத்தினை தென்னிலங்கையின் பிரதிநிதிகளாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வடக்கின் பிரதிநிதிகளாகவும் ஒப்பிட்டு நோக்கி வந்திருக்கின்றன. அப்படியான நிலையில், இலங்கையின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற தென்னிலங்கையை கட்டுக்குள் வைத்துக் கொள்ளும் தேவை ஏற்படும் போதெல்லாம், தமிழ்த்

சதீஷ் கிருஷ்ணபிள்ளை

ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியக் கூட்டமைப்புக்கான முக்கியத்துவத் தினை வெளித்தரப்புக்கள் அதிகரித்து வந்திருக்கின்றன. ஆட்சி மாற்றமொன்று நிகழ்த்தப்பட்ட பின்னரான நாட்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவம் குறைக்கப் பட்டிருக்கின்றதோ என்கிற கேள்வி எழுகின்றது.





ஒருவகையில் அரசாங்கத்தின் பங்காளிகள் போன்று பாராளுமன்றத்துக்குள்ளும்— வெளியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. பிரதான எதிர்க்கட்சியாக தன்னை முன்வைப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வளவு ஆர்வம் கொள்ளவில்லை. அந்தப் பதவியை ஒரு வகையிலான இணக்கப்பாட்டின் தொனியிலேயே இரா.சம்பந்தனும் அணுகி வருகின்றார்.இப்படியான நிலையில், தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டு வரும் நீதியையும், அரசியல் தீர்வையும் பெறுவது தொடர்பிலான முனைப்புக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய வடிவில் செய்ய வேண்டிய தேவையிருக்கின்றது. மாறாக, ஒருவிதமான இணக்கப்பாடும்— அரசாங்கத்தை அசௌகரியத்துக்கு தள்ளாதளவுக்கான எதிர்ப்பும் அவ்வளவு ஆரோக்கியமான அரசியலாக அமையாது.


ஏனெனில், சர்வதேசத்தின் அன்புக்குரிய இலங்கையின் புதிய அரசாங்கத்தோடுதான் தமிழ் மக்கள் இன்றைக்கு பிணக்காடி நீதியையும், தீர்வினையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. (தமிழ் மக்களும் இணைந்துதான் புதிய ஆட்சியை உருவாக்கி யிருக்கின்றார்கள் என்பதை இந்தப் பத்தியாளர் மறக்கவில்லை. பொதுத் தேர்தல் காலங்களில் ஆட்சி மாற்றமொன்றின் அவசியத்துக்காக எழுதியும் வந்திருக்கின்றார். அது தொடர்பில் இந்தப் பத்தியாளருக்கு இப்போதும் மாற்றுக்கருத்துக்கள் இல்லை.) ஆட்சி மாற்றமொன்றுக்கான பின்னரான இன்றைய அரசியலை தமிழ் மக்களும், தமிழ் அரசியல் தலைமைகளும் புதிய கோணத்திலும்— நிலைகளிலும் அணுக வேண்டி யிருக்கின்றது. ஆனால், அப்படியான சந்தர்ப்பமொன்று ஒரு வருடங்களைக் கடந்து விட்ட நிலையிலும் உருவாகியிருக்கவில்லை.

“இலங்கையில் பொறுப்புக் கூறலின்றி நல்லிணக்கம் சாத்தியமில்லை நல்லிணக்கமின்றி பொறுப்புக்கூறல் சாத்தியமில்லை. நாட்டில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறுதலையும் ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் முழுமையான நோக்கமாகும். இலங்கை மக்கள், நாட்டில் மனித உரிமைகளை மீள ஏற்படுத்தி அதனை வலுப்படுத்துவதற்கான ஆணையை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளனர்.” என்று பொதுநலவாய பாராளுமன்ற உறுப்பினர்களின் ஏற்பாட்டில் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இடம்பெற்றவை. எனவே, அவர்களின் அகற்றத்தோடு அந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன என்பது மாதிரியான உரையாடல்களை தொடர்ந்தும் நிகழ்த்துவதில் ரணில் விக்ரமசிங்க கவனமாக இருக்கின்றார். இதன்மூலம், பொறுப்புக் கூற வேண்டிய பக்கங்களின் கதவுகளை மூடிவிடலாம் என்பதுவும் அவரின் நோக்கமான இருக்கின்றது. மாறாக, நல்லிணக்கமும்— பொறுப்புக் கூறலும் என்கிற வார்த்தைகளை அவர் மிகவும் பசப்பான மொழியில் தொடர்ந்தும் உச்சரித்து வருகின்றார் என்று கொள்ளலாம்.

இலங்கையின் 68வது சுதந்திர தினத்தில் தமிழ்மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டதை இனநல்லிணக்கத்தின் பெரும் முனைப்பு போன்று அரசாங்கம் காட்ட முனைகின்றது.அதையொத்த நடவடிக்கைகளை அரசாங்கம் கவர்ச்சிகரமான முன்னெடுப்பதில் கவனமாக இருக்கின்றது. அதாவது, கடந்த கால தவறுகள் என்று சிறிய விடயங்களை எடுத்து திருத்திக் கொள்வதினூடு, பாரிய தவறுகளைத் திருத்துவதிலிருந்தும், இழைத்த தவறுகளுக்கு நீதியை வழங்குவதிலிருந்தும் தப்பித்துக்கொள்ள முனைகின்றது.

இவ்வாறான பல்கோண சிக்கலுக்குள் இருந்து கொண்டே தமிழ் மக்கள் தங்களுடைய அரசியல் இலக்கினை நோக்கி நகர வேண்டியிருக்கின்றது. அது, புதிய அணுகுமுறையும்— அரசியலுரிமை தொடர்பிலான தீர்க்கமான பார்வையோடும் செய்ய வேண்டியவை! ●







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Golden Offer!

OWN A BRAND NEW LUXURY CONDO IN MARKHAM

WITH $1000/PER MONTH*




கனடாவின் வீட்டுச் சந்தை வரலாறு காணாத உச்சத்தை தொட்டு நிற்கின்ற நிலையில் Condoவில் முதலீடுகளை மேற்கொள்வதில் உள்ள நன்மைகள் என்ன?

Condoகளின் சராசரி விலை தனி வீடுகளின் விலைகளை விடமிகக் குறைவானவை. எனவே முதல் தடவையாக முதலீடுகளை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் இலகுவாகவும் பாதுகாப்பனதாகவும் முதலீடுகளை மேற்கொள்ள Condoக்களே பொருத்தமான தெரிவாக அமைகின்றன.

வீடுகளில் முதலிடுவது அதிகளவான இலாபத்தை தரும் என்றும் Condoக்களின் மூலமாக பெருமளவான இலாபத்தை பெறமுடியாது என்றும் கூறப்படுகின்றதே?

வீடுகளின் விலை அதிகரிப்பு போன்று பெரியளவான விலை அதிகரிப்பை Condoக்கள் காண்பிப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால் ரொரன்ரோ பெரும்பாகத்தில் தனி வீடுகளின் சராசரி விலை ஒரு மில்லியனை தாண்டியுள்ளது. ஒருவீட்டை கொள்வனவு செய்வதற்கு இரண்டு இலட்சம் டொலர்கள் வரை முற்பணம் தேவைப்படும். அதன் பின்னரும் அதனை பராமரிப்பதற்கும் கூடுதலான நிதி தேவைப்படும். தனி வீடுகளுக்கான Mortgage மற்றும் Property Tax போன்ற செலவீனங்கள் மாதாந்தம் சுமார் 3000 டொலர்கள் வரை காணப்படுகின்றது. முதலீட்டிற்கான வீடு என்பதால் அதனை வாடகைக்கு விடுவதே முதன்மைத் தெரிவாக இருக்கும். 3000 டொலர்களுக்கு வாடகைக் குடியிருப்பாளர்களை கண்டுபிடிப்பதும் அவர்களை தொடர்ந்து தங்க வைப்பதும் சவால் மிக்கது. மிகப் பெரிய Down Payment மற்றும் Carrying Cost கொண்டதாக தனிவீடுகள் இருப்பதால் அதில் உள்ள நெருக்கடிகள் அதிகம். இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடிய தகமை உள்ளவர்கள் தனிவீடுகளை முதலீட்டிற்காக கொள்வனவு செய்யலாம். அவ்வாறு இல்லாத பெரும்பாலனவர்களுக்கான தெரிவு Condo வாகமாறியுள்ளது.

Condoக்களுக்கான Down Payment தனிவீடுகளை விட மிகமிகக் குறைவானது அதேபோன்ற Carrying Costவும் குறைவானது. 4 இலட்சம் பெறுமதியான Condo ஒன்றிற்கான Mortgage 1500 டொலர்களாக இருக்கும். இதனை வாடகைக்கு விடுவது இலகுவானது. வாடகை குடியிருப்பாளர்கள் இல்லாமல் வெறுமையாக இருப்பதற்கான வாய்ப்புகுறைவு இதனால் இது அதிகளவான நெருக்கடியினை முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தாது. இது தான் தனிவீட்டிற்கும் Condo விற்குமானமுதலீடுகளின் வித்தியாசம்.

ஏன் மார்க்கம் நகரம் குறிப்பாக Unionville பகுதி முதலீட்டிற்கு சிறப்பானதாக அமைகின்றது ?

ரொரன்ரோ பெரும்பாகத்தில் பெருவளர்ச்சி அடைந்துவரும் நகரங்களில் மார்க்கம் நகரம் முதன்மையானது. இங்கு வாழும் குடும்பங்களின் சராசரிவருமானம் 150,000 டொலர்கள். IBM, Lenova, AVIVA போன்ற பெருநிறுவனங்களின் தலைமையகங்கள் மார்க்கம் நகரில் அமைகின்றன. இன்னும் பல நிறுகவனங்கள் மார்க்கம் நகரை நோக்கி தமது அலுவலகங்களை நகர்த்துகின்றன. இதனால் மார்க்கம் நகரில் புதியதொழில் வாய்ப்புகள் உருவாகி வருகின்றன.10 வருடங்களில் சுமார் மூன்று இலட்சம் புதிய தொழில் வாய்ப்புகள் மார்க்கம் நகரில் உருவாகும் என கணிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை நகரின் சனத்தொகையும் சுமார் 4 இலட்சத்தால் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

இதனைவிட York Universityஇன் Markham campus 2018 ம் ஆண்டு Unionville பகுதிக்கு அண்மையில் தனது கல்விச் செயல்பாடுகளை ஆரம்பிக்கப் போகின்றது. இதில் முதல் கட்டமாக 4000 மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போகின்றார்கள்.

இது போன்ற காரணிகள் மார்க்கம் நகரின் வீட்டுச் சந்தையில் பாரிய கேள்வியினை ஏற்படுத்தப் போகின்றது.

மார்க்கம் நகரின் மையாமாக கருதப்படும் Unionville பகுதியில் புதிய தனிவீடுகள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகமிகக் குறைவானவை. இங்கு தனிவீடுகள் சுமார் 1.5 மில்லியன் டொலர்களாக விற்பனையாகின்றன. Town Houses ஏறத்தாள 1 மில்லியன் டொலர்ளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

மாதாந்தம் 1000 டொலர்களில் Super Luxury Condo ஒன்றை சொந்தமாக்கும் வாய்ப்பு ஏன் சிறப்பானது?

வீடு விற்பனைத் துறையில் பலவருட அனுபவம் கொண்ட வீடு விற்பனை முகவர் Siva Sivangnamஅவர்களின் The Real Realtors Team வழங்கும் ஒரு சிறப்பான வாய்ப்பு இது. வழமையாக ஒருவருடத்தினுள் கட்டிமுடிக்க வேண்டிய Down Payment ஐ பகுதி பகுதியாக மாதாந்தம் 1000 டொலார்கள் வீதம்; மூன்றுவருடங்களில் கட்டுவதற்கான ஏற்பாட்டைஅவர்கள் வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் உடனடியாகவே பெருமளவு பணத்தை முதலீடு செய்துவிட்டு 3 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டிய தேவை முதலீட்டாளர்களுக்கு ஏற்படாது. அதேபோல் முதல் தடவையாக வீடு ஒன்றை கொள்வனவு செய்ய விரும்புகின்றவர்கள் பெரும் தொகை ஒன்றை Down Payment ஆக செலுத்தவேண்டியதேவையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த வாய்ப்பு குறிப்பிட்ட சில காலங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

Unionville Gardens Condoவில் வேறுஎன்னசிறப்புகள் இருக்கின்றன ?

கனடாவின் தொடர் மாடிக் குடியிருப்பு கட்டுமானத்தில் முன்னிலை வகிக்கும் Tucker Hirise , Kirkor Architects + Planners , II By IV Design போன்ற நிறுவனங்களை ஒன்றிணைந்து சீனாவின் மிகப் பெரிய நிறுவனமான Wyview Group உருவாக்கும் ஒரு Projectî£¡ Unionville Gardens.

8 மாடிகள் கொண்ட இரண்டு Tower èÂî¡ Warden and Highway 7 சந்திப்பிற்கு அண்மையில் Highway 7 இல் இது அமையவுள்ளது.

Swimming Pool, Hot Tub, Party Room, Library, Fitness Centre, Guest Suite, Meeting Room உட்பட சகலவிதமான நவீன வசதிகளையும் கொண்ட அதிசொகுசு குடியிருப்பாக இந்த Unionville Gardens அமைகின்றது.

முதலீட்டாளர்களுக்கும் முதல் தடவீவாயக வீடுவாங்க நினைப்பவர்களுக்கும் இது சிறப்பானதெரிவு நீங்களும் அழைத்துபேசி பயன் பெறுங்கள்.

## The Real Realtors Team

# 416-216-4545

**Monthly Deposit towards the down payment**

* Some conditions may apply

ADVT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதன்ராஜ்



# புலம்பெயர் கலைஞர்கள் படைப்பாளிகள் உயிர்த்தெழ வேண்டிய காலம் இது

"சிறிலங்காவின் கல்வித்திட்டத்தில் மாற்றங்களை விரைவில் கொண்டு வர இருக்கின்றோம்" — இது சிறிலங்காவின் புதிய ஆட்சியாளர் மைத்திரி சிறிசேனா அவர்கள் கூறிய வார்த்தைகள்.

இந்தக் கூற்றுக்கும் "புலம்பெயர் கலைஞர்கள் படைப்பாளிகள் உயிர்த்தெழ வேண்டிய காலம் இது" எனும் இப்பத்தியின் தலைப்புக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என தோன்றலாம்.

மகிந்த ராஜபக்ச வெற்றி என்பது, உடனடித் தீமைகளையும் நீண்டகாலத்தில் நன்மைகளையும் , மைத்திரி சிறிசேனாவின் வெற்றி உடனடி நன்மைகளையும் நீண்டகாலத்தின் தீமைகளையும் தரலாம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள், கடந்தாண்டு இடம்பெற்றிருந்த சிறிலங்காவின் அரசுத் தலைவருக்கான தேர்தல் தொட்பில் விடுத்திருந்த அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

சிறிலங்காவின் முந்தைய ஆட்சியாளருடான ஒப்பீட்டளவில் புதிய ஆட்சியாளர்கள் இலங்கைத்தீவில் ஏற்படுத்தியிருக்கின்ற சில விடயங்கள் சமகலாத்தில் நன்மைகளாக தோன்றுகின்றன அல்லது தோற்றுவிக்கப்படுகின்றன.

இங்கே நன்மைகளாக அடையாளப்படுத்தப்படுகின்ற விடயங்கள் யாவும் தமிழர் தாயக பகுதிகளுக்கும், தென்னிலங்கைக்கும் வௌ;வேறானதாகவே உள்ளது என்பதனை நாம் அவதானிக்க முடியும்.

மகிந்த ராஜபக்சவின் ஆக்கிரமிப்பு போரின் ஊடாக தமிழர் தாயகத்தில் நடந்தேறிய இராணுவமயமாக்கல், பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கல் விடயங்களை புதிய ஆட்சியாளர்கள் அதனை நிலையாக நிலைநிறுத்துவதிலும் தக்கவைப்பதிலும் உறுதியாக உள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகின்றது.

இலங்கைத்தீவு முழுவதும் சிங்களவர்களுக்கே என்ற நிலைப்பாட்டில் தனது பௌத்த பேரினவாத நிலைநிறுத்துகின்ற



மேற்குறித்த மூன்று விடயங்களுக்கும் பாதகம் ஏற்படாத வகையிலேயே "நல்லாட்சி" என்ற முழகத்துடன் பெயரளவில் சில நன்மைகளை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில், "சிறிலங்காவின் கல்வித்திட்டத்தில் மாற்றங்களை விரைவில் கொண்டு வர இருக்கின்றோம்" எனும் சிறிலங்காவின் புதிய ஆட்சியாளர் மைத்திரி சிறிசேனாவின் கூற்றினை நாம் செய்தியாக கடந்து சென்று விடமுடியாது.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஓர் மறைமுக நிகழ்ச்சி நிரலொன்று மைத்திரி சிறிசேனாவின் கூற்றுக்கு பின்னால் உள்ளதென்பதனை நாம் அவதானிக்க முடியும்.

போரில் மகிந்த ராஜபக்ச பெற்ற வெற்றியினை, மைத்திரி சிறிசேனா அரசியல் வெற்றியாக்க முனைகின்றார் என்ற பிரதமர் வி.உருத்திரகுமாரனின் கூற்றினை இவ்விடத்தில் புரிந்து கொள்வதன் ஊடாக மைத்திரி சிறிசேனாவின் எண்ணக்கருக்குள் மறைந்திருக்கும் உண்மையினை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இங்கே அரசியல் வெற்றி என்பதனை, "வென்றவன் எழுதுவதுதான் வரலாறு" என்ற நிலையின் ஊடாக நாம் தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

வென்றவன் எழுதப் போகின்ற வரலாற்றின் ஓர் அங்கமாக தனது கல்வித்திட்டத்திலும் பாடத்திட்டத்திலும் மாற்றங்களை செய்யப்பபோகின்ற சிங்கள அரசின் நிகழ்ச்சி நிரலினை , தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதே இங்கு கேள்வி ?

இதற்கான பதிலை மட்டுமல்ல, சதாரண பொதுமக்களிடத்தில் தேடாமல்,எழுத்தாளுமை குணா கவியழகன் அவர்கள், தனது இரண்டாவது நாவலான விடமேறிய கனவு அறிமுக அரங்கொன்றில் கூறிய கூற்றின் ஊடாக புரிந்து கொள்ளலாம்.

அது :

'நான் ஒரு இலக்கியக்காரனாக இருக்கவில்லை, ஒரு கட்டுரையாளனாகத் தான் இருந்தேன். இலக்கியம் எழுத வந்தது ஒரு தற்செயல்தான். இலக்கியம் பற்றிய ஒரு புரிதல் ஏற்படத்தொடங்கிய போது, அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று சிந்தித்தேன். இலக்கியம் தெரிந்த, அதில் ஆழ்ந்த பரிச்சயமுடையவர்கள் மூலம் அதனைச் செய்ய முயன்று தோல்வி கண்டேன். அதன் விளைவாக நானே எழுதுவது என்ற முடிவை அடைய நேர்ந்தது.

உயிரிழப்புகள் பற்றிய எண்ணிக்கைகளுக்கு மனித மனங்களை உலுப்பும் வலிமை இல்லை. நூறாயிரம் பேர் செத்தார்கள் என்ற புள்ளிவிபரத்தை விட ஒருவன் எப்படிச் செத்தான் என்பதைச் சொல்லி வைப்பது தான் கண்ணீர் சிந்த வைக்கும், ரத்தம் சிந்த வைக்கும்.

புள்ளிவிபரங்கள் முக்கியமல்ல. அவை ரத்தம் சிந்தாது. கண்ணீர் சிந்தாது. எனவே துயரங்களை, வாழ்வை ஒரு கலையாக உயிர்ப்பித்துவிட்டால் அவை காலம் கடந்து வாழும்.

எங்களுடைய துயரங்களையும் பாடுகளையும் கலையாக முன்வைக்கவில்லை என்றால் அவற்றை ஆழமாகப் பிறரின் மனங்களில் பதியச்செய்ய முடியாது.

வென்றவன் எழுதுவதுதான் வரலாறு என்றான நிலையில், அதைத்தான் நாம் படிக்கின்றோம்.


அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மொழிவழியும்
தனியலை
105.9 FM
தமிழ் இனி

திங்கட்கிழமை
முதல் சனிக்கிழமை வரை
மாலை 9மணியில் இருந்து
மறுநாள் காலை 6 வரை
ஞாயிற்று கிழமைகளில்
மாலை 2மணியில்
இருந்து மறுநாள்
காலை 6 வரை




வாழ்த்துக்கள்!




வென்றவன்தான் அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிறான். அந்த அதிகாரத்தை நிலைநாட்டவும் மேலோங்கச் செய்யவும் எல்லாவற்றையும் கருவியாக்கும் முனைப்பை அவன் கொண்டிருக்கிறான். அதிகாரத்திற்குச் சேவை செய்யும் கோட்பாடுகள்தான் ஏற்கப்படுகின்றன.

எனவே தோற்றவர்களுடையதை வரலாறாக ஆக்க முடியுமா? ஒருமுறை முயற்சி செய்தால் என்ன? இந்தக் கேள்விகளால் உந்தப்பெற்றதுதான் 'விடமேறிய கனவு'. அடுத்த தலைமுறைக்கு அதனைக் காலக்கைமாறு செய்யும் முயற்சிதான் இது.

ஈழப்போராட்டம் சார்ந்த இந்தப்படைப்பினை ஒரு சாட்சியின் வடிவமாக முன்வைக்கிறேன். இந்த உலகம் போரிலக்கியங்களை சாட்சி வகைமைப்பட்டுத்தான் மகிமைப்படுத்தியுள்ளது. நானும் ஒரு சாட்சியாக நின்று போரிலக்கியத்தை எழுதியுள்ளேன்.

இவ்வாறு எழுத்தாளுமை குணா கவியழகன் அவர்கள் கூறிய கூற்று, புலம்பெயர் கலைஞர்கள் படைப்பாளிகளது கூட்டுப்பொறுப்பினை தெளிவாக உணர்த்தி நிற்கின்றது என்றே கூறலாம்.

ஆனால் சமகாலத்தில் புலம்பெயர் தேசங்களில் உள்ள பெரும்பாலான கலைஞர்கள், படைப்பாளிகள் இடத்தில் அதிகம் உதிருகின்ற வார்த்தைகளில் ஒன்றாக "கலைஞர்களுக்கு அரசியல்" எதற்கு என்பதாக உள்ளது.

விடுதலைக்கான அரசியலை புரிந்து கொண்ட கலைஞர்கள், படைப்பாளிகள் "அரசியல் வேண்டாம்" என்ற கூற்றுக்கு அப்பால், விடுதலைக்காக போராடும் இனக்கலைஞர்களாக தங்களது ஆளுமைமிக்க வலிமைமிக்க படைப்புக்கள் ஊடாக பதிவு செய்து வருகின்றார்கள் என்பது சற்று ஆறுதலான விடயமாக உள்ளது.

குறிப்பாக, முள்ளிவாய்க்காலின் பெருவலியினைச் சுமந்தவாறு புலம்பெயர் தேசங்கள் நோக்கி வந்த பல போராளிகளையும், பொதுமக்களையும் புலம்பெயர் படைப்புலகம் எவ்வகையில் கண்கொண்டது அல்லது பதிவு செய்தது என்பது கடந்த ஆறாண்டுகளில் எழுகின்ற கேள்வியாக இருக்கின்றது.

ஆயிரம் ஆயிரம் கதைகளோடு அவர்கள் வந்தார்கள் என்பது மட்டுமல்ல, ஓர் இனஅழிப்பு போரின் சாட்சியமாகவும் அவர்கள் இருந்துள்ளார்கள்.

இவ்விடத்தில், கடந்தாண்டு மாவீரர் நாள் செய்தியில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் கூறியிருந்த கூற்று பொருத்தமானதாக இருக்கும்.

"மாவீரர்களைப் பயங்கரவாதிகளாக எதிர்காலத் தமிழர் தலைமுறைக்குச் சித்தரிப்பதே சிங்களத்தின் திட்டமாக இருக்கிறது. தற்போதய தலைமுறைத் தமிழ் மக்களை ஆக்கிரமிப்புக்குள் வைத்திருந்து, அவர்களை அச்சத்தின் பிடிக்குள் அழுத்தி வைத்திருந்து, மாவீரர்கள் பற்றிய நினைவுகளை போர்க்காலத்தில் வாழ்ந்த மக்களுக்குள் மட்டுப்படுத்தி விட்டால், அடுத்த தலைமுறையினருக்கு மாவீரர்களைப் பயங்கரவாதிகள் எனச் சித்தரிக்கும் வகையிலான அரச பாடப்புத்தகங்களை உருவாக்குவதும், அதன்வழி மாவீரர்களைப் பயங்கரவாதிகளாக வரலாற்றில் நிலைநிறுத்துவதும் சாத்தியமானது என சிங்கள இனவாத மூளை சிந்திக்கிறது.

ஓர் ஆயுதம் தாங்கிய குழுவினர் மக்களைக் கொன்றார்கள், தலைவர்களைக் கொன்றார்கள், இனச் சுத்திகரிப்புச் செய்தார்கள், வரி விதித்தார்கள், தமது ஆயுதங்களால் மக்களைப் பயமுறுத்தி கொடுங்கோலாட்சி நடாத்தினார்கள் — இக் கொடுமையிலிருந்து தமிழ் மக்களை சிங்கள தேசத்தின் படைகள் பெரும் உயிர்த் தியாகம் செய்து மனிதாபிமான அடிப்படையில் அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு நல்வாழ்வு வழங்கினார்கள் என — மாவீரர் வரலாற்றை பயங்கரவாதிகளின் வரலாறாகச் சித்தரிக்கும் திட்டம் சிங்களத்திடம் இருக்கிறது. மகிந்த இராஜபக்ச அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புப் போருக்கு இராணுவப் பெயர்கள் எதுவும் சூட்டப்படாது மனிதாபிமான மீட்பு நடவடிக்கை என இத் தமிழின அழிப்புப் போர் அழைக்கப்பட்டமையினை நாம் இங்கு கவனத்திற் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இத்தயைதோர் நிலை உருவாகாது தடுக்க வேண்டியது தற்போதய தலைமுறையினராகிய எமது கைகளில்தான் இருக்கிறது. மாவீரர் வீரங்களையும், ஈகங்களையும் மாவீரர்களின் மனிதத்துவம் நிறைந்த வாழ்வு குறித்த ஆயிரக்கணக்கான உண்மைக் கதைகளையும் உரிய ஆவணங்களாக்குவது தற்போதய தலைமுறையினரின் பொறுப்பாக இருக்கிறது.

இப் பெரும்பணியை ஆற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமது தலைமுறையைச் சேர்ந்த அறிஞர்களதும், எழுத்தாளர்களதும், படைப்பாளிகளதும் கைகளில் உள்ளது. தமிழ் மொழியில் மட்டுமன்றி உலகின் முக்கியமான மொழிகளில் எல்லாம் இப் படைப்புகள் வெளிவர வேண்டும். ஆய்வுகளாக, வரலாற்று ஆவணங்களாக, வாழ்க்கைக் குறிப்புகளாக, சிறுகதைகளாக, புனைவுகளாக, நாடகங்களாக, திரைப்படங்களாக, கவிதைகளாக, பாடல்களாக, ஓவியங்களாக, புகைப்படங்களாக என்னென்ன வடிவங்களில் மாவீரர் வாழ்வும் அவர்தம் கனவும் பதிவு செய்யப்பட முடியுமோ அந்தந்த வடிவங்களில் எல்லாம் அவற்றைப் பதிவு செய்து நமது அடுத்த தலைமுறையிடம் கையளிக்க வேண்டியது நமது தலைமுறையின் பொறுப்பாகும்." ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

குயின்ரஸ் துரைசிங்கம்



# கனடாவின் எண்ணை வளம்

## என்னதான் உண்மையில் நடக்கிறது?

அண்மைக் காலமாக கனடாவின் பொருளாதாரத்தில் ஒரு மந்தநிலை காணப்படுவதாக கணிக்கப்பட்டாலும், கனடாவின் கிழக்குப் பிராந்தியங்களில் உள்ள மக்கள், அதன் தாக்கத்தை இன்னும் அனுபவிக்க ஆரம்பிக்காத காரணத்தால், அந்தக் கணிப்புக்கள் குறித்து ஒருவித சந்தேகத்துடனேயே கருத்துக்களைக் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், கனடாவின் பொருளாதாரம், குறிப்பாக கனடாவின் எண்ணை வளமும் அதன் தேக்கநிலையும் எந்தளவில் கனடிய பொருண்மியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதை சுருக்கமாகப் பார்க்கலாம்.

ஒரு பக்கத்தில் உலகளாவிய காலநிலை மாற்றம் தொடர்பிலும், கனடிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயத்திலும், மனித உரிமை, பெண்ணுரிமை, சமய சமூக மாண்பு போன்ற விடயங்களிலும் கனடிய அரசு மிக அதிஉச்ச கவனத்தைச் செலுத்துவதாக மார்தட்டிக் கொண்டாலும், பெட்ரோல் என்றழைக்கப்படும் எரிபொருளுக்கான மசகு அல்லது கச்சாய் எண்ணெய் கொள்வனவு விடயத்தில், கனடா அப்படியொன்றும் நியாயத்தன்மையுடன் நடக்கவில்லை என்பதையே ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகக்கூடிய கச்சாய் எண்ணெயை கனடா இறக்குமதி செய்யும் நாடுகள் வரிசையில் முதலிடம் பிடிப்பது சவூதி அரேபியா. உலகில் நிலவும் எண்ணெய் ஏற்றுமதி குறித்த வணிகப் போட்டியில், பல எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளைப் பின்தள்ளிவிடும் நோக்கில், சவூதி அரேபியா பல்வேறு சூழ்ச்சிகளையும் செய்து வருகிறது. கச்சாய் எண்ணெயில் சவூதி அரேபியா வழங்கும் அதிகரித்த விலைக்கழிவு காரணமாக, ஏனைய பல நாடுகளும் தங்களது ஏற்றுமதியில் பின்னடைவைச் சந்திக்கின்றன. கனடாவைப் பொறுத்தவரை, 2015ல் நியூ—புறொன்ஸ்விக் ஜர்விங் எண்ணெய்க் கிடங்குக்கு மட்டும், ஒரு நாளுக்கு மொத்தம் 84,017 பரல்கள் என்ற வகையில் தொடர்ச்சியாக கச்சாய் எண்ணெயை சவூதி அரேபியா வழங்கி வந்திருக்கிறது. இந்த கச்சாய் எண்ணெய் ஒன்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்த நிலையில் சுத்திகரிக்கப்பட்டவை அல்ல. மிகவும் தரம் குறைந்த இந்த கச்சாய் எண்ணெயை கனடா காதும் காதும் வைத்தாற்போல் வருடாவருடம் மிக அதிகம் தனது நாட்டிற்குள் அனுமதிக்கிறது. சவூதிக்கு அடுத்ததாக, அல்ஜீரியா, அங்கோலா, நைஜீரியா போன்ற 'ஜனநாயக—விரோத' நாடுகள், மிக அதிகபட்ச மசகு எண்ணெயை கனடாவுக்கு ஏற்றுமதி செய்கின்றன. அமெரிக்காவும் கனடாவுக்கு அதிகபட்ச எண்ணெயை விற்கின்ற நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

> **மனித உரிமை மீறலும் பெண்ணுரிமை மீறலும் சமயச் சட்டங்கள் என்ற போர்வையில் பல்வேறு அத்துமீறல்களும் நிறைந்த மனிதத்தை மதிக்காத நாடுகளிடமிருந்து, தரக்குறைவான மசகு எண்ணெயை மலிவுவிலையில் பெற்று, கனடாவிற்குள் சுத்திகரிக்கும் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபடுதலைப் பற்றிக் கதைக்க மறுக்கிறார்கள்.**


பெண்ணுரிமை, மனிதஉரிமை விடயத்திலும், சிறுபான்மை இனத்தை நசுக்குதல், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற விடயங்களில் மிகவும் மோசமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த நாடுகளிடம், கனடா கண்ணை மூடிக்கொண்டு மில்லியன் டொலர் பெறுமதியான மசகு எண்ணெயை தினமும் இறக்குமதி செய்துகொண்டே இருக்கிறது.

கனடாவின் அல்பேர்ட்டா மற்றும் சஸ்கச்சுவான் மாகாணங்களில் அதிகரித்த எண்ணெய் உற்பத்தி காணப்பட்டாலும், அங்கிருந்து கிழக்கிலுள்ள மாகாணங்களுக்கு அந்த மசகு எண்ணெயைக் கொண்டுவரும்போது, சுற்றுச்சூழல் பாதிக்கிறது என்பதைக் காரணம் காட்டி, கிழக்கிலுள்ள ஒன்ராரியோ, கியூபெக், நியூ புறொன்ஸ்விக், நியூ பவுண்ட்லாந்து போன்ற மாகாணங்கள், தங்களது தேவைக்கான எண்ணெயை கனடாவுக்கு வெளியே இருந்து கொள்வனவு செய்கின்றன. சுற்றுச்சூழலை தங்கள் விவாதத்திற்கான காரணமாக வைத்திருக்கும் அரசியல்வாதிகள், உண்மையில் விலை குறைவு என்பதற்காக தரம் குறைந்த மசகு எண்ணெயை, மனித மாண்பில் மிகவும் தரம் குறைந்த பல நாடுகளிடமிருந்து அமைதியாக இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றன. இப்படி இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய், சுற்றுச்சூழலுக்கும் காலநிலை மாற்றத்திற்கும் மிகவும் மோசமாக பாதிப்புக்களை உருவாக்க வல்லவை என்று கனடா தேசிய சக்திவள மையம் (NEB) பல தடவை அறிக்கை மூலம் தொடர்ந்து எச்சரித்து வருகிறது. சவூதி அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மிகவும் தரம் குறைந்த மசகு எண்ணெயை, கனடாவில் சுத்திகரிக்க முயற்சிக்கும்போது, காபனீரொக்சைடு எனப்படும் கரியமிலவாயுவையும் நச்சுப் புகையையும் ஏராளமாகவே இங்கு படரவிடுவதை எச்சரிக்கிறது இந்தத் துறையில் பாரிய ஆராய்சிகளை நடாத்திய மையத்தின் BOE Report (பி.ஓ.ஈ. ஆய்வறிக்கை). இருந்தும் என்ன, கனடாவில் உற்பத்தி செய்யப்படும் தரமான மசகு எண்ணெயை வாங்குவதால் வரக்கூடிய கனடாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியையும் சுற்றுச்சூழல் மேம்பாட்டையும் உதாசீனம் செய்து, ஒவ்வொரு மாகாணமும், தமக்கான இலாபத்தை மட்டுமே கருத்தில் எடுத்து காய் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது கனடிய மக்களுக்குச் சொல்லப்படாத பரம இரகசியம்.

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்படும் மிகவும் தரம்குறைந்த கச்சாய் எண்ணெய் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றி காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பில் அக்கறை கொண்டவர்கள் குரல் கொடுத்தாலும், அதைத் தட்டிக் கழிக்கும் மாகாண அரசுகள், அல்பேர்ட்டாவிலிருந்து தரைவழியாக எண்ணெய் கொண்டுவருகின்ற விடயத்தில் மட்டும், சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றி அக்கறையுடன் குரல் கொடுத்து வருகின்றன. காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் நாயகன் என்று தன்னைக் காட்டிக் கொள்ளும் புதிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கூட, மேற்கிலிருந்து கிழக்கிற்கு எண்ணெய் கொண்டுவரக்கூடிய திட்டங்களுக்கு பச்சைக்கொடி காட்ட மறுத்திருக்கிறார். அடுத்த தேர்தலில் கியூபெக், ஒன்ராரியோ உட்பட பல மாகாண மக்களின் ஆதரவைத் தக்கவைக்கும் தேவை காரணமாக, மாகாணங்களின் கோரிக்கைகளை நிராகரித்து, கனடாவின் ஒட்டுமொத்த பொருண்மியப் பலம் தரக்கூடிய எண்ணெய்வள உற்பத்தியையும், பரவலாக கனடாவின் அனைத்து மாகாணங்களிலும் கனடிய எண்ணெயை குறிப்பிட்ட அளவிற்காவது கொள்வனவு செய்ய வேண்டுமென்ற அழுத்தத்தையும் கொடுக்க மறுத்து வருவது வேதனை தருகின்ற விடயமே. ●

ekuruvi Night 2016. April 3, 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த பல வருடங்களாக எண்ணெய் உற்பத்தியில் சக்கை போடு போட்ட அல்பேர்ட்டா, திடீரென உற்பத்தியை நிறுத்தி, கிட்டத்தட்ட வங்குரோத்து நிலைக்கு வந்திருக்கும் நிலைமைக்கு, கனடிய மத்திய அரசும், கிழக்குப் பகுதிகளிலுள்ள மாகாண அரசுகளுமே பொறுப்பேற்க வேண்டும். கனடாவின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்கிற்கு பாரிய எண்ணெய்க்குழாய் தொடர்பை உருவாக்கும் 'எனேஜி ஈஸ்ட் பைப்லைன்' (EEP) என்றழைக்கப்படும் அல்பேர்ட்டா மற்றும் சஸ்கச்சுவான் மாகாணங்களிலிருந்து 4,600 கிலோமீற்றர் தூரத்திற்கான எண்ணெய்க் கால்வாய்த் திட்டத்தின் மூலம், ஒரு நாளுக்கு 1.1 மில்லியன் பரல்கள் மசகு எண்ணெயைக் கடத்த முடியும். இந்தத் திட்டத்தின்படி, அல்பேர்ட்டாவிலிருந்து சஸ்கச்சுவான், மனிற்றோபா ஊடாக, ஒன்ராரியோவின் கோன்வால் நகரை ஊடறுத்துச் செல்லும் இந்தக் கால்வாய், நியூ புறொன்ஸ்விக் வரை செல்லும். மொன்றியல், சென்.யோண்ஸ் போன்ற பல நகரங்களும் இதனால் பாரிய நன்மைகளை அடைய வாய்ப்புண்டு. நீண்ட காலத்தில் கனடாவிற்கு மிகவும் பயன்தரக்கூடிய இந்தத் திட்டத்தை, கனடிய மத்திய அரசு திட்டமிட்டே பின்தள்ளி வருகிறது. நீண்டகாலம் ஆட்சியிலிருந்த கன்சவ்வேட்டிவ் கட்சி, மாகாணங்களுடனான தனது உறவைப் பகைத்து வாக்குகளையும் செல்வாக்கையும் இழக்க விரும்பாமல், இந்த எண்ணெய்க் கால்வாய்த் திட்டங்களை இழுத்தடித்து வந்தது. இப்போது ஆட்சிக்கு வந்துள்ள லிபரல் அரசும், ஆரம்பத்திலேயே இதற்கு முழுக்குப்போட்டுவிட முயற்சித்து வருகிறது. இந்தத் திட்டத்தை தமது அரசு ஆதரிக்க வாய்ப்பில்லை என்ற கோதாவில் பிரதமர் ரூடோ கருத்துக் கூறியிருக்கிறார்.

இது தவிர, கனடாவின் மேற்குப் பகுதியிலிருந்து அமெரிக்காவின் முக்கிய சில நகரங்களுக்குச் செல்லக்கூடிய கீ—ஸ்ரோன் பைப்லைன் திட்டத்திற்கும் (Keystone XL Pipeline Project) முன்னைய கன்சவ்வேட்டிவ் அரசால் அமெரிக்காவை மசிய வைக்க முடியவில்லை. தற்போதைய ரூடோ தலைமையிலான லிபரல் அரசும் அந்தத் திட்டம் குறித்து பேச்சுக்களை நடாத்த முடியாது என்ற கருத்தைக் கூறியுள்ளது. அல்பேர்ட்டாவிலிருந்து இலினொய்ஸ், ரெக்சாஸ், ஒக்லோஹொமா போன்ற பல பகுதிகளுக்கும் செல்லத்தக்க இருவெறு திட்டங்களும் ஒபாமா அரசால் நிராகரிக்கப்பட்டு புழுதிபடிந்து கிடப்பிலுள்ளன.

மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி கண்டதன் காரணமாகவும், கனடிய மாகாணங்கள் வெளிநாடுகளிலிருந்து குறைந்த விலையில் தரம் குறைந்த மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதன் காரணமாகவும், கனடாவின் எண்ணெய் உற்பத்தி ஒட்டுமொத்தச் சரிவைச் சந்தித்துள்ளது. அல்பேர்ட்டா மாகாணம், வங்குரோத்து நிலைக்குச் செல்லும் நிலையில் இருக்கிறது. பல மில்லியன் பணத்தொகையை நீண்டகாலக் கடனாக அல்பேர்ட்டாவுக்குக் கொடுக்க முன்வரும் மத்திய அரசு, கனடாவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் வலுவாக்குவதற்கு வாய்ப்புள்ள எண்ணெய்க் கால்வாய்த் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பற்றி விவாதிப்பதற்குக்கூட துறைசார் அறிஞர் குழுவை நியமிக்க மறுக்கிறது.

கனடாவின் மேற்குப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மசகு எண்ணெயை அதே நாட்டின் கிழக்குப் பகுதிக்குக் கொண்டுவருவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு நேர்கிறது என்று சத்தமிடுகின்ற அரசியல்வாதிகள், மனித உரிமை மீறலும் பெண்ணுரிமை மீறலும் சமயச் சட்டங்கள் என்ற போர்வையில் பல்வேறு அத்துமீறல்களும் நிறைந்த மனிதத்தை மதிக்காத நாடுகளிடமிருந்து, தரக்குறைவான மசகு எண்ணெயை மலிவுவிலையில் பெற்று, கனடாவிற்குள் சுத்திகரிக்கும் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபடுதலைப் பற்றிக் கதைக்க மறுக்கிறார்கள். தரக்குறைவான வெளிநாட்டு எண்ணெயால் வரக்கூடிய அபாயங்களைப் பின்னே மறைத்துவைத்து, வெளியே தங்களை சுத்தமான உலக சமாதானப் பிரியர்களாகவும், காலநிலை மாற்றத்தின் தலைமை செயற்பாட்டாளர்களாகவும், பசுமைப் புரட்சி செய்யும் காவலர்களாகவும் காட்டுவது எந்தவகையில் ஜனநாயகம் என்பதை, பொதுமக்கள் தங்களது அரசியல் பிரதிநிதிகளிடம் கேட்கவேண்டிய காலம் வந்துவிட்டது. மக்களால் மக்களுக்காக மக்களே ஆளும் ஜனநாயகம் என்பது இதுதானா என்பதை எமது அரசியல்வாதிகள் மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம். ●









**Bright Vision Financial நிறுவனத்தின் ஆண்டுவிழா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**




# உங்கள் வசதிக்கு ஏற்ற, அதிபயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும், உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு, வரிக் கழிவு பெற்ற சேமிப்பு, ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

**Term Life Insurance**

| Age | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 18 | 15 | 19 | 15 | 21 | 17 | 28 | 22 | 43 | 31 | 67 | 48 |
| 500K | T20 | 36 | 25 | 37 | 27 | 40 | 30 | 56 | 40 | 88 | 60 | 148 | 97 |
| 1 Mill | T20 | 68 | 45 | 68 | 48 | 75 | 53 | 106 | 75 | 171 | 115 | 288 | 188 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1 Mill | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance- 100% Money Back** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 70 | 65 | 90 | 85 | 120 | 113 | 177 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 123 | 112 | 157 | 145 | 212 | 205 | 321 | 265 |

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக்கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

- Disability Insurance
- Final Expense Insurance
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

**முதலீட்டுத் திட்டங்கள்**

**• RRSP • RESP • TFSA**



RBC Insurance · Manulife · Industrial Alliance · LaCapitale Financial Group · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


ekuruvi Night 2016. April 3, 2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் ரவீந்திரன்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம். அவர்கள் ஒரு முகவரியற்ற மக்கள் கூட்டம். உலக வரைபடத்தில் தங்களிற்கென்றொரு தேசம் வேண்டும் என்ற பெரும் கனவோடு அலைந்து திரிகிறார்கள். ஒரு நாள் ஒரு சூதாட்ட விடுதியில் தியோடர் கெர்சில் (Theodor Herzl) என்பவரின் தலைமையில் சில இளைஞர்கள் ஒரு இரகசிய திட்டம் தீட்டுகிறார்கள்.

யூத தேசிய நிதி (Jewish National Fund) என்ற ஒரு நிதிக்கட்டமைப்பை உருவாக்குகிறார்கள். பலஸ்தீன பகுதிகளில் உள்ள வரண்ட நிலங்களை விலைக்கு வாங்குகிறார்கள்.

யூத தேசிய நிதியம் பாலைவன பூமியில் *250 மில்லியன் மரங்கள், 180 அணைகள், 1000 பசுமைப் பூங்காக்கள்* என்ற பெரும் இலக்குநோக்கி வேகமாக



# தமிழீழம் சாத்தியமில்லை ஏன்?

இயங்குகிறது. பாலைவனத் தேசம் பசுமைத் தேசமாக மாறுகிறது.

சிறிது காலத்தில் வாங்கிய நிலம் எல்லாவற்றையும் இணைக்கிறார்கள். அதுவரை அலட்சியமாக இருந்த பலஸ்தீனியர்களுக்கு அப்போதுதான் புரிகிறது தம் தேசத்தின் நெஞ்சைப்பிளந்து யூதர்கள் தமக்கென்றொரு தேசம் அமைக்கிறார்கள் என்று.

தொடர்ந்து மோதல்களும் கொலைகளும் நடக்கின்றன. கிட்லர் போன்றவர்களின் கோபத்திற்கும் ஆளாகி ஆறு மில்லியனிற்கும் அதிகமானவர்களையும் பலிகொடுக்கிறார்கள்.

இத்தனைக்கு மத்தியிலும் இலக்கு தவறாமல் தொடர்ந்து நடக்கிறார்கள். உலக வரைபடத்தில் 1948முதல்இஸ்ரேல்என்றொருதேசம் அடையாளப்படுத்தப்படுகிறது. முகவரியற்ற யூத மக்களிற்கு இஸ்ரேல் என்றொரு முகவரி வருகிறது.

இப்படி கற்பனை செய்வதற்குக்கூட கடினமான விடயத்தை சாத்தியமாக்கியதற்கு அடிப்படையானது என்னவென்று உலகமே வியந்து பார்க்கிறது.

ஆனால் பதிலோ மிகவும் இலகுவானது. அவர்களின் அறிவு. அவர்களின் நம்பிக்கை எண்ணம். அவர்களின் எண்ணம்தான் இத்தனைக்கும் அடிப்படை. அறிவால் பணத்தையும், பணத்தாலும் அறிவாலும் நிலத்தையும் வென்றெடுத்தார்கள்.

நீ என்னவாக வரவேண்டும் என்ன செய்ய வேண்டும் என்பதை உன் எண்ணம்தான் தீர்மானிக்கின்றது. எண்ணங்களே செயல்வடிவம் பெறுகின்றன. இன்னும் சொல்லப்போனால் எண்ணங்களே செயல்களை பிறப்பிக்கும் பிரம்மாக்கள் என்கிறார்கள் மகான்கள்.

இந்த எண்ணங்களை ஒரு தாய் கருவுற்றிருக்கும்போதே ஒவ்வொரு யூதனிற்குள்ளும் விதைக்கும் வித்தைதான் எல்லா அசாத்தியங்களையும் அவர்களுக்குச் சாத்தியமாக்கி வருகிறது. உலகில் அதிகப்படியான அறிவியலாளர்களாகவும் வல்லுனர்களாகவும் வசதி படைத்தவர்களாகவும் அவர்களை ஆக்கிவருகிறது.

தாயின் கருவில் இருக்கும் குழந்தை இசையை ரசிக்கின்றது. இசைகேட்டு அசைகின்றது. என்பதையெல்லாம் விஞ்ஞானம் நிரூபித்தது அண்மையில்தான்.

ஆனால் யூதர்கள் இதை எப்போதோ அறிந்து வைத்திருந்திருக்கிறார்கள். குழந்தை கருவில் இருக்கும் போதே போதனை தொடங்கிவிடுகிறார்கள். தம் பிள்ளைகள் அறிவிற் சிறந்து விளங்க ஆரோக்கிய உணவு, சிறந்த நூல்கள் வாசித்தல், கணிதப் புதிர் அவிழ்த்தல், நல் இசை கேட்டல் என பல வழிமுறைகளை கரு உண்டான காலம் முதல் பின்பற்றுகிறார்கள். தம் எண்ணத்தையும் இலக்கையும் கருவில் வைத்தே குழந்தைக்கு விதைத்துவிடுகிறார்கள்.

அது பிறந்து வளர்ந்து அவற்றைக் காவிச்செல்கின்றது. அத்தகைய எண்ணங்கள்தான் பரம்பரை பரம்பரையாக உயிர்க்கலங்களில் கடத்தப்பட்டு அவர்களை ஒரு உயிர்ப்புள்ள இனமாக அசாத்தியப்பிறவிகளாக மீண்டும் மீண்டும் பிரசவித்துக் கொண்டிருக்கிறது.

இனி இவ்வளவும் எழுதக் காரணமான விடயத்திற்கு வருகிறேன்.

கடந்த வாரம் ஒரு பொழுதுபோக்கு வானொலியில் நீங்கள் ஒரு நாள் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக இருந்தால் என்ன செய்வீர்கள் என்றொரு கேள்வி கேட்கப்படுகின்றது.

வழக்கமாக திரையிசைப் பாடல்களை விரும்பிக்கேட்கும் நேயர்கள் பலரின் பதில் தமிழீழத்தை அங்கீகரிப்பேன் என்பது.

அதேபோல் கடந்த மாதம் கிளிநொச்சியில் நடந்த விளையாட்டுப் போட்டியில் இல்லம் ஒன்றின் நுழைவாயில் அலங்காரம் தமிழீழமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அடுத்தவாரம் அதே மஞ்சள் நிற தமிழீழ அலங்காரம் மட்டக்களப்பில் நடந்த மெய்வல்லுனர் போட்டி இல்ல அலங்காரத்திலும் இடம் பெற்றிருக்கின்றது.

சம்பவங்கள் எழுமாற்றானவை. மிகச்சிறியவை. ஆனால் தமிழீழம் சாத்தியம் இல்லை என்ற கருத்தை ஒரு புறமிருந்து பரப்ப ஆரம்பித்திருக்கும் நேரத்தில் தன்பாட்டில் இவ்வாறான சம்பவங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகஏன்நடக்கின்றன? எவ்வாறு நடக்கின்றன என்ற கேள்விகளோடு ஒரு இளைய தலைமுறைப் பிள்ளையோடு பேச ஆரம்பித்திருந்தேன். அந்தப் பிள்ளை பேசிய பதில்தான் எனக்கு ஆச்சரியத்தையும் இந்தப் பதிவை எழுதவும் தூண்டியது.

அவர் ஈழத்தில் தினசரி குண்டுத் தாக்குதலுக்குள்ளாகும் பதுங்குகுழிப் பள்ளி வாழ்க்கையில் தன் கல்வியை ஆரம்பித்து புலம்பெயர் தேசத்துப் பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டமேற்படிப்பை முடித்திருக்கும் இளையவர்.

வெளித்தோற்றத்துக்கு ஒவ்வொருவரும் வித்தியாசமாக தோன்றினாலும் வேறு எதை எதையோபேசினாலும்தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்பது நிர்ணயிக்கப்பட்டுவிட்ட இலக்கு. அது அவர்களின் மரபணுக்களில் எழுதப்பட்டு ஆழ்மனதில் நிலைகொண்டிருக்கிறது.

பிரிந்து செல்லுங்கள் என மலேசியத் தலைமை அமைச்சர் சிங்கப்பூரைத் தனி நாடாக்கியது போலவோ, ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்புக்கு சந்தர்ப்பம் கிடைத்ததுபோலவோ ஏதாவது ஒரு சந்தர்ப்பம் என்றோ ஒரு நாள் வரும் அல்லது நாம் உருவாக்குவோம். அதை எவ்வாறு உருவாக்கலாம் என்ற எண்ணங்கள் பற்றியெல்லாம் பேசினார்.

வலிமையான கோரிக்கையொன்று முறையாக விதைக்கப் பட்டுவிட்டால் அது தன் இலக்கை அடையும் வரை யாராலும் அடக்கி அழித்துவிட முடியாது. அந்த விதைகள் தான் ஈழமண்ணில் நாம் இத்தனை நாளும் விதைத்தவை. அவை எந்த அசாத்திய சூழ்நிலையிலும் உயிர்வாழும் என்பதை வெளிப்படுத்தும் செயற்பாடுகளே இச்சம்பவங்கள் என்றார்.

ஆனால் அதற்கு முதல் எங்களை தோற்கடித்துவிடவேண்டும் என்பது தான்தமிழீழம்சாத்தியமில்லைஎன்ற கருத்தை பரப்ப நினைப்பவர்களின் திட்டம். அதற்கான ஒரே வழி நாம் தோற்றுவிட்டோம் என்று எங்களையே ஒப்புக்கொள்ள வைப்பது. தமிழீழம் சாத்தியமில்லை என்று எங்களுக்கு நாங்களே சொல்லிக்கொள்ள வைப்பது.

இன்னும் சொல்லப்போனால் எங்களை தோற்கடிப்பதற்கான ஒரே வழியும் இறுதி யுத்தமும் நாம் தோற்றுவிட்டோம் என்றும் தமிழீழம் சாத்தியமில்லை என்றும் கட்டமைத்து வளர்க்க முற்படும் உளவியல் போர்தான் இப்போது தீவிரப்படுத்த ஆரம்பிக்கப்படுகிறது என தொடர்ந்தார்.

அரசியல் அணுகுமுறைக்கு பல தெரிவுகள் இருக்கும். ஆண்டாண்டுகால வேட்கை என்பது எப்போதும் ஒரே தெரிவுதான். அரசியல் அணுகுமுறை அனேகமாக இறுதிக் களமுனையின் முடிவில் இருந்து ஆரம்பிப்பது. பல சமயங்களில் ஏதோ ஒரு நம்பிக்கையில் ஒரு பரீட்சார்த்த முயற்சியாவே தலைவர்களால் கைக்கொள்ளப்படும்.

ஆண்டாண்டு கால வேட்கை என்பது மக்களின் தொடர் முயற்சி. அது எத்தனை களமுனைகளில் வென்றாலும் தோற்றாலும் இறுதி இலட்சியத்தில் வெல்வது என்பது.

இன்றைய சூழலில் "தமிழீழம்" பேசுவது யதார்த்தத்துக்கு ஒத்துவராததாக இருக்கவோ சொல்லப்படவோ கூடும். அதற்காக பேசாமல் இருந்துவிடமுடியாது.

தமிழீழம்என்றபெருங்கனவுபற்றி மக்கள் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களால் உரத்துப் பேசமுடியாச் சூழல் இல்லாவிட்டாலும் யூதர்கள் போல் கருவிருக்கும் குழந்தைகளோடும் அருகிருக்கும் நண்பர் உறவினர்களோடும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

உங்களை ஒருவராலும் தோற்கடிக்க முடியாது உங்கள் நம்பிக்கையில்நீங்கள்தோற்கும்வரை. ஒருவன் நான் தோற்றுவிட்டேன் என்று ஒப்புக்கொள்ளாதவரை ஒவ்வொரு தோல்வியும் அவனுக்கு வெற்றிக்காண முதலீடுதான்.

காலம் மாறும். காட்சிகள் மாறும். தலைவர்கள் வந்து செல்வார்கள். எல்லாம் கடந்து போகும். கனவு மட்டும் எப்போதும் மாறாது.

"தமிழீழம்" அடக்குமுறையில் இருந்து விடுதலைபெறுவதற்கு மட்டுமல்ல ஐம்பதினாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் நிலைத்த இருப்பிற்கும் நீடித்த வளர்ச்சிக்கும் அத்தியாவசியமானது. தமிழீழ தேசம் என்றோ ஒரு நாள் ஏதோ ஒரு வழியில் தன் விடுதலையை அடைந்தே தீரும்." என்று பேசி முடித்தார்.

இனி நான் பேச என்ன இருக்கிறது? வாயடைத்துப் போய் நின்றேன். அந்தப் பிள்ளையின் முகத்தில் பெருங்கனவோடு திரிந்த தியோடர் கெர்சில் (Theodor Herzl) தான் எனக்குத் தெரிந்தார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi Night 2016. April 3,2016, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# அஜித் சபாரட்ணம் என்ற ஒரு தனிநபரின் முகத்திற்காகத் தான் பல லட்சம் அனுசரணையா?

1980களில் இலங்கையில் தோன்றிய இன மோதல்கள் சிறுபான்மை தமிழ் சமூகத்தை அவர்களின் சொந்த நிலத்தில் இருந்து வேர் பிடுங்கி வீசத் தொடங்கியது. யுத்தம் தின்ற நிலத்தில் இருந்து கலைந்து போகாத இலட்சியங்களை கனவுகளாக சுமந்தபடி வெளியேறிய தமிழினம் தாம் வந்து வீழ்ந்த மண்ணில் வீரியம் கொண்ட இனமாக எழுச்சி பெற்றது வரலாறு.

குறிப்பாக கடந்த 30 ஆண்டுகளில் கனேடிய மண்ணில் தமிழர்களின் சாதனைப் பயணம் இங்குள்ள ஏனைய பலம்பெயர் சமூகத்தின் வளர்ச்சி வேகத்தை விட பலமங்காக பெருகிப் பரவியதை காலம் எடுத்துக் கூறி நிற்கின்றது.

தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகாக இருவர் பாராளுமன்றம் சென்றுள்ளார்கள் பல்லாயிரக்கணக்கான துறைசார் நிபுணர்கள் உருவாகி வெற்றிகரமான மனிதர்களாக திகழ்கின்றார்கள், ஆயிரக்கணக்கான வர்த்தக முயற்சிகள், பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகள் என தமிழர்களின் சாதனைப் பயணம் பல்லின சமூகங்களால் பெருமையோடும் பொறாமையோடும் நோக்கப்படுகின்றது.

கனடாவில் தமிழர்களின் வர்த்தக முயற்சிகளின் வளர்ச்சி இவ்வாறு இருக்கும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்னரே உய்த்துணர்ந்தவர்கள் நீண்டகால நோக்கோடு ஆரம்பித்த கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் இந்த வருடம் வெள்ளி விழா காண்கின்றது.

25 ஆண்டுகள் பல தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பினால் வளர்ச்சி பெற்ற கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் முழு நிறைவு பெற்ற ஒன்றாக தனது அடுத்த கட்டப் பாச்சலுக்கு தன்னை தயார்ப் படுத்திக் கொள்கின்றது.

25 வருடங்களில் பல தலைவர்கள் பல நூறு செயற்குழு உறுபினர்களை கண்ட ஒரு ஒரு தமிழ் அமைப்பு என்றபெருமையும் , தனியே ஒரு இருவரின் தனிப்பட்ட தேவைகளுக்கு கட்டுப்படாது , ஒரு சமூகம் சார்ந்து கால ஓட்டத்தில் புது புது தலைவர்கள , உறுப்பினர்களின் தேர்ந்தெடுத்து வளர்ந்து வரும் அமைப்பாகும் .

25 வருடங்களில் நடத்திக் காட்டாத எதனை இவர்கள் இனி செய்யப் போகின்றார்கள் என்ற ஏளனப் பேச்சுக்களை ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு தமக்கான வேலைகளை பார்க்கத் தொடங்கியிருக்கின்றார்கள் அஜித் சபாரட்ணம் தலைமையிலான வர்த்தக சம்மேளத்தினர்;.

கனடாவில் வாழும் தமிழர்களுக்கான முழுமையான ஒரு அடையாளமாக கனேடிய வர்த்தக சம்மேளனத்தை அடையாளப்படுத்தக் கூடிய பல அம்சங்களையும் தனித்துவங்களையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை அதன் மீது விமர்சனங்களை முன்வைப்பர்கள் எப்போதும் கருத்திலும் கணக்கிலும் எடுப்பதில்லை.

கனேடிய வர்த்தக சம்மேளனத்தில் எவரும் உறுப்பினராக இணைய முடியும் என்பதே மிக மிக முக்கியமானது. கனடாவில் உள்ள தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த ஒரு அமைப்பிலும் இது இல்லை . சில தமிழ் அமைப்பில் உறுப்பினராக இணைவதற்கு விண்ணப்பித்த பலரும்வருடக்கணக்கில் அவர்களின் பதிலுக்காக காத்திருக்கின்றார்கள் என்பது மிகவும் கசப்பான உண்மை

இந்நிலையில் கனடாவில் கடந்த 25 ஆண்டுகளாக யாரும் இணையவும் தகுதியுள்ளவர்கள் வாக்களிப்பின் மூலம் தலைவர்களாகவும் பணிப்பாளர்களாகவும் வரக் கூடிய ஜனநாயகச் சூழலை கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் கொண்டிருப்பது மிக முக்கியமானது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

இன்று வர்த்தக சாவடி நிகழ்வுகளாகட்டும், ஆளும் கட்சி எதிர் கட்சி தலைவர்கள் கலந்து சிறப்பிக்கும் " பிரம்மாண்ட"இரவு விருந்துகளாகட்டும், வைத்தியசாலைகளுக்கான நிதி சேர் நடைபவனிகளாகட்டும் தமிழர்களுக்கு அறிமுகம் செய்த பெருமை கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்திற்கே சொந்தமானது.

தாங்கள் ஆரம்பித்த நிகழ்வுகளை ஏனையவர்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கும் போது அவர்களோடு முட்டி மோதி போட்டி போடாமல் வழிவிட்டு ஒதுங்கி நிற்பதை வர்த்தக சம்மேளனத்தின் தோல்வியாக நோக்குவதும் மிகத் தவறானது.

ஆனாலும் இன்னும் பலவிடயங்களை கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் தமிழ் சமூகத்திற்கு செய்திருக்கலாம் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என்ற போதிலும் அதில் இணைந்து கொள்ளாமல் வெளியில் இருந்தவாறு அதனை விமர்சிப்பதாலும் அது குறித்து குற்றம் குறை கண்டுபிடிப்பதாலும் எவருக்கும் நன்மைகள் ஏற்படாது என்பதையும் நாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்

ஊர் கூடி இழுக்க வேண்டிய தேர் இது என்பதால் இனியாவது அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசியம் என்கின்றார் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளத்தின் தலைவர் அஜித் சபாரட்ணம்.

ஆனால் அவரைச் சுற்றி உள்ள அவருக்கு விசுவாசமான ஒரு சிலரின் கருத்துக்களை மட்டுமே அஜித் கேட்டு நடக்கின்றார், என்ற விமர்சனம் குறித்து அவர் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

கனடாவில் வாழும் மூன்று இலடச்சத்திற்கும் அதிகமான தமிழர்களை பல்லின கலாசார சமூகத்தின் மத்தியில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு முக்கிய அமைப்பின் தலைவர் மற்றவர்களின் கருத்துகளுக்கும் செவிசாய்க்க வேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலிக்கின்றன.

அவ்வாறான குரல்களையும் மாற்றுச் சிந்தனைகளையும் அஜித் சபாரட்டணம் கவனத்தில் கொள்ள வேண்டியதும் அதில் உள்ள நன்மை தீமைகளை தீவிரமாக ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டியதும் பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவரின் பண்பாகும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

மாறாக தன்னை கேள்வி கேட்காத அல்லது தான் சொல்பவற்றிற்கு தலையை ஆட்டும் நலன் விரும்பிகளின் வட்டத்தை விட்டு அவர் வெளியில் வரவேண்டும்.



பலரது கருத்துக்களை உள்வாங்கி , தமிழ் வர்த்தகர்களை ஒன்றிணைக்கும் போது அஜித் காலத்தால் மறக்க முடியாத தலைவராக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் தன்னை நிலை நிறுத்தலாம்.

இதுவரை வர்தக சம்மேளனத்தின் தலைவர்களாக இருந்தவர்களுக்கும் அஜித் சபாரட்ணத்திற்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடாக அவரின் தனித்துவமான ஆளுமைத் திறன் கருதப்படுகின்றது இதனை சிலர் ஆளுமை என்றும் வேறு சிலர் சர்வாதிகாரப் போக்கு என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

இதில் எது சரி எது தவறு என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.

கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் அடுத்த கட்டப் பாச்சலுக்கு அஜித் போன்று முடிவெடுக்கும் அதிகாரங்களை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்காத அதே நேரம் தான் எடுக்கும் முடிவுகளுக்கான பொறுப்புகளை ஏற்கும் துணிச்சல் மிக்க ஒரு தலைவரே அவசியம் என்பதை அஜித் சபாரட்ணம் நிருபிக்க வேண்டிய தேவை அவர் முன் எழுந்துள்ளது.

பனிக்காலத்தை இடையிடையே ஞாபகப்படுத்தும் இலேசான பனிச்சாரல் அடிக்கும் மாலையில் சூடான தேனீருடன் அதைவிடச் சூடான கேள்விகளுடன் அஜித் சபாரட்டணத்தை சந்தித்தோம்.

**பல இலட்சங்களை செலவு செய்து இரண்டு நாட்கள் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களை கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்வது குறித்த விமர்சனங்களை தனக்கே உரிய பாணியில் அஜித் சபாரட்டணம் எதிர் கொண்டார்.**

பெருமளவு பணம் செலவிடப்படவுள்ளது என்பது உண்மை தான் ஆனால் அது ஏன் அவசியமாகின்றது என்ற கேள்வியும் அதனோடு இணைக்கப்பட வேண்டும். மூன்று தசாப்தங்களை தாண்டும் தமிழர்களின் கனேடிய இருப்பு ஏற்படுத்தியுள்ள சாதனைகளை கனடாவில் வாழும் மாற்றின சமூகங்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு தமிழர்களுக்கு கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு.

இந்த நாட்டில் தமிழர்கள் 25 ஆண்டுகளாக ஏற்படுத்திய வர்த்தக சாதனைகளை மற்றயை சமூகங்களுக்கு கொண்டு சேர்ப்பது இந்த சந்தரப்பத்தில் தமிழ் சமூகத்திற்கு இன்றியமையாதது.

மறுபுறம் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் ஒரு இலாப நோக்கமற்ற தொண்டரமைப்பு அல்ல அது போல் அது தமிழர்களின் அரசியலுக்காக குரல் கொடுக்கும் அரசியல் அமைப்பும் அல்ல. மாறாக தமிழர்களின் வர்த்தக சம்மேளனம். இது தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஏற்படுத்தியுள்ள வர்த்தக சாதனைகளை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கும் அதன் மூலமாக புதிய வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்தி தமிழர்களின் வர்த்தக முயற்சிகளை மேம்படுத்துவதற்கான ஒரு அமைப்பு. எனவே நாங்கள் எங்கள் வெற்றிகளின் பிரம்மாண்டத்தை உரிய வகையில் வெளிப்படுத்துவது மிக அவசியமானது.

25 வருடகால சாதனைப் பயணத்தை சில நூறு பேர் அமரும் சிறிய மண்டபத்தில் நடத்தி

ekuruvi Night 2016. April 3 2016. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$ave with Allstate

"Take Two" Advantage

Combine your home and auto and save up to 45%



Allstate. You're in good hands.

Call me today for a free Home and Auto insurance quote!

Harry Kulasegaram
Agent

416-826-4298

Pickering Agency
905-421-0005 ext. 5016
hkulasegaram@allstate.ca

முடித்துவிட்டுச் செல்வது பொருத்தமாக இருக்காது என்பதால் தான் இந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள நாம் தீர்மானித்தோம்.

மாற்றின சமூகங்களுக்கும் கனேடிய மையநிரோட்ட வர்த்தக முனைப்புகளுக்கு இணையாக நாம் வளர்ந்திருக்கின்றோம் என்பதை வெளிக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக இந்த வெள்ளி விழா நிகழ்வுகள் இருக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

எனவே இது தேவையான நேரத்தில் முன்னெடுக்கப்படும் அவசியமான ஒரு நிகழ்வு என்பதில் எமக்கு மாறுபட்ட சிந்தனைகள் எதுவும் இல்லை.

இது புதிய புதிய வாசல்களை தமிழ் வர்த்த முயற்சிகளுக்கும் வர்தகர்களுக்கும் ஏற்படுத்தி தரும் என்று நாங்கள் திடமாக நம்புகின்றோம்.

ஒரு வெற்றி பெற்ற இனமாக எங்களை அடையாளப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மீதும் அவர்களின் தொழில் முயற்சிகள் மீதும் மாற்றினத்தவர்கள் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பினை இந்த இரண்டு நாள் நிகழ்சிகள் மூலம் ஏற்படுத்த முடியும்.

இதில் கனடாவில் உள்ள பல்வேறு சமூகங்களின் வர்த்த முன்னோடிகள், பெரு ஊடக நிறுவனங்கள், அரசியல் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். அவர்கள் மூலமாக எங்கள் சமூகம் சார்ந்த ஒரு பெருமதிப்பு கட்டியெழுப்பப்படும்.இது எமது சமமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

எமது திறமைகளையும் தகமைகளையம் நாங்கள் தான் மற்றவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் அதற்கான ஒரு வாய்ப்பாக கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் வெள்ளி விழா நிகழ்வுகளை நான் பார்க்கின்றேன்

வெள்ளி விழா நிகழ்வுகளை பிரம்மாண்டமான முறையில் நடத்துவது குறித்து எமது பணிப்பாளர்களுக்கு முதல் தடவீவாயக தெளிவு படுத்திய போது அதற்கு எதிராக எவரும் குரல் எழுப்பவில்லை அல்லது அது குறித்து விமர்சிக்கவில்லை என்பதே எனது நோக்கம் சரியானது என்பதை எனக்கு உணர்த்தியது.

**ஆனாலும் பெருமெடுப்பிலான இந்த நிகழ்விற்கான அனுசரணையாளர்கள் அஜித் சபாரட்ணம் என்ற ஒரு தனிநபரின் முகத்திற்காகத் தான் அனுசரனை வழங்குகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன என்றோம்?**

ஆம் அது உண்மை தான் ஆனால் அஜித் சபாரட்ணம் என்ற தனி நபருக்காக அல்ல கனேடிய வர்த்தக சம்மேளத்தின் தலைவர் அஜித் சபாரட்டணத்திற்காகத் தான் அவர்கள் வழங்குகின்றார்கள்.

நான் கனேடியவர்த்தக சம்மேளனத்தினை பொறுப் பேற்ற போது பணிப்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வினை நடத்தினேன். அதில் மிக முக்கியமான கேள்வியாக கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளத்திற்கு உங்களின் பங்களிப்பு என்ன என்பதே அமைந்திருந்தது.

அதற்கு நியாயமான பதில் அளித்தவர்களும் முழுமையான அர்பணிப்போடு இயங்கத் தயாராக இருப்பவர்களும் தான் இந்தப் பயணத்தில் என்னோடு இணைந்திருக்கின்றார்கள். கனேடிய வர்த்தக சம்மேளனம் எனக்கு என்ன செய்யும் என்று கேட்பவர்களுக்கான இடம் இங்கு இல்லாமல் போயுள்ளது. அவர்கள்தான் இந்த குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றவர்களில் முக்கியமானவர்கள் என்று எனக்கு தெரியும்.

என்னைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் இருந்த மிகப் பெரிய சவால் வர்த்தக சம்மேளனத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வதற்காக தன்னலமற்று அர்ப்பணிப்புடன் செயல்படக் கூடிய அணி ஒன்றை உருவாக்குவதாகவே இருந்தது. ஆனால் நான் எதிர்பார்த்ததை விட சிறப்பான ஆளுமை மிக்கவர்கள் கொண்ட ஒரு அணி என்னோடு இணைந்திருக்கின்றது. இதுவே பாதி வெற்றி என்று நான் எண்ணுகின்றேன்.

அதேசமயம் பணத்தால் மட்டுமே எதனையும் சாதித்துவிடலாம் என்று எண்ணுகின்றவர்களையும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் தள்ளியே வைத்திருக்கின்றது. இதற்கு ஒரு உதாரணத்தை சொல்லலாம் நாங்கள் இந்த நிகழ்வு குறித்த அறிவித்தலை வெளியிட்ட உடனே ஒரு நிறுவனம் ஒரு இலட்சம் டொலர்களுக்கு பிரதான அனுசரணை வழங்கப் போவதாக எங்களை அணுகினார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை இதுவரை வர்த்தக சம்மேளத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது தான் வர்த்தக சம்மேளளம் 25 ஆண்டுகளாக தமிழர்களின் தனித்துவம் மிக்க ஒரு அமைப்பாக விளங்குவதற்கு பிரதான காரணம் என்று நான் நினைக்கின்றேன்


பெரும் நிதிப் பங்களிப்பை வழங்கும் தனிநபர்களோ நிறுவனங்களோ அந்த அமைப்பை மொத்தமாக வளைத்துப் போட்டு தமது இலக்குகளை அடைவதற்கும் இலாபங்களை ஈட்டுவதற்கும் அதனை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கும் வர்த்தக சம்மேளனத்தில் அதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதை தான், இது எடுத்துக் காட்டுகின்றது.

கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் வெள்ளி விழா தொடர்பிலான எமது பதிவுகளில் இது தான் முதல் சந்திப்பு இன்னும் பல விடயங்களை இனி வரும் இதழ்களில் விரிவாக இகுருவி பேசும் ! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 APRIL

# ekuruvi NIGHT 2016

BIZTHA MARKETING EXCELLENCE AWARD



RE/MAX THIPAN RAJ
NAVA LAW PROFESSIONAL CORPORATION
THE GUARDIAN GINI ANNARASA
iNFORCE LIFe Financial Service Inc.
AJAX NS DENTAL
COMPUTEK COLLEGE BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Allstate. You're in good hands. HARRY KULASEGARAM
416-272-8543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org